Registered as a News Paper in Sri lanka

விலை: ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU




முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஆடி 05 ஞாயிற்றுக்கிழமை (21.07.2013) பக்கங்கள் 20 ஓசை – 294


காத்திருக்கும் பேரழிவு (05)


அரை இறுதிக்கு (08)


திசைகாட்டி (10)


தடம் பதித்த வாழ்வு (11)


ஆசை (18)

# வடக்கு தேர்தலைக் கண்காணிக்க 4500 கண்காணிப்பாளர்கள் நியமிப்பு

## ஜப்பானிய அரசு நிதியுதவி

(கொழும்பு)

வடக்கு மாகாணத் தேர்தலின் போது கண்காணிப்பு நடவடிக்கைகளில் 4500 கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

மேற்படி 4500 கண்காணிப்பாளர்களுக்கும் விசேட பயிற்சி வழங்கப்படவுள்ளது. இப்பயிற்சி வழங்கும் செயற்திட்டத்துக்கு ஜப்பானிய அரசு நிதியுதவி வழங்க முன்வந்துள்ளது.

அதேவேளை ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து தேர்தல் கண்காணிப்பாளர்களை கொண்டு வருமாறு தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

தேர்தல் கண்காணிப்பாளர்கள் என்ற வகையில் அவர்களுக்கு உலகளாவிய அங்கீகாரம் உள்ளதால் அவர்கள் கருத்துக்கு கூடிய நம்பகத்தன்மை இருக்கும். இதை நாம் அரசாங்கத்துக்கு தெரியப்படுத்தியுள்ளோம் என்று பவ்ரல் அமைப்பின் தலைவர் ஜெஸிமா இஸ்மெயில் தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணையாளருடன் நான் தொடர்புகொண்ட போது ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் வரும் சாத்தியம் இன்னும் உள்ளது என்றும். ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைக்கு எதிராக வாக்களித்த நாடுகளிலிருந்து கண்காணிப்பாளர்களை அழைப்பதை தான் நிராகரிக்கவில்லையென பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் றோகன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

சுதந்திர தேர்தல்களுக்கான ஆசிய வலையமைப்பைச் சேர்ந்த நேபாளம், பங்களாதேஷ், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளிலிருந்து தேர்தல்கள் கண்காணிப்பாளர்கள் 10 பேரை பவ்ரல் அழைக்கவுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். ஜனநாயகத்தை பலப்படுத்துவதற்கு

(19) ஆம் பக்கம் பார்க்க

## யாழில் வெடிபொருள் மீட்பு

யாழ்.பரமேஸ்வராச் சந்திப் பகுதியில் நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த வெடிபொருட்கள் கோப்பாய் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று இந்தப் பகுதியில் வீதியோரமாக காணியொன்றிற்கு முன்பாக குழியொன்று வெட்டப்பட்ட சமயம் அதில் வெற்றுப்பாய் ஒன்றுக்குள் புதைக்கப்பட்டிருந்த ஓலை உட்பட வெடிபொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டு கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டதனை அடுத்து ஸ்தலத்திற்கு விரைந்த பொலிஸாரால் இவ்வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# இளைஞர் யுவதிகளுக்கு உயர்தர தொழிற்பயிற்சி

## சான்றிதழ் வழங்கி ஊக்குவிப்பு



(வவுனியா)

வவுனியாவில் அமைந்துள்ள வாணிஅருணோதய தொழிற் பயிற்சி நிலையத்தில் கணணி மற்றும் ஆங்கிலப் பயிற்சி நெறிகளை நிறைவுசெய்தவர்களுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தார். மேற்படி நிகழ்வு நிலையவளாகத்தில் அதன் இயக்குநர் த[illegible]ன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது வாணி அருணோதய மொழிப் பயிற்சி நிலையத்தில் ஆறுமாத கால ஆங்கிலம் மற்றும் கணணிப் பயிற்சி நெறிகளை நிறைவு செய்தவர்களுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் கையொப்பம் இடப்பட்ட சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினது வழிகாட்டலுக்கு அமைவாக பனை தென்னை வள

(19) ஆம் பக்கம் பார்க்க

# யாழில் உட்கட்டுமான அபிவிருத்தி வரவு - செலவுத் திட்ட நிதியில் ஒதுக்கீடு

## ஒரு கோடியே 15 இலட்சம் பகிர்ந்தளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் பல்வேறு உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டங்களுக்காக ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர்களால் இவ்வாண்டுக்கான பன்முகப் படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் 11.5 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) தெரிவித்துள்ளார்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினதும், ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான முருகேசு சந்திரகுமார், சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) ஆகியோரின் நிதி ஒதுக்கீட்டில் சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள், சமய வழிபாட்டுத் தலங்கள் மற்றும் பல்வேறு பட்ட உட்கட்டுமான புனரமைப்பு பணிகளுக்காக இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் நெடுந்தீவு பிரதேச உட்

(19) ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணத்தில் தொழில் வங்கி உதயம்

(கொழும்பு)

வேலைவாய்ப்புக்காக காத்திருக்கும் வடமாகாண இளைஞர், யுவதியருக்கு வேலைவாய்ப்பை பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் சிகரம் கல்வி - தொழில் வழி காட்டிப் பிரிவால் தொழில் வங்கி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொழில் வங்கி அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று சிகரம் விரிவுரை மண்டபத்தில் சிகரம் நிறுவனத்தின் பணிப்பாளர் கோ.றுஷாங்கன் தலைமையில் நடைபெற்றது.

(19) ஆம் பக்கம் பார்க்க

# வடக்கின் களநிலைவரம் அமெரிக்க அதிகாரிகள் ஆராய்வு

யுத்தத்திற்கு பிந்திய நிலையின் வடக்கின் இன்றைய யதார்த்த நிலை எவ்வாறு உள்ளது என்று கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் ஆராய்ந்துள்ளனர். இதற்காக அதிகாரிகள் குழு ஒன்று வடக்கிற்கு சென்று திரும்பியுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தில் பணியாற்றும் அரசியல் விவகாரங்களுக்கான அதிகாரி மைக்கேல் இர்வின் தலைமையிலான இக்குழுவினர் அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தை தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியதாக

(19) ஆம் பக்கம் பார்க்க

# ஆலயத்தை துவம்சம் செய்தது கனரக வாகனம்



மின்சார சபைக்குச் சொந்தமான கனரக வாகனம் ஒன்று பழைய முறிகண்டிப் பகுதியில் விபத்துக்குள்ளானதில் பழைய முறுகண்டிப் பிள்ளையார் ஆலயம் முற்றாகச் சேதமடைந்துள்ளதுடன், அவ்வாகனத்தின் உதவியாளரும் காயமடைந்துள்ளார். அனுராதபுரத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி மின்மாற்றிகளை ஏற்றிய

(19) ஆம் பக்கம் பார்க்க

# திருச்சபையின் காணி சுவீகரிப்பு; காணி அமைச்சரிடம் விளக்கம் கோரல்

## யாழ்.ஆயரின் வழக்கில் சூடு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு மற்றும் வலிகாமம் கிழக்கு ஆகிய பிரதேசங்களிலிருந்து அரசாங்கத்தினால் பலவந்தமாக கையேற்கப்பட்டுள்ள கத்தோலிக்க திருச்சபைக்கு சொந்தமான 55 துண்டு காணிகள் தொடர்பில் யாழ். ஆயர் அதி வண. தோமஸ் சௌந்திரநாயகத்தினால் தொடரப்பட்ட மனுவை பரிசீலித்த கொழும்பு மேல் நீதிமன்றம், காணி அபகரிப்புக்கான காரணத்தை நீதிமன்றத்தில் விளக்குமாறு காணி அமைச்சர் மற்றும் நில அளவையாளர் உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

மேற்படி பிரதேசங்களில் கத்தோலிக்க திருச்சபைக்கு சொந்தமான 55 துண்டுக் காணிகள் பலவந்தமாக கையேற் கப்பட்டிருக்கின்றமை தொடர்பில் யாழ். ஆயரினால் கடந்த சில தினங்களுக்கு முன்பதாக கொழும்பு மேல்நீதிமன்றத்தில் மனு ஒன்று .

(19) ஆம் பக்கம் பார்க்க

# கௌதாரி முனை வீதி புனரமைப்பு எப்போது?

## ஏக்கத்துடன் காத்திருக்கும் மக்கள்

பூநகரியில் இருந்து கௌதாரி முனை வரை செல்லும் 15 கிலோமீற்றர் நீளமான கௌதாரிமுனை வீதி 30 வருடகாலமாக பூர்வாங்க திருத்த வேலைகள் செய்யப்படாத நிலையில் குண்டும் குழியுமாக மணலும் கல்லுமாக மக்கள் பயணிக்க முடியாத நிலையில உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வீதியால் வெட்டுக்காடு, கௌதாரிமுனை, மல்லித்தாழை, விநாசியோடை, கல்முனை ஆகிய கிராமங்களைச் சேர்ந்தவர்கள் யாழ்ப்பாணம் வருவதற்காகவும் பூநகரிக்கு செல்வதற்காகவும் பயன்படுத்தும் பிரதான வீதி இதுவாகும்.

விநாசியோடைப் பகுதியில் இயங்குகின்ற ஒரு பாடசாலையில் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வருவதில் தாம் பெரும் சிரமப்படுவதாகவும் அந்தப் பகுதியில் சேவையில் ஈடுபடும் ஒரே ஒரு அரச பேருந்து வீதி சீர்கேடு காரணமாக நீண்டநேரம் தாமதமாகி வருவதாகவும் அடிக்கடி பழுதடைவதாகவும் தமது கடமைக்கு செல்வதில் துன்பத்தை அனுபவிப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

சேவையில் ஈடுபடும் அரச பேருந்து, வீதி சீரில்லாத நிலையில் காலை புறப்பட்டு கிளிநொச்சி வரை சென்று மாலையில் திரும்பவும் இந்தப் பகுதிக்கு வந்து சேருகின்றது.

வீதி திருத்தம் செய்யப்படுமிடத்து மக்கள் இலகுவாக பேருந்து சேவையை பெற்றுக் கொள்ள முடியும் என பேருந்துச் சாரதி தெரிவிக்கின்றார்.

நீண்டகாலமாகத் திருத்தப்படாது இருந்த இந்த வீதியை திருத்தம் செய்வதற்கும் மக்கள் இலகுவாக போக்குவரத்து செய்வதற்கும் உரிய நடவடிக்கையை வீதி அபிவிருத்தி அதிகார சபை செய்ய வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(112)

## "சாமஸ்ரீ தேசகீர்த்தி" விருது



யாழ்ப்பாணம் முஸ்லிம் கல்லூரி வீதியில் வசிக்கும் நஹீம்கள் சுவர்க்கஹறான் அகில இன நல்லுறவு ஒன்றியத்தினால் கடந்த வாரம் இரத்தினபுரி மாநகர சபை மண்டபத்தில் "சாமஸ்ரீதேச கீர்த்தி" விருதை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் முத்தலிப் பாவா பாறுக் வழங்கி கௌரவித்தார்.

ந.சுவர்ககஹறான், யாழ்.கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் பொதுச் செயலாளரும் சமத்துவத்திற்கான யாழ்.சிவில் அமைப்பின் தலைவர் மட்டுமல்லாது சிறந்த சமூக சேவையாளருமாவார். (105)



யாழ்.ஜெய்ப்பூர் நிறுவனத்தின் 26 ஆவது ஆண்டு விழா நிகழ்வுகள் நேற்று அந்நிறுவனத்தின் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் ஜெய்ப்பூர் நிறுவனத்தின் தலைவர் வைத்தியர் திருமதி கணேசமூர்த்தி உரையாற்றுவதையும் நிகழ்வில் நடைபெற்ற கலைநிகழ்வையும் காணலாம். (பா)

## மஹோற்சவம்

நிகழும் விஜய வருஷம் ஆடிமாதம் 15 ஆம் நாள் 31.07.2013 புதன்கிழமை வருடாந்த தேவி மஹோற்சவம் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும்.

08.08.2013 வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு வசந்த மண்டப பூசை ஆரம்பமாகி 9.30 மணிக்கு அம்பாள சித்திரதேர் ஏறி வீதியுலா வருவார். மறுநாள் வெள்ளிக் கிழமை காலை 7.00 மணிக்கு பூரகர்மம் (ருதுசாந்தி) அம்பாளுக்கு நடைபெற்று 10.00 மணிக்கு வசந்த மண்டப பூசை நடைபெற்று தீர்த்தோற்சவத்துடன நடைபெற்று இரவு கொடியிறக்கமும் நிகழும்.

திருவிழா நடைபெறும் பத்து தினங்களும் மாணிக்கவாசகர் அன்னதான மண்டபத்தில் அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுவதுடன் ஆலயத்துக்கு சென்றுவர இ.போ.ச. சபையினால போக்குவரத்துச் சேவையும் நடைபெறும். (50)

## தேர்த் திருவிழா நாளை

(காரைநகர்)

காரைநகர் மேற்கு வீதியில் அமைந்துள்ள அரசடிக்காடு கதிர்வேலாயுத முருகப் பெருமானுக்கு வருடாந்த உற்சவம் நடைபெற்று பதின் நான்காவது தினமான நாளை திங்கட்கிழமை காலை முருகப் பெருமானுக்கு அபிஷேகம, பூசைகள் நடைபெற்று கதிர் வேலாயுத முருகப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதராக தேர் ஏறி வீதியுலா வருவார்.

மறுநாள் காலை ஆலய முன்றலில் கிடங்கில் தீமூட்டி வீதி வழியாக ஐயனார் கோவிலடி தீர்த்தக் கரையில் தீர்த்தம் ஆட முருகப்பெருமான் சென்று தீர்த்தமாடிய பின் பிற்பகல் வீதிவழியாக உலா வந்து பிற்பகல் ஆலய முன்றலில் முருக பக்தர்கள் பக்திபூர்வமாக தீக்குளிப்பு நிகழ்வு இடம்பெறும். (50)

## பொதுக் கூட்டம்

(வடமராட்சி)

புலோலி தமிழ் இளைஞர் கழகத்தினதும் புற்றளைச் சனசமூக நிலையத்தினதும் வருடாந்த பொதுக்கூட்டம் நிலைய மண்டபத்தில் இன்று 21.07.2013 பி.ப. 3.00 மணிக்கு தலைவர் என்.இராசேந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

சகல உறுப்பினர்களையும் இப்பொதுக் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு நிலையச் செயலாளர் கேட்டுள்ளார். (01


# நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் 171 திகதி 2013.07.19 வர்ணம் நிலம்

வெற்றி இலக்கங்கள் ஆங்கில எழுத்து

19 20 26 33 I

பரிசுத் தொகை ரூபா. 14,401,480/- வெல்லப்படவில்லை

| | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 00 | - |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 14 | 700,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 200 | 200,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 331 | 331,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 9119 | 547,140/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4898 | 195,920/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 119616 | 2,392,320/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 17435 | 348,700/- |
| நான்கு இலக்கங்கள மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 14,401,480/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 4,715,080/- |

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்கொகை ரூபா. 14,635,660/-

2013.07.23ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும். நியத்த ஜய

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47

C/2950 web : www.dlb.lk


## அரச செலவில் சடலங்கள் அடக்கம்

யாழ்.போதனா வைத்திய சாலையில் சவச்சாலையில் அடையாளம் காணப்படாது வைக்கப்பட்டிருந்த சடலங்கள் அனைத்தும் நேற்று யாழ். வைத்திய சாலை நிர்வாகத்தினால் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கோம்பயன் மணல் மயாணத்தில் உள்ள யாழ்போதனா வைத்தியசாலைக் கான சடலங்களை அடக்கம் செய்யும் இடத்திலேயே நேற்று இந்தச் சடலங்கள் யாழ்.போதனா வைத்தியசாலை ஊழியர்களினால் அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

இந்தச் சடலங்கள் மூன்று மாதங்களாக அடக்கம் செய்யப்படாமல் வைத்தியசாலையின் சவச்சாலையில் வைக்கப்பட்டிருந்தமையால் அங்கு துர்நாற்றம் வீசியதுடன் ஊழியர்களும் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கியிருந்தமை ஏற்கனவே தினமுரசு சுட்டிக் காட்டி யிருந்தது தெரிந்ததே.


(பா)

## கிணற்றில் விழுந்து சிறுவன் பலி புத்தூர் கிழக்கில் சோகம்

புத்தூர் கிழக்கு சங்கடைப்பகுதியில் கிணற்றில் விழுந்து நான்கு வயது சிறுவன் ஒருவன் பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இச்சம்பவத்தில் தழிழ்நேசன் ரோகித் என்ற சிறுவனே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுக்காலை தாயார் மேற்படி சிறுவனை பக்கத்தில் உள்ள சகோதாரியார் வீட்டில் விட்டு விட்டு கூலி வேலைக்கு சென்றுள்ளார். காலையிருந்து தனது சித்தியார் வீட்டில் விளையாடிய சிறுவன் 11 மணிக்கு பின் காணவில்லை என்றும் சித்தியார் கடைக்கு சென்று திரும்பி வீடு வந்து சிறுவனை காணாது எங்கும் தேடியுள்ளார்.

பின்னர் கிணற்றை எட்டிப்பார்த்த போது சிறுவன் இறந்து நீரில் மிதப்பதைக் கண்டு அயலவர்களின் உதவியுடன் சடலத்தை மீட்டுள்ளனர். இச் சம்பவும் தொடர்பாக அச்சுவேலி பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் சடலத்தை அச்சுவேலிப் பிரதேச வைத்தியசாலையின் பிரேத அறையில் வைத்துள்ளனர். (15)



யாழ். ஹாட்லிக் கல்லூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவையொட்டி அண்மையில் இடம்பெற்ற இறுதி நாள் நிகழ்வான நூல் வெளியீடும் பரிசளிப்பு விழாவின் பதிவுகள்.... (01)

# உதவிக்கல்விப் பணிப்பாளர் பதவி அணியினை சமயபாடங்களுக்கும் உருவாக்க கோரி மனு கையளிப்பு

வடமாகாணத்தின் 12 கல்வி வலயங்களிற்கும் இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ சமயங்களிற்கான சமய பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவியணியினை உருவாக்குமாறு கோரி, வடமாகாண கல்வி பணபாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கைக் கடிதம் கையளிக்கப்பட்டுள்ளதாக வலிகாம வலய ஆசிரிய ஆலோசகர் என்.பி ஸ்ரீந்திரன் அறிவித்துள்ளார்.

வடமாகாணத்தில் 12 கல்வி வலய சமய பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களும் கையொப்பமிட்டு கடந்த 5ஆம் திகதி கையளிக்கப்பட்டுள்ள அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தென்னிலங்கை மத்திய மாகாணம் ஆகிய பிரதேசங்களிலுள்ள கல்வி வலயங்களில் பௌத்த சமயத்திற்கு பௌத்த சமய பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் பதவி இருப்பது போல வடமாகாணத்தின் 12 கல்வி வலயங்களிற்கும் மேற்படி பதவியணியினை உருவாக்குமாறும் அதற்கான சட்ட அதிகாரம் மாகாணக்கல்வி அமைச்சுக்கு உண்டு எனவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இந்து சமய மாணவர்களையும் இந்து சமயம் கற்பிக்கும் ஆசிரியர்களையும் பெருந்தொகையாகக் கொண்டுள்ள வடமாகாணப் பாடசாலைகளிற்கு இந்து சமயப் பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் பதவி அவசியம் எனவும் இது பாட ரீதியான வேலைத்திட்டங்களை வலயங்கள் முன்னெடுக்க பேருதவியாக அமையும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறே கிறிஸ்தவ இஸ்லாம் பாடங்களைக் கற்கும் மாணவர்களும் கற்பிக்கும் ஆசிரியர்களும் வட மாகாணத்தில் குறிப்பிடத்தக்க அளவில் காணப்படுவதால் இப்பதவியணியினை உருவாக்குவது நன்மையானதாகவும் அமையும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாகாணகல்வி அமைச்சுக்கள் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி மேற்படி பதவியணியினை உருவாக்கலாம் என்பதற்கு மத்திய மாகாணக் கல்வி அமைச்சு முன்னுதாரணமாகவுள்ளது.

அம்மாகாணத்தில் இந்து சமய உதவிக்கல்விப்பணிப்பாளர் பதவி உருவாக்கப்பட்டுள்ளதெனவும் அதன் நியமனக்கடித்தப் பிரதி செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ள அறிக்கை கடிதத்துடன் சான்றாக இணைக்கப்பட்டுள்ளது எனவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி விடயங்களை உள்ளடக்கிய கோரிக்கைக் கடிதத்தைப் பெற்றுக்கொண்ட செயலாளர் இவ்விடயம் தொடர்பில் உரியவர்களுடன் கலந்துரையாடிச் சாதகமான முடிவினைத் தெரிவிப்பதாகத் தெரிவித்துள்ளார். (06)

## ரம்ழான் நற்சிந்தனை



மனிதர்களே! உங்களிடம் மகத்துவமிக்க ரம்ழான் மாதம் வந்துள்ளன. அது பரகத் செய்யப்பட்ட மாதமாகும். இம்மாத்தில் நோன்பு நோற்பதை அல்லாஹ் கடமையாக்கியுள்ளான். அத்துடன் பொறுமைக்குரிய மாதமுமாகும். பொறுமையின் பிரதிபலன் சுவர்க்கமாகும். இம் மாதத்தில் மனிதர்களுடன் அன்புடன் உறவாடி சுகதுக்கங்களில் பங்கு கொள்வது சிறப்பானதாகும் என நபி (ஸல்) கூறியுள்ளார்கள். (105)

# பேரீச்சம்பழங்கள் அன்பளிப்பு

புனிதமிகு ரம்ழான் மாதத்தில் நோன்பு நோற்பவர்களுக்காக சவுதி அரேபியா அரசாங்கம் இலங்கை அரசாங்கத்திற்கு பேரீச்சம்பழங்களை அன்பளிப்பு செய்துள்ளது.

இதனை முஸ்லிம் சமய கலாசார திணைக்களம் இலங்கையின் சகல பிரதேசங்களிலுமுள்ள பள்ளிவாசல்களுக்கு விநியோகித்துள்ளன.

யாழ்ப்பாணத்திற்கும் ஒரு தொகை பேரீச்சம்பழங்களை யாழ். கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனம் மூலம் யாழ்.பள்ளிவாசல்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

அதேநேரம் மக்கள் பணிமனை மீள்குடியேறிய குடும்பமாக வசிப்பவர்களுக்கு அந்தந்தப் பகுதி பள்ளிவாசல்கள் மூலம் பேரீச்சம்பழங்களை வழங்க நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வருடம் சகல பள்ளிவாசல்களுக்கும் பேரீச்சம்பழம் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (105)

# வரணி பொது நூலகத்தில் சிறுவர் பகுதிக்கு புதிய கட்டடம்

வரணி பொது நுலகத்திற்கு நவீன வசதிகள் கொண்ட சிறுவர் பகுதி அமைக்கும் பணி தொடர்பான ஆலோசனைக்கூட்டம் கடந்த வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் நூலக அபிவிருத்திக் குழுவின் செயளாளர் பொ.ரவீந்திரன் தலைமையில் நூலகவளாகத்தில் இடம்பெற்றது.

வரணி உப அலுவலக பொறுப்பதிகாரி கே.பாலகிருஸ்ணன், சாவகச்சேரி பிரதேசசபை செயளாளர் சி.தர்சினி, நூல உதவியாளர் வ.நாகேஸ்வரி , நூலக அபிவிருத்திக் குழுவின் உறுப்பினர்களும், நூலக வாசகர்கள் போன்றோர் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

வரணி பொது நூலகத்தில் சிறுவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் பகுதி இதுவரை காலமும் நவீன வசதிகள் எதுவும் இன்றி, புத்தகங்கள் பற்றாக் குறையால் முழுமை பெறாமலிருந்து வந்ததைத் தொடர்ந்து நூலக அபிவிருத்திக் குழுவின் பாரிய முயற்சியால் இவ் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்படடு சிறுவர் பகுதியில் காணபடும் குறைபாடுகள் பற்றிக் கலந்துரையாடப்பட்டது.

இதில் இச் சிறுவர் பகுதியை நவீன வசதி கொண்ட கட்டடம் அமைப்பது குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது. இதேவேளை இச் சிறுவர் பகுதிக்கு தேவையான 30,000 பெறுமதியான தளபாடங்களையும், 50,000 பெறுமதியான புத்தகங்களையும் வரணியூர் நலன் விரும்பியான தொழிலதிபர் எ.செல்லையா என்பவரால் ஏற்கனவே வழங்கப்பட்டது.

# மனோன்மணி அம்மன் ஆலய மஹோற்சவம்

கல்வியங்காடு இலங்கை நாயகி மனோன்மணி அம்மன் கோவிலின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத் துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பதினைந்து தினங்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 8 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து 10.00 மணிக்குத் தேர்த்திருவிழா இடம்பெறும்.

9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆடிப்பூரத் தினத்தன்று காலை 7.00 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி 9.15 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து பூரகர்மம் நடைபெற்று தீர்த்தோற்சவம் நடைபெறும்.

10 ஆம் திகதி சனிக்கிழமை மாலை அம்பாள் தெரு வீதி உலா வருவார். (137)

# நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம ஆலய ஆடிவேல் விழா புதன்கிழமை ஆரம்பம்

நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தான ஆடிவேல் விழா எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

24 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.00 மணிக்கு ஆடிவேல் ரதம் தேவஸ்தானத்திலிருந்து புறப்படவுள்ளது. சட்டநாதர் வீதி, பருத்தித்துறை வழியாக ஊர்வலமாக செல்லும் ஆடிவேல் ரதம் முற்பகல் 11.00 மணியளவில் வண்ணை வீர மாகாளி அம்மன் கோவிலை அடையும். பின்னர் அங்கிருந்து பிற்பகல் 2.00 மணிக்குப் புறப்பட்டு யாழ். நகரின் அனைத்து வீதிகளூடாகவும் சென்று மாலை 6.00 மணிக்கு வண்ணை சிவன் கோவிலை அடையும்

மறுநாள் 25 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு சிவன்கோவிலை விட்டுப் புறப்படும் வேல் ரதம் காங்கேசன்துறை வீதி வழியாக நண்பகல் 12.00 மணிக்கு வண்ணை நாச்சிமார் கோவிலை அடைந்து பின்னர் மாலை 4.00 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு மாலை 6.30 மணிக்கு கொக்குவில் மஞ்சவனம்பதி முருகன் ஆலயத்தைச் சென்றடையும்.

26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்திலிருநது காங்கேசன்துறை வீதி மற்றும் ஆடிய பாதம் வீதி வழியாக திருநெல்வேலி சந்தியை அடைந்து அரசடி சிவகாமசுந்தரி அம்மன் ஆலயததை 12.00 மணியளவில் சென்றடையும்.

மீண்டும் மாலை 4.30 மணிக்கு அம்மன் ஆலயத்திலிருந்து புறப்பட்டு ஆடியபாதம் வீதி வழியாக வந்து கல்வியங்காடு சந்தியை அடைந்து பருத்தித்துறை வீதி வழியாக பாலகதிர்காம தேவஸ்தானத்தை அடையும்.

ஆடிவேல் ரத ஊர்வலத்தில் இவ்வருடம் புதிதாக உருவார்க்கப்பட்ட அருணகிரிநாதரின் திருவுருவச் சிலை சேர்த்துக் கொள்ளப்படவுள்ளது. அருணகிரிநாதரின் வெள்ளோட்டம் பாலகதிர்காமத் தீர்த்தம் நடைபெறும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை நடைபெறவுள்ளது.

ரத ஊர்வலத்தின் ஆரம்பத்தில் வேலும், அதனையடுத்து அருணகிரிநாதர், ஜராவதம், இரும்பன், நலவீரர், தவில் நாதஸ்வரக் கலைஞாகளின் மேடை, நிறைவாக முருகன் எழுந்தருளி வரும் ரதம் என்பன இடம்பெறவுள்ளது. (137)

## கே.கே.எஸ். வீதியில் தொடர் விபத்து பயணத்தை மேற்கொள்ள மக்கள் அச்சம்

கே.கே.எஸ். வீதியில் தொடர்ந்து நடைபெற்று வரும் வீதி விபத்துக்களால் குறித்த வீதியில் பயணிப்பதற்கு மக்கள் அச்சம் கொள்ளும் நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக கொக்குவிலிற்கும் தெல்லிப்பளைக்கும் இடைப்பட்ட பகுதியில் தொடர்ந்து தினமும் இரண்டிற்கு மேற்பட்ட விபத்துக்களும் நடைபெற்ற வண்ணம் உள்ளன.

கே.கே.எஸ். வீதி முழுமையாக காப்பெற் இடபபட்ட நிலையில் வீதி ஓரங்கள் உரிய முறையில் செபபனிடப்பட்டு முடிவுறாத நிலையிலும், வடிகால்கள் முக்கியமான இடங்களில் அமைக்கப்பட்டு வருவதாலும் வீதிகளில் பாதுகாப்பற்ற முறையில் கற்கள் குவிக்கப்பட்டிருப்பதுமே இவ்விபத்துக்களுக்கு முக்கிய காரணம் எனப் பொதுமக்கள் சுட்டிக்காட்டு கின்றனர். எனவே உரிய தரப்பினர் நடவடிக்கை எடுப்பதன் மூலம் இவ்விபத்துக்களை தவிர்த்துக் கொள்ளலாம் என மக்களால் தெரிவிக்கப்படுகிறது. (66)

கோபத்துடன் செயல்படுபவனும், புயலில் கப்பல் விடுபவனும் சரிசமமானவர்கள். -பீச்சர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## முற்போக்குப் போராளி முகம்!

மண்ணுலகத்து மானுடன் தன்னைக் கட்டிய தளையெலாம் சிதறுக என்றார் பாரதியார். மனித சமுதாயம் நாகரிக வாழ்க்கை வாழத் தொடங்கிய காலம் முதல் கண்டுவந்துள்ள பெருங்கனவு, பேதங்கள் அற்ற ஒரே மனுக்குலமும் ஒரே உலகமும் உருவாகிட வேண்டும் என்பது.

நயத்தகு நாகரிகம் கண்ட சமுதாயங்களில் எல்லாம், தத்தம் எல்லைகளைக் கடந்து உலகெலாம் தழுவும் உயர்ந்த குறிக்கோள் காலந்தோறும் எழுந்திருக்கக் காண்கிறோம். யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பழந்தமிழ்க் கவிஞனும், மனுக்குலம் ஒன்று மானுடம் ஒன்று என்று பாடிய கிரேக்கப் புலவனும் அகன்று விரிந்த காட்சி உடையவராகவே இருந்தனர்.

எல்லோருக்கும் உலகம் ஒன்று, இருளும் ஒன்று ஒளியும் ஒன்று என்று பின்வந்த பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடியதும் சமத்துவத்தின் சகோதரத்துவத்தின் இலட்சிய நிலையையே காட்டுகிறது. எல்லோர்க்கும் எல்லாமும் கிடைக்க வேண்டும் என்பதுதான் இன்றைக்கும் எல்லோரும் அவாவுகின்ற இலட்சியமாகத் தொடர்கிறது.

தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம் என்று கொதித்த பாரதியின் ஆவேசம், உணவின்றி மடிவோரைக் கேள்வியுறும் ஒவ்வொரு மனிதனுக்கும் எழக்கூடியதுதான். பசிப்பிணி தீர்த்தலே தவப்பெரு நல்லறம் என்று மணிமேகலை பாடிய சீத்தலைச் சாத்தனாரும் கூறுகிறார். மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே என்பதைப் பேரறமாக வைக்கிறது அந்த பௌத்த நெறிக் காப்பியம்.

இந்த நல்லறங்களைக் கண்டுகொள்ளாமல் விடுவதற்கு, அந்தக் குற்றவுணர்வுகளிலிருந்து தப்பிப்பதற்கு, நம்மை நாமே திருப்திப்படுத்திக் கொள்ளும் நியாயங்களையும் நாம் உருவாக்கிக் கொள்கிறோம். உணவின்றி, தங்கக் குடிலின்றி, தொழிலின்றிக் கல்வி வாய்ப்பின்றி எல்லாம் நம் கண்முன்னே மக்கள் இருக்கிறார்கள் என்பதை ஒப்புக்கொள்ள மறுக்கிறோம். அதை ஒதுக்கிவிட்டு, அந்த முனகல்கள் வெளியே கேட்காதவகையில் வேறு மேலான பிரச்சினைகளை உரத்த குரலில் சொல்லிக் கொண்டிருக்கிறோம். நாம் சொல்லும் பிரச்சினைகள் தீர்ந்தால், உங்களுக்கு உணவும் வீடும் தொழிலும் கிடைத்துவிடும் என்ற ஏமாற்றையே மாதக்கணக்காக,வருடக்கணக்காக சொல்லித் தப்பித்துக் கொள்கிறோம்.

வாழ்வாதாரங்களே இன்றிக் கஷ்டப்படுபவர்கள் முன்னால் நாம் வசதிகளோடு வாழ்ந்து கொண்டிருக்கும் குற்றவுணர்வைச் சமாளித்துக் கொள்ள நாம், எல்லோருக்கும் பொதுவான வேறு பிரச்சினைகளே பெரிதான பிரச்சினைகள் என்று ஓங்கிய குரலில் முழங்குகிறோம். உதாரணத்திற்கு, இன்னும் வீடில்லாத நீ அடுத்த மழைக்குப் படப்போகும் துன்பத்தை மறந்துவிட்டு, புத்தர் சிலைகள் பெருகுவதையும், படையினர் நிலம் பறிப்பதையும் பற்றிக் கவலைப்படு. இந்த உணர்ச்சிகரக் கோபத்தில் உன் துன்பத்தை ஆற்றிவிடலாம் என்பதை நியாயமாகக் காட்ட முற்படுகிறோம். யாருக்கு நியாயம் இது?

சமூகத்தில் நாங்களும் சேர்ந்து நமக்குக் கீழ் உள்ளவர்களுக்குச் செய்துகொண்டிருக்கும் ஒடுக்குமுறைகளை மறைப்பதற்காக, நமக்குப் பொதுவான பெரிய ஒடுக்குமுறையொன்றைத் தூக்கிப் பிடிப்பதில் உள்ள ஏமாற்றை இனி நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

பெண்ணை ஒடுக்குவதை, தாழ்த்தப்பட்டவனை ஒடுக்குவதை, நம்மிடையே சிறுபான்மையினனை ஒடுக்குவதை நினைத்தாலே நாம் குற்றவாளிகள் என்பது புரிந்துவிடும். இதற்குப் பதிலாக ஏகாதிபத்தியத்திற்கெதிராக ஒரு முழக்கத்தை வைப்பேனாகில், நான் குற்றமற்ற முற்போக்குப் போராளியாக எண்ணிக்கொள்ள முடிகிறது. இதுதான் நடக்கிறது.

- ஆசிரியர்

# கூட்டமைப்பின் பையிலிருந்து புலிகள் குதித்துள்ளனர்

## சிறி விமலதேரர்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பையில் இருந்து தற்போது, விடுதலைப்புலிகள் வெளியில் குதித்துள்ளதாக கெட்டம்பே விகாராதிபதி கெப்பட்டியாகொட சிறிவிமல தேரர் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களின் சில கருத்துக்கள் மூலம் இது உறுதியாகியுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகள் பயங்கரவாதம் மூலம் பெற முயற்சித்ததை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் ரீதியாக பெற முயற்சித்து வருகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அரசியல் அதிகாரத்தை வழங்குவதற்காக நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாக்க ஆயிரக்கணக்கான படையினர் தமது உயிர்களைத் தியாகம் செய்யவில்லை.

நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வாக 1988 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபை முறைமை மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் குறித்து மத்திய அரசாங்கம், கைகளை கட்டிக் கொண்டு அந்த முறைமையை செயற்படுத்தியதன் காரணமாக தற்போது பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

எதிரானவர்களின் கைகளுக்குள் வடக்கு மாகாண சபையின் ஆட்சி, அதிகாரம் சென்றால், பல பிரச்சினைகள் ஏற்படும் எனவும் அது தற்போது வெளிப்படையாக தெரிய ஆரம்பித்துள்ளது எனவும் சிறி விமல தேரர் தெரிவித்துள்ளார்.

# ஏற்ற இறக்கத்துடன் காணப்படும் இலங்கை மனித உரிமை நிலைவரம்

கடந்த ஏப்ரல் மாதம் முதல் ஜூன் மாதம் வரையான காலப்பகுதிக்குள் இலங்கையில் மனித உரிமைகளின் நிலைமைகள் ஏற்ற இறக்கங்களை காட்டுவதாக பிரித்தானிய வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அலுவல்களுக்கான காரியாலயம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய இராஜ்ஜியத்தில் அமைந்துள்ள இந்தக் காரியாலயத்தினால் வெளியிடப்பட்ட மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக தரவு அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் மனித உரிமை நிலைவரங்கள் குறித்து தொடர்ந்தும் கவனம் செலுத்தி வருவதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சனல் 4 காணொளி தொடர்பில் விசாரணை மேற்கொள்வதாக இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்திற்கு அறிவித்துள்ளமை குறித்து பிரித்தானிய வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அலுவல்களுக்கான காரியாலயத்தின் புதிய தரவு அறிக்கையில் பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

செப்ரெம்பர் மாதத்தில் வடமாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்படுவது குறித்தும் பாராட்டியுள்ள அந்தக் காரியாலயம் அதிகாரப் பகிர்வு தொடர்பில் தொடர்ந்தும் விமர்சனங்கள் நிலவுவதாக சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த மூன்று மாதங்களாக கருத்துச் சுதந்திரத்திற்கு தொடர்ந்தும் தடை ஏற்படுத்தப்பட்டு வருவதாகவும் பிரித்தானிய வெளிவிவகார மற்றும் பொதுநலவாய அலுவல்களுக்கான காரியாலயத்தின் புதிய தரவுகள் குறிப்பிட்டுள்ளன.

## இரட்டைக் குடியுரிமை சட்ட வரைவு சட்ட மா. அதிபரிடம் சமர்ப்பிப்பு

இரட்டைக் குடியுரிமை குறித்த உத்தேச சட்ட வரைவு, சட்ட மா அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் இலங்கையர்களுக்கு இரட்டைக்குடி உரிமை வழங்குவது தொடர்பில் உத்தேச சட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த உத்தேச சட்டம் தற்போது சட்ட மா அதிபர் திணைக்களத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சட்ட மா அதிபர் திணைக்களத்தின் பரிந்துரைகளை பெற்றுக் கொண்டதன் பின்னர், இந்த உத்தேச சட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஏற்கனவே இரட்டைக் குடியுரிமை பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பித்தவர்கள் புதிய சட்டம் அமுல்படுத்தப்பட்டதன் பின்னர் மீளவும் விண்ணப்பிக்க நேரிடும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

விண்ணப்பதாரியின் பின்னணி குறித்து ஆராய்ந்தே எதிர்வரும் காலங்களில் இரட்டைக் குடியுரிமை வழங்கப்படும் என குடிவரவு குடியகழ்வு கட்டுப்பாட்டாளர் சூலானந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

## நீதியான முறையில் தேர்தல் ஜப்பான் அரசாங்கம் நம்பிக்கை

(கொழும்பு)

நீதியான முறையில் இலங்கையில் தேர்தல் நடைபெறும் என ஜப்பானிய அரசாங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது. வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களில் சுயாதீனமான முறையில் தேர்தலை நடாத்த உதவிகள் வழங்கப்படும் என இலங்கைக்கான ஜப்பானியத் தூதரகம் அறிவித்துள்ளது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் வடக்கில் தேர்தலை நடாத்த ஜனாதிபதி பணிப்புரை விடுத்தமை வரவேற்கப்பட வேண்டியது எனச் சுட்டிக்காட்டியுள்ளது. தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முனைப்புக்களின் ஓர் மைல் கல்லாக வடக்கு தேர்தலை கருத முடியும் எனத் தெரிவித்துள்ளது.

ஜனநாயகத்தை வலுப்படுத்தவும் தேர்தல்களை நடாத்த ஒத்துழைப்பு வழங்கவும் ஜப்பானிய அரசாங்கம் உதவிகளை வழங்கியுள்ளது. இதன் அடிப்படையில் ஜப்பானிய அரசாங்கம் இலங்கைக்கு 88667 டொலர் நிதி உதவியை வழங்கியுள்ளது.

ஜனநாயகத்தை வலுப்படுத்தும் அரசாங்கத்தின் முனைப்புக்களுக்கு பூரணமான ஒத்துழைப்பு வழங்கப்படும் என ஜப்பானியத் தூதரகம் அறிவித்துள்ளது.

# 25 இலட்சம் ரூபா கப்பம் கோரியவர் பொலிஸில் வசமாக சிக்கினார்

(கொழும்பு)

குழந்தையை கடத்துவோம், வீட்டுக்கு குண்டு வைப்போம் என மிரட்டி கிண்ணியா பிரதேச வர்த்தகர் ஒருவரிடம் 25 இலட்சம் ரூபா கப்பம் கோரியவர் மற்றும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கியவர் ஆகியோர் கிண்ணியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிண்ணியா பிரதேச எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளரான ஐ.எம்.நிஜாம்தின் என்பவரிடம் மூதூர் - நடைதீவு பகுதியைச் சேர்ந்த 28 வயதான முதாலிப் முசாபிர் என்பரே இவ்வாறு கப்பம் கோரியுள்ளார்.

கப்பம் கோரப்பட்ட பின்னர் குறித்த வர்த்தகர் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

சந்தேகநபரை கைது செய்ய பொலிஸார் பல முயற்சிளை எடுத்தும் அவை கைகூடவில்லை.

இந்நிலையில், குறித்த கப்பத்தை பெற்றுக் கொள்ளவென முதாலிப் முசாபிர் மற்றுமொரு நபரை நேற்று முன்தினம் மாலை கிண்ணியா - காக்கைமுனை - மயிலத்தீவு பகுதிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அதன்போது மறைந்திருந்த பொலிஸார் சந்தேகநபரை கைது செய்தனர்.

பின்னர் முதாலிப் முசாபிருக்கு தொலைபேசி அழைப்பை எடுத்து 'பணத்தை பெற்றுவிட்டேன். கிண்ணியா - குட்டிக்கரச்சேனை முஸ்லிம் பள்ளிக்கு அருகில் வந்தால் தருகிறேன்' என்று சந்தேகநபர் மூலம் பொலிஸார் தகவல் வழங்கினர்.

பணத்தைப் பெற்றுக் கொள்ள வந்த முதாலிப் முசாபிரை பொலிஸார் மடக்கிப் பிடித்து கைது செய்தனர்.

வடமாகாண சபை நிர்வாகத்தில் கண் வைத்திருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வில் அக்கறை இல்லை என்பதற்குப் பல ஆதாரங்களைக் கூறலாம். அரசியல் தீர்வில் அக்கறையுள்ள கட்சி அதற்கான திட்டமொன்றைக் கொண்டிருக்க வேண்டும். கூட்டமைப்பிடம் தீர்வுத் திட்டம் இல்லை. சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்றும் அரசாங்கம் தீர்வை முன்வைக்க வேண்டும் என்றும் சொல்வதைத் தவிர தீர்வைப் பற்றி வேறு எதுவும் இவர்கள் பேசுவதில்லை. அரசியல் தீர்வை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்குச் சிங்கள மக்களின் ஆதரவு அவசியம். அந்த ஆதரவைப் பெறுவதற்குக் கூட்டமைப்பு எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை. அரசியல் தீர்வு தொடர்பான ஆலோசனைகளுக்கென நியமிக்கப்பட்ட தெரிவுக் குழுவையும் பகிஷ்கரிக்கின்றார்கள்.

# கூட்டமைப்பின் பேரழிவு முயற்சியை இப்போதே தடுத்தாக வேண்டும்

சங்கர சிவன்

நீண்ட காலத்தமிழரசுக் கட்சிக்காரரிடம் கசப்புணர்வைத் தோற்றுவிக்கும் வகையில் வடமாகாண முதலமைச்சர் வேட்பாளரின் பெயரைத் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு அறிவித்திருக்கின்றது. தமிழரசுக் கட்சிக்குள் கசப்புணர்வு எதுவும் இல்லை என்று கட்சி வட்டாரத்திலிருந்து ஊடக அறிக்கை வெளி-வருவது எதிர்பார்த்ததுதான். சம்பிரதாயங்களை எப்படி மீறுவது? அந்த ஊடக அறிக்கையில் கூடக் கூட்டமைப்பின் மேலிடம் எடுத்த முடிவை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்று சொல்லியிருக்கின்றார்களே யொழியத்தெரிவு 'சரியானது என்றோ நியாயமானது என்றோ கூறவில்லை.

அவர்களின் உள்வீட்டுப் பிரச்சினையில் நாங்கள் ஏன் மூக்கை நுழைக்க வேண்டும்? மாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்பின் அணுகுமுறை தொடர்பாக எழுந்துள்ள அரசியல் பிரச்சினைக்கும் சில கேள்விகளுக்கும் வருவோம்.

வடமாகாண சபையின் முதலமைச்சர் வேட்பாளராக கூட்டமைப்பு தெரிவு செய்த நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தனது முன்னுரிமைகள் பற்றிய அறிவிப்பை உடனடியாகவே செய்திருக்கின்றார். இதன் படி பின்வரும் மூன்று விடயங்களுக்கு அவர் முக்கியத்துவம் அளிக்கின்றார்.

01) சர்வதேச உதவியுடன் வடக்கில் அபிவிருத்திப்புரட்சி

02) புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள் குடியேற்றம் ஆகியவற்றில் கூடுதலான கவனம்.

03) பதின்மூன்றாவது திருத்தத்தின் குறைபாடுகளை நீக்கும் வகையில் புதுடில்லியுடன் பேச்சுவார்த்தை

இந்த அறிவிப்பு பற்றிய விமர்சனத்தைப் பின்தள்ளிப் போட்டு விட்டு வேறொரு விடயத்துக்கு இப்போது வருவோம். இந்த அறிவிப்பைக் கூட்டமைப்புத் தலைமை முழுமையாக ஏற்றிருக்கின்றது. எதுவித முரண்பாடும் இல்லை. நீதியரசரின் இந்த அறிவிப்பு கூட்டமைப்புத் தலைமையை நோக்கிக் கேள்வி எழுப்புவது அவர்களுக்கு விளங்கவில்லை. இவ்வளவு காரியங்களும் மாகாண சபையினால் சாதிக்க முடியும் என்பது தெரிந்திருந்தும் இத்தனை காலமும் ஏன் அதை நிராகரித்தீர்கள்? கிராம சபைக்கு உள்ள அதிகாரங்கள் கூட மாகாண சபைக்கு இல்லை என்றும் அதனால் எதையும் சாதிக்க முடியாது என்றும் கூறி மக்களை ஏமாற்றியதன் நோக்கம் என்ன?

நீதியரசர் விக்கினேஸ்வரனின் முன்னுரிமை அறிவிப்பு கூட்டமைப்புத் தலைவர்களின் தலையில் ஓங்கி ஒரு குட்டு வைப்பதையும் அவதானிக்க முடிகின்றது. புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள் குடியேற்றம் என்பவற்றில் நீங்கள் செய்து கிழித்தது எதுவுமில்லை என்பதால் நான் அவற்றைக் கையில் எடுக்கிறேன் என்றும், பதின்மூன்றாவது திருத்தம் தொடர்பாகப் புதுடில்லியுடன் நீங்கள் பல தடவைகள் பேசியும் ஒரு பலனும் இல்லாத நிலையில் நான் செய்து காட்டுகிறேன் என்றும் அவர் கூறுவது போல் இருக்கிறது.

மாகாண சபையின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு முயற்சி மேற்கொள்ளும் கட்சிகளும் நபர்களும் மாகாண சபையின் பிரதான நோக்கத்தைப் புரிந்து அந்த நோக்கத்துக்கு அமை-வாகச் செயற்படுவதற்குத் தயாராக வேண்டும். மாகாண சபையின் பிர-தான நோக்கத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமானால் அதன் தோற்றக் காலத்துக்கு நம் பார்வையைத் திருப்ப வேண்டும்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் தான் மாகாண சபையின் நதி மூலம். இந்த ஒப்பந்தம் தமிழ் ஆயுதக் குழுக்களின் தனிநாட்டுப் போராட்டத்தை முடிவுக்குக்கொண்டுவரும் இலக்குடன் செய்யப்பட்டது என்பதால் அரசியல் நோக்கத்தைக் கொண்டது. ஒப்பந்தம் கைச்சாத்தாகியதைத் தொடர்ந்து தமிழ் ஆயுதக் குழுக்கள் அவற்றின் ஆயுதங்களைக் கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றிருப்பது தனிநாட்டுக்கு மாற்று அரசியல் ஏற்பாடொன்றை இந்திய - இலங்கை ஒப்பந்தம் அறிமுகப்படுத்துகின்றது என்பதையே குறித்தது. அந்த மாற்று அரசியல் ஏற்பாடு தான் மாகாண சபை.

அன்றைய அரசாங்கம் நிறைவேற்றிய மாகாண சபைச் சட்டம் மாகாண சபை மூலம் எதிர்பார்க்கப்பட்ட அரசியல் நோக்கத்தை முழுமையாகப் பிரதிபலிக்கவில்லை. அதற்காக மாகாண சபையைத் தூக்கியெறிந்து சூனிய நிலைக்குப் போகாமல், அதை அரசியல் தீர்வு நடைமுறையின் ஆரம்பமாக ஏற்றுப் படிப்படியாக மேலதிக அதிகாரங்களைப் பெற்று அரசியல் தீர்வை அடையும் எதிர்பார்ப்பு யதார்த்த அரசியல் வட்டாரங்களில் நிலவுகின்றது. வடமாகாண சபையின் அதிகாரத்தைக் கைப்பற்றுபவர்கள் இந்த எதிர்பார்ப்புக்கு அமை-வாகச் செயற்படுவது தான் தமிழ் மக்களின் நலன் சார்ந்த நகர்வாக இருக்க முடியும்.

வடமாகாண சபை நிர்வாகத்தில் கண் வைத்திருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வில் அக்கறை இல்லை என்பதற்குப் பல ஆதாரங்களைக் கூறலாம். அரசியல் தீர்வில் அக்கறையுள்ள கட்சி அதற்கான திட்டமொன்றைக் கொண்டிருக்க வேண்டும். கூட்டமைப்பிடம் தீர்வுத் திட்டம் இல்லை. சர்வதேச சமூகம் தீர்வைப் பெற்றுத் தரும் என்றும் அரசாங்கம் தீர்வை முன்வைக்க வேண்டும் என்றும் சொல்வதைத் தவிர தீர்வைப் பற்றி வேறு எதுவும் இவர்கள் பேசுவதில்லை. அரசியல் தீர்வை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்குச் சிங்கள மக்களின் ஆதரவு அவசியம். அந்த ஆதரவைப் பெறுவதற்குக் கூட்டமைப்பு எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை. அரசியல் தீர்வு தொடர்பான ஆலோசனைகளுக்கென நியமிக்கப்பட்ட தெரிவுக் குழுவையும் பகிஷ்கரிக்கின்றார்கள்.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் அண்மையில் இணையத் தளமொன்றுக்கு வழங்கிய நேர்காணல் அரசியல் தீர்வுக்குச் சாதகமான எந்த நடவடிக்கையையும் கூட்டமைப்பு மேற்கொள்ளாது என்பதை உறுதிப்படுத்துகின்றது. இவர்கள் விரும்புகின்ற மாதிரியான தீர்வை அரசாங்கம் முன்வைக்கும் வரை புலம் பெயர் மக்களின் கோரிக்கைகளை நிராகரிக்க வேண்டிய தேவை கூட்டமைப்புக்கு இல்லை என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறுகின்றார். இப்போது கூட்டமைப்பு புலம் பெயர் அமைப்புகளின் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது என்பதே இதன் அர்த்தம். கூட்டமைப்பு தொடர்பு வைத்திருக்கும் புலம்பெயர் அமைப்புகள் தனிநாட்டு நிலைப்பாட்டை இன்னும் கைவிடாதவை. அரசியல் தீர்வுக்குச் சாதகமான செயற்பாடுகளில் கூட்டமைப்பு ஈடுபடுவதை இப்புலம் பெயர் அமைப்புகள் விரும்புவதில்லை. இந்த நிலையில் கூட்டமைப்பு அரசியல் தீர்வுக்காக மாகாண சபையைப் பயன்படுத்தும் என்று எப்படி எதிர்பார்ப்பது?

அரசியல் தீர்வை எவ்விதத்திலும் தடுப்பதுதான் கூட்டமைப்புக்கு நிதி வழங்கும் புலம் பெயர் அமைப்புகளின் நிலைப்பாடாக இருக்கும் போது புலம் பெயர் அமைப்புகளின் கோரிக்கைகளை நடைமுறைப்படுத்தும் கூட்டமைப்பு மாகாண சபையையும் அரசியல் தீர்வைத் தவிர்ப்பதற்குப் பயன்படுத்தும் என்பதிலும் சந்தேகம் இல்லை. தமிழ் மக்கள் அரசியல் ரீதியாக ஓரங்கட்டப்படுகின்றார்கள் என்றும் அவர்களுக்கு அரசியல் உரிமைகளை வழங்க வேண்டியதன் அவசியம் பற்றியும் பல பேருரைகள் நிகழ்த்திய நீதியரசர் விக்கினேஸ்வரனும் கூட்டமைப்பின் அந்தக் குளிசையை விழுங்கிவிட்டார் போலத் தெரிகின்றது. அவரது முன்னுரிமைப் பட்டியலில் அரசியல் தீர்வு இல்லையே.

கூட்டமைப்பு தனிநாட்டு இலக்கை நோக்கித் தமிழ் மக்களை ஒரு தடவை வழி நடத்தியதன் விளைவாக நேர்ந்த பேரழிவை மக்கள் இன்னும் மறக்கவில்லை. புலம்பெயர் அமைப்புகளின் கோரிக்கையை ஏற்று மீண்டும் பேரழிவை நோக்கித் தமிழ் மக்களை இட்டுச் செல்வதற்குக் கூட்டமைப்பு மேற்கொள்ளும் முயற்சியைத் தடுக்கும் செயற்பாடு இப்போது இல்லையென்றால் ஒருபோதும் இல்லாமலாகிவிடும்.

வடக்கில் அபிவிருத்திச்செயற்பாடுகள் ஏற்கனவே, ஆரம்பித்துவிட்டன. அரசியல் உரிமைக்குப் பின்னரே அபிவிருத்தி என்று அப்போதெல்லாம் வீரவசனம் பேசியவர்கள் இப்போது அரசியல் உரிமையை ஓரங்கட்டிவிட்டு அபிவிருத்திப் புரட்சி என்று ஜம்பம் காட்டுகின்றார்கள். தமிழ் மக்களுக்கு அரசியல் உரிமையும் வேண்டும். அபிவிருத்தியும் வேண்டும். அரசியல் தீர்வு பற்றிய தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளதும் அபிவிருத்திக்காக அரசியல் தீர்வையோ அரசியல் தீர்வுக்காக அபிவிருத்தியையோ பின்தள்ளாததுமான மாகாண சபையே இன்று அவர்களுக்குத் தேவை.



நீதியரசரின் இந்த அறிவிப்பு கூட்டமைப்புத் தலைமையை நோக்கிக் கேள்வி எழுப்புவது அவர்களுக்கு விளங்கவில்லை. இவ்வளவு காரியங்களும் மாகாண சபையினால் சாதிக்க முடியும் என்பது தெரிந்திருந்தும் இத்தனை காலமும் ஏன் அதை நிராகரித்தீர்கள்? கிராம சபைக்கு உள்ள அதிகாரங்கள் கூட மாகாண சபைக்கு இல்லை என்றும் அதனால் எதையும் சாதிக்க முடியாது என்றும் கூறி மக்களை ஏமாற்றியதன் நோக்கம் என்ன?

# நிர்வாகத்தில் படையினரின் தலையீடு முதலீட்டு முயற்சிகளுக்கு பாதிப்பு

— ஐரோப்பிய ஒன்றியம் எச்சரிக்கை —



வடக்கில் பொது நிர்வாக விடயங்களில் படையினரின் தேவையற்ற தலையீடு தொடர்ந்தும் இருந்தால் இது பொருளாதார ரீதியான முதலீடுகளைப் பாதிக்கும் என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியதூதுக் குழுவினர் நேற்று முன்தினம் கொழும்பில் நடாத்திய செய்தியாளர் மாநாட்டிலே இவ்வாறு தெரிவித்தனர். அதே வேளை வடமாகாண சபைத் தேர்தல் சுயாதீனமாகவும் நீதியாகவும் இடம்பெறவேண்டும் என ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் தெற்காசிய விவகார உறவுகளுக்குப் பொறுப்பான குழுவின் தலைவர் ஜீன் லம்பேர்ட் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பு சினமன் கிராண்ட் நட்சத்திர விடுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இலங்கைக்கு 7வது தடவையாக விஜயத்தை மேற்கொண்டுள்ளது. இம்முறை இவ்விஜயத்தில் ஆறு ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

நாம் கடந்த காலங்களில் வடக்கு மற்றும் மத்திய மாகாணங்களுக்கு விஜயங்களை மேற்கொண்டோம். குறிப்பாக வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் நுவரெலியா ஆகிய பகுதிகளுக்கு சென்று குடியியல் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் அமைப்புக்களுடன் கலந்துரையாடல்களை நடத்தியிருந்தோம்.

அதேவேளை, நாம் இங்கு தங்கியிருந்த நாட்களில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ், தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, மீள்குடியேற்ற அமைச்சர் குணரட்ன வீரக்கோன், சூழல் பாதுகாப்பு மற்றும் எரிசக்தி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த மற்றும் பொருளாதார அபிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச ஆகியோரை சந்தித்து கலந்துரையாடினோம்.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் பேச்சு வார்த்தை நடத்தினோம். அதே வேளை, நாம் நாட்டின் அபிவிருத்தி, சுகாதாரம் மற்றும் கல்வி போன்றவற்றில் அதிககவனம் செலுத்தினோம். குறிப்பாக பொது நிர்வாக விடயங்கள் தொடர்பில் வடக்கில் படையினரின் பிரசன்னம் அதிகமாகவுள்ளதை காணமுடிகின்றது. வடக்கின் குடியியல் நிர்வாகம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். பொது விடயங்களில் படையினரின் தலையீடு அதிகமாக இருந்தால், அது நாட்டின் எதிர்கால பொருளாதார முதலீடு களுக்கு பெரும் பாதிப்பாக அமையும்.என்றும் வலியுறுத்தப்பட்டது.

# விவசாய அமைச்சின் முன்னேற்றம் ஜனாதிபதி தலைமையில் ஆராய்வு



விவசாய அமைச்சின் முன்னேற்றங்கள் பற்றி ஆராயும் கலந்துரையாடல் ஒன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ தலைமையில் விவசாய அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

2013 - 2015 மத்திய கால முதலீட்டுத் திட்டத்தை செயற்படுத்தும் நோக்கிலேயே இக்கலந்துரையாடல் இடம்பெற்றது. உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சியொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அமைச்சர்களான மகிந்த யாப்பா அபேவர்தன- பசில் ராஜ பக்ஸ ஜனாதிபதியின் செய லாளர் லலித் வீரதுங்க மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்கள் ஆகியோர் உட்பட முக்கியக்கியஸ்தர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்

# முஸ்லிம் பெண்ணொருவரின் தலைமுடியை வெட்டிய கிராம மக்கள்

தகாத உறவை வைத்திருந்ததாக குற்றம் சுமத்தி, கல்கமுவ பிரதேசத்தில் முஸ்லிம் பெண்ணொருவரின் தலைமுடியை கிராமமக்கள் வெட்டியுள்ளதாக தெரியவருகிறது.

குருநாகல் மாவட்டத்தில் கல்கமுவ மொன்னக்குளம் அல்-அஸ்னா ஜும்மா பள்ளிவாசலில் வைத்து இந்த பெண்ணின் தலைமுடி வெட்டப்பட்டுள்ளது.

இதன் போது தலையில் காயமடைந்த நிலையில் அந்த பெண் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.தான் தமிழ் இளைஞர் ஒருவரை காதலிப்பதாகவும் இதனை குடும்பத்தினர் எதிர்த்து வருவதாகவும் காதலரை பார்த்து விட்டு, திரும்பிக் கொண்டிருந்த போது தன்னை ஏமாற்றி பள்ளிவாசலுக்கு அழைத்துச் சென்று தலைமுடியை துண்டித்துடன் கைகளை கட்டி தாக்கிய தாகவும் பாதிக்கப்பட்ட பெண் கூறியுள்ளார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய ஆறு பெண்கள் கைது செய்யப்பட்டு, கல்கமுவ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்களை கடுமையாக எச்சரித்த நீதவான் ஜயதிலக்க தென்னகோன், கடும் நிபந்தனைகளை விதித்து பிணையில் செல்ல அனுமதித்துள்ளார்.40 வயதான இந்த பெண், இளைஞர் ஒருவருடன் தகாத உறவுகளை வைத்திருந்ததாகவும் பல முறை எச்சரித்தும் அவர் கேட்காததால், இந்தத் தண்டனை வழங்கப்பட்டதாகவும் பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவர் கூறியுள்ளார்.

இந்நிலையில், இலங்கையில் ஷரியா சட்டம் இலங்கையில் அடிப்படைச் சட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை என்பதால், பெண்ணுக்கு வழங்கப்பட்ட தண்டனை தவறான செய்ல் என அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா அமைப்பின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# மன்னிப்பு கேட்கமாட்டேன்

டிக்கிரி கொப்பே கடுவ

(கொழும்பு)

வைத்தியர்களுக்கு எதிராக நான் எவ்விதமான தகாத வார்த்தைகளையும் பிரயோகிக்க வில்லை என்று தெரிவித்த மத்திய மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பே கடுவ இது தொடர்பில் தாம் மன்னிப்பு கோர போவதில்லை என்றும் தெரிவித்தார்.

மத்திய மாகாணத்தில் அடையாள வேலைநிறுத்தம் முன்னெடுக்கப்பட்ட நிலையில், வைத்தியர்களை தகுந்த காரணமின்றி தகாத வார்த்தைகளை பிரயோகித்தமைக்கு மத்திய மாகாண ஆளுநர் பொது மன்னிப்பு கேட்கவேண்டும் எனவும் வைத்தியர்கள் சங்கம் அறிவித்துள்ளமை குறித்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வைத்தியர்களுக்கு எதிராக நான் எவ்விதமாக தகாத வார்த்தைகளையும் பிரயோகிக்க வில்லை. இந்நிலையில் நான் எவ்வாறு மன்னிப்பு கேட்பது. நான் மன்னிப்பு கேட்கமாட்டேன். வைத்தியசாலையின் மருந்தக களஞ்சிய சாலையை பார்வையிடவே நான் சென்றேன். அங்கு கூட்டம் நடைபெற்றது.

அந்த இடத்திற்கு சென்று வைத்தியர்களுக்கு புதிதாக வழங்கப்பட்டுள்ள வாகனங்களை ஏன் இன்னும் பெற்றுக் கொள்ளவில்லை என்று கேட்டேனே தவர வேறொன் றுமே கேட்கவுமில்லை கூறவுமில்லை என்றார்.

# 6 மாத சிசுவின் உயிரை பறித்த "லஞ்ஷீட்"

சாப்பாடு பொதிசெய்யும் "லஞ்ஷீட்" ஆறு மாதங்களேயான சிசுவின் உயிரை பறித்த பரிதாபகரமான சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் மாத்தறை, கந்தேகெதர பகுதியைச்சேர்ந்த ஆறுமாத சிசுவே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஆறுமாத சிசுவிற்கு பாலூட்டியதன் பின்னர் கட்டிலில் தூங்கவைத்த தாய், மின்விசிறியை சுழல விட்டுவிட்டு சமையலறையில் சமைத்துக் கொண்டிருந்துள்ளார்.

இந்நிலையில், பகல்வேளையில் வீட்டுக்கு வந்த கணவன் அறையின் யன்னலை திறந்ததன் பின்னர் சிசுவின் முகத்திலிருந்த "லஞ்ஷீட்டை எடுத்து விட்டு சிசுவை எழுப்பியுள்ளார்.சிசு அசைவற்று கிடந்தையடுத்து கூச்சலிட்ட அவர் மனைவியின் உதவியுடன் சிசுவை தூக்கிக் கொண்டு வைத்தியசாலைக்கு ஓடியபோதிலும் சிசுவை காப்பாற்றமுடியவில்லை.

சிசு தூங்கிக்கொண்டிருந்த அறையிலுள்ள அலுமாரியின் மேல் வைக்கப்பட்டிருந்த லஞ்ஷீட்டே மின்விசிறியின் காற்றுக்கு பறந்து வந்து சிசுவின் முகத்தை மூடியுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வருகின்றன.

# மத்திய மாகாணத்தில் மருத்துவர்கள் வேலை நிறுத்தம்





. மத்திய மாகாணத்தைச்சேர்ந்த வைத்தியர்கள் நேற்று முன்தினம் மேற் கொண்ட அடையாள வேலை நிறுத்த போராட்டத்தினால் 40 வைத்திய சாலைகளின் பணிகள் முற்றாக ஸ்தம்பிதமடைந்திருந்தன. இதனால் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர்.

பிரதேச வைத்தியசாலைகளும் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரிகளின் காரியாலய வைத்தியர்களுமே இந்த வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.நுவரெலியா சுகாதார வைத்திய அதிகாரிகளின் காரியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற வைபவத்தில் கலந்து கொண்ட மத்தியமாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ வைத்தியர்களுக்கு எதிராக தகாத வார்த்தை பிரயோகங்களை மேற்கொண்டமைக்கு எதிப்பு தெரிவிதது இந்த 24 மணிநேர அடையாள வேலை நிறுத்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இவ் வேலைநிறுத்தத்தில் மத்திய மாகாண பிரதேச வைத்திய சாலைகள் 40 உம் சுகாதார வைத்திய அதிகாரிகளின் காரியாலய வைத்தியர்கள் 500 பேரும் குதித்துள்ளனர்.இதனால் குறித்த வைத்தியசாலைகளில் வெளி நோயாளர் பிரிவு சத்திரசிகிச்சை வைத்திய பரிசோதனை முகாம் (கிளினிக்) ஆகியன முற்றாக செயலிழந்திருந்ததோடு இங்கு சேவைகளை பெற்றுக்கொள்ள வருகை தந்த நோயாளர்கள் திரும்பி சென்றதை காணக் கூடியதாக இருந்தது.வைத்தியர்களை தகுந்த காரணமின்றி தகாத வார்த்தைகளை பிரயோகித்தமைக்கு மத்திய மாகாண ஆளுநர் பொது மன்னிப்பு கேட்க வேண்டும் எனவும் வைத்தியர்கள் சங்கம் அறிவித்துள்ளது. இல்லாவிட்டால் இந்த வேலைநிறுத்த போராட்டத்தை விஸ்தரிக்க வேண்டிய நிலைஏற்படும் என்றும் வைத்தியர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

# அநாதரவாக விடப்பட்ட மூன்று பெண் பிள்ளைகள் மீட்பு

(கொழும்பு)

பொகவந்தலாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மோரா தோட்டத்தின் கீழ் பிரிவில் பெற்றோரால் அநாதரவாக கைவிடப்பட்ட நிலையில் வீடொன்றுக்குள் இருந்த மூன்று பெண் பிள்ளைகளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்தப் பிள்ளைகளின் தந்தை கொழும்பில் வேலை செய்பவர் என்றும் கடந்த ஆறுமாதமாக வீட்டிற்கு வராத நிலையில் தாய் வேறு ஒரு நபருடன் தலை மறைவாகியுள்ளதாகவும் தெரிய வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விடயம் தொடர்பாக கிராம உத்தியோகத்தர் மூலமாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின்படி பொலிஸார் மேற்படி பிள்ளைகளை மீட்டு இன்று ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.5, 7, மற்றும் 9 வயதுகளையுடைய மேற்படி மூன்று பெண் குழந்தைகளையும் கடந்த வெள்ளிக்கிழமை ஹட்டன் நீதவான், மஸ்கெலிய சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டதிற்கு அமைய அப்பிள்ளை கள் அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

# பயிற்சியை பெறும் தாதியர்கள் உன்னத சேவையை வழங்கவேண்டும்

யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர்



(யாழ்ப்பாணம்)
யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரிக்கு உலகளாவிய புகழ் உண்டு என்றும் யாழ். போதனா வைத்தியசாலைப்பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராசா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். போதனாவைத்தியசாலை தாதியர் பயிற்சிக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற தாதியர் மாணவர் சேவை அர்ப்பணிப்பு விழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரையாற்றுகையில், அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ்தாதியர் பயிற்சிப் பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் யாழ் போதனா வைத்தியசாலையில் தாதியர்கள் பற்றாக்குறை இருப்பதனை நீங்கள் அறிவீர்கள் ஆனால் வைத்தியசாலையில் தற்சமயம் பல சிகிச்சைப்பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன. இதனால் இப்போது ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்திருக்கும் நீங்கள் இன்னும் இரண்டு வருடத்தில் தாதியர்களாக கடமையைப் பொறுப்பேற்கவுள்ளீர்கள். அப்போது இந்த வைத்தியசாலையில் உள்ள நோயாளர்கள் உங்களது உன்னத சேவையைப்பெறும் பொருட்டு ஒப்படைக்கப்படுவர் என்றும் தெரிவித்த வைத்தியசாலைப்பணிப்பாளர் முதலாம் வருடத்தைப்பூர்த்தி செய்த 33 தாதிய மாணவர்களுக்கும் தமது பாராட்டையும் வாழ்த்தையும் தெரிவித்துக்கொண்டார்.

இந்நிகழ்வில் தாதியர் கல்விப்பணிப்பாளர் திருமதி சிறிவர்த்தன. யாழ்.போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் நந்தகுமார் சர்வ மதகுருமார்,தாதியர்கள், வைத்தியசாலை ஊழியர்கள், தாதியர் மாணவர்கள், முதலானவர்கள் கலந்து கொண்டு தாதிய மாணவர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.(பா)

# நாகர் கோவில் மீனவர்களுக்கு மீன்பிடிப் படகு வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)
நாகர் கோவிலைச்சேர்ந்த 40 குடும்பங்களுக்கு மீன்பிடிப் படகு, வெளியிணைப்பு இயந்திரம் மற்றும் வலை முதலியன வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக யாழ். கடற்றொழில் நீரியல்வளத்திணைக்களம் தெரியவித்துள்ளது.

சேவாலங்கா நிறுவனத்தின் உதவியுடன் இந்த மீன்பிடி உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு இந்தக் குடும்பங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் மேலும் அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (பா)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)
கல்வி அமைச்சினால் பொதுக்கலைத்தகைமை (வெளிவாரி) பரிட்சை (ஆங்கில பாடத்துடன்)மற்றும் விஞ்ஞான மாணி(வெளிவாரி) பட்டத்தின் முதல் பரீட்சையில் சித்தியடைந்த ஆசிரியர்கள் பல்கலைக்கழகத்தில் சேர்த்துக் கொள்வதற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

அரச மற்றும் அரசாங்க அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பாடநெறிகளாக ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்ட கலைப்பட்டப் பாடநெறி, விஞ்ஞானப் பாடநெறிகளாகும். விண்ணப்பமுடிவு ஓகஸ்ட் 12ஆம் திகதியாகும். விண்ணப்பிப்போருக்கான தகைமைகளும் ,விண்ணப்பப்படிவங்களையும் மேலதிகதகவல்களையும் பெற்றுக்கொள்ள 19.07.2013 அரச வர்த்தமானியைப்பாவையிடலாம். (105)

# வாகனநெரிசலை தடுக்க காத்திரமான செயற்பாடு அவசியம்

(சுன்னாகம்)
மானிப்பாய் சந்தியில் இருந்து ஆனைக்கோட்டை வரையிலான வீதிப்பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசல் காணப்படுகின்றது.

குறிப்பாக மானிப்பாய் நகரப்பகுதியில் இந்நிலைமை மிக மோசமாக காணப்படுவதுடன் எதிர் எதிரே வருகின்ற வாகனங்கள் ஒன்றை ஒன்று விலத்தி செல்லமுடியாத அளவில் வீதியின் நிலைமை காணப்படு வதுடன் வாகனங்கள் ஒன்றை ஒன்று விலத்தி முன்னோக்கி செல்லமுடியாத படியும் காணப்படுகின்றது.

மானிப்பாய் நகர்பகுதியிலுள்ள சந்தையின் முன்பாக வாகனங்கள் தரித்து நிற்பதாலும் வியாபார நிலையங்களுக்கு முன்னால் பொருட்கள் அடுக்கி வைக்கப்படுவதாலும் இந் நெருக்கடி அதிகமாக காணப்படுவதுடன் மானிப்பாய் அந்தோனியார் ஆலயத்தின் முன் பிரதான வீதி மிகவும் ஒடுங்கிய நிலையிலே காணப் படுகிறது.

இதனால் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பேருந்துகள் பயணிகளை ஏற்றுவதற்கு வீதியில் தரித்து நிற்க முடியாத நிலையும் காணப்படுகின்றது. இவ்வாறான வாகன நெரிசலினால் விபத்துக்கள் ஏற்படும் அவல நிலை காணப்படு வதுடன் பாதசாரிகள் செல்ல முடியாதநிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே வீதி ஓரங்களில் வாகனங்களை தரிப்பது கடைப் பொருட்களை வைப்பது போனற செயற்பாடுகளை உரியவர்கள் மேற்கொள்ளாது சிந்தித்து செயற்பட்டால் வாகன நெரிசலை ஓரளவு கட்டுப்படுத்த முடியும் என பொதுமக்கள் தெரிவிக்கப்படுகிறது. (66)

# வடிகால்கள் சீர்மைப்பு

(அச்சுவேலி)
யாழ்.ஆஸ்பத்திரி வீதிக்கு காப்பெற் போடப்பட்டு சில காலம் கடந்து விட்ட நிலையில் வீதியின் வடிகால் பகுதிகள் சமச்சீர் இன்றி மேடுபள்ளங்களுடன் ஆங்காங்கே சிறுபுதர்களுடன் பாதசாரிகள் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் காணப்பட்டது. தற்போது அப்பகுதிகளுக்கு மண் இடப்பட்டு சமநிலைப் படுத்தப்பட்டுள்ளன.

இதனால் பாதசாரிகள் போக்குவரத்தை மேற்கொள்வதற்கு இது வசதியாக உள்ளதுடன் ஏனைய வாகனப்போக்குவரத்துக்களும் இந்த வீதியால் இடம்பெறுவதனையும் காண முடிகின்றது. (85)


# 41ஆவது இலக்கிய சந்திப்பு இரண்டாம் நாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)
41ஆவது இலக்கியச் சந்திப்பின் இரண்டாம் நாள் நிகழ்வு இன்றைய தினம் 8.45 மணிக்கு இல 17 அக்றேறியன் லேன் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள யூரோவில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய நிகழ்வில் 'கேட்டதற்காய் சொல்லுகிறேன்" 'கைதட்டல் எதற்கு' என்னும் விடயம் பற்றி சோலைக்கிளி உரையாற்றுவார் அதன் பின்னர் நடைபெறும் இலக்கியம் என்ற தலைப்பிலான கலந்துரையாடலுக்கு சோ.பத்மநாதன் தலைமை வகிப்பார். இதில் பல்வேறு இலக்கியவாதிகளும் உரையாற்றவுள்ளனர்.இதன் பின்னர் சமூக செயற்பாட்டாளர்களின் அனுபவப்பகிர்வுகள் என்னும் தலைப்பிலான கலந்துரையாடலுக்கு துஷ்யந்தி கனக சபாபதிப்பிள்ளை தலைமை வகிப்பார்.

இதில் பல்வேறு இலக்கிய வாதிகளும் உரையாற்றுவா். தொடர்ந்து நான் ஏன் எழுதுகிறேன் என்னும் விடயத்தில் அஷ்ற்.ஃபா நூதின் உரையாற்றவுள்ளதுடன் அடுத்த இலக்கிய சந்திப்பு குறித்து தீர்மானம் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து தேசிய இனங்கள் பிரச்சினைகள் என்னும் தலைப்பிலான கலந்துரையாடலுக்கு சிவா சுப்பிரமணியம் தலைமை தாங்கவுள்ளதுடன் இதில் பல்வேறு இலக்கியவாதிகளும் உரையாற்றவுள்ளனர். இறுதியாக அகதிகள் நாடகம் இடம் பெறவுள்ளது.



வேல்ட் விசன் அமைப்பினைச் சேர்ந்த பிரதிநிதிகள் குழுவினர் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திர்சிறியை கொழும்பிலுள்ள ஆளுநரின் உப அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை சந்தித்து வடமாகாணத்தில் அபிவிருத்தித்திட்டங்கள் மற்றும் மனித வளங்களின் அபிவிருத்தி என்பவற்றில் வேல்ட் விசன் அமைப்பின் ஈடுபாடு தொடர்பாக கலந்துரையாடிய போது...

# முரசின் இன்றைய பலன்



(21.07.2013 –ஞாயிற்றுக்கிழமை)

விஜய வருஷம் ஆடி மாதம் 05ஆம் திகதி.மூலநட்சத்திரம் மு.ப. 10.56 வரை பின்பூராடம் ,சதுர்த்தசிதிதி.அமிர்தசித்தம்
இராகுகாலம 04.31- .06.41 வரை. சுபநேரம 09.01- 10.31 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பிரியமானவர்களின் சந்திப்பு,உத்தியோக உயர்வு, மனஉறுதிப்பாட்டால் காரிய சித்தி,கருத்து வேற்றுமை அகலும். |
| ரிஷபம் | வியாழ சனி பலாபலனால் காரியசித்திர காதல் மலர்தல், கடன் பெற வங்கியின் உதவி,தேகநலம் மேம்பாடு, கோபம் விலகுவதால் நன்மை, தர்மச் செயல்கள்,அதிர்ஷ்டலாபச்சீட்டினால் பணம். |
| மிதுனம் | திறமை மேம்பட ஊக்குவிப்பு,மக்களினால் கவலை,கள்ளநோட்டு கைக்கு வரும் அபாயம், கவனக்குறைவினால் வாகனத்தில் தீ. |
| கடகம் | மாதாவின் தேகநலம் அபிவிருத்தி, பிரயாணத்தில் பணம் களவாடப்படல்,சிகிச்சைக்கு நாட்குறித்தல்,கடனால் அவமானப்படல். |
| சிம்மம் | குருப்பெயர்ச்சி குபேரனாக்கி விடுதல், இழுபட்ட காரிய ஜெயம்,நோய்தீர சத்திரசிகிச்சை,சுவீப்பில் பணம். |
| கன்னி | தொழில் பற்றிய கலக்கநிலை, ஆவணக் குறைவால் தண்டம்,காதலில் சோதனை, பணமுடையால் காசோலை திரும்புதல். |
| துலாம் | சட்டவிரோத செயலால் தண்டம், பிதாவின் தேக சுகபாதிப்பு,குழந்தைப்பிரசவம்,முற்றாகும் நிலையில் விவாகம். |
| விருச்சிகம் | சகோதர உதவியால் பயணமுயற்சி வெற்றி, சுபகாரியச்செலவு,விருந்துபசாரம்,நியாயம் கேட்க வெளிக்கிட்டு மனஸ்தாபம். |
| தனுசு | நீண்டநாட்பகை மறைதல், நோய்கட்டுப்பாட்டில் வியாபாரமேன்மை,பிரிந்த உறவு மீண்டும் வருதல்,புதிய இடத்தில் தொழில் ஆரம்பம். |
| மகரம் | பயணம் இடையில் நின்றுவிடல்,எதிரியால் தொல்லை,மனைவி மக்களுடன் கருத்து முரண்பாடு, வங்கிக்கடன் இழுபடல். |
| கும்பம் | எண்ணியது முடிதல்,வாகனயோகம்,பயணம் பற்றிய சுபமுடிவு,நோய் பற்றிய அச்சமின்மை, பொறுமையினால் வெகுமதி,சுவீப் அதிர்ஷ்டம். |
| மீனம் | சகோதர உதவி,தனியார்துறையில் வேலை வாய்ப்பு, சளிநோய் வருத்துதல். |

# என் வாழ்க்கையிலும் ஹீரோ சச்சின்தான்



(மும்பை)

எனது வாழ்க்கையின் சூப்பர் ஹீரோ என்றும் சச்சின் தான் என ஹோலி தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட்டில் மட்டுமல்ல, எனது தனிப்பட்ட வாழ்க்கையிலும் எனது சூப்பர் ஹீரோ சச்சின் தான். கிரிக்கெட் போட்டியை பொறுத்தவரை, இதற்கு மதிப்பு கொடுத்து விளையாடினால் அவர் தான் ஹீரோ. இதை களங்கப்படுத்த முயற்சிப்பவர் வில்லன் ஆகிவிடுவர். இவர்கள் கட்டாயம் தண்டிக்கப்பட வேண்டும்.

கிரிக்கெட் துடுப்பு என்பது வெறும் விளையாட்டுப் பொம்மை அல்ல. இது ஒரு ஆயுதம். இது தான் எனது வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் கொடுக்கிறது. மைதானத்தில் இதை வைத்து எப்படி வேண்டுமானாலும் அசத்த உதவுகிறது.

சிம்பாப்வே தொடரில் இளம் வீரர்கள் இருப்பது ஒரு பிரச்சினை அல்ல. ஒருநாள், ருவென்ரி-20 போட்டிகளைப் பொறுத்தவரை, 11 வீரர்கள் இருந்தால் போதுமானது. கடுமையாக போராடினால் வெற்றி கிடைக்கும். இப்போது தேர்வு செய்யப்பட்ட 15 வீரர்களுமே திறமையானவர்கள் தான். கடந்த சில மாதங்களாக இந்திய அணி சிறப்பாக செயல்படுகிறது. ஒருவேளை இது தொடரும் பட்சத்தில், இந்திய கிரிக்கெட்டுக்கு நல்ல காலம் தான் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அசார் அறிவுரை

(புதுடில்லி)

இந்திய அணியின் நட்சத்திர வீரர் 40 வயதான சச்சின் டெண்டுல்கர் டெஸ்ட் போட்டியில் மட்டும் விளை யாடி வருகிறார். அவர் அடுத்து தென்னாபிரிக்க டெஸ்டில் விளையாட இருக்கிறார்.

இந்த நிலையில் டெண்டுல்கரின் துடுப்பாட்ட நிலை குறித்து முன்னாள் கப்டன் அசாருதீன் சில அறிவுரை களை வழங்கி இருக்கிறார். அதில், டெண்டுல்கர் பந்தை எதிர்கொள்கையில் தற்போதை விட சற்று நெஞ்சை நிமிர்த்தி நின்று ஆடினால் வேகப்பந்து வீச்சை எளிதில் அடித்து விளையாட முடியும் என்பது எனது நம்பிக்கையாகும்.

வயது காரணமாக துடுப்பு வேகம் குறையும், அதனை டெண்டுல்கர் தனது ஆட்ட நுணுக்கத்தால் சரிசெய்து விடலாம். நிமிர்ந்து நின்று ஆடும் போது, பந்தை துல்லியமாக கணிக்க முடியும். அப்போது ஸ்விங் பந்து வீச்சை அடித்து ஆட வசதியாக இருக்கும். இது அவர் சரியான முறையில் கடைப்பிடித்தால் சிறப்பான பெறுபேற்றை தென்னாபிரிக்காவில் பெற்றுக்கொள்ள முடியும் என்றார்.

## புக்கானன் விலகல்



(வெலிங்டன்)


நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் இயக்குனர் பொறுப்பில் இருந்து,அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் பயிற்சியாளர் ஜோன் புக்கானன் விலகினார்.

நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் இயக்குனராக,2011இல் முன்னாள்அவுஸ்ரேலிய பயிற்சியாளர் ஜோன் புக்கானன் ஒப்பந்தம் செய்யப்பட்டார். இவரது ஒப்பந்தம் 2015இல் நடக்கவுள்ள உலக கோப்பை (50 ஓவர்) தொடர் வரை இருந்தது.

சமீபத்தில், நியூசிலாந்து கிரிக்கெட் சபை வெளியிட்ட செய்தியில், அணித் தேர்வில் தலைமை பயிற்சியாளரின் முடிவு இறுதியானது, என தெரிவித்தது. இந்நிலையில் இயக்குனர் பதவியில் இருந்து விலகுவதாக ஜோன் புக்கானன் திடீரென அறிவித்தார். ஏற்கனவே,சமீபத்தில் நடந்த அணித் தேர்வில், இவருக்கும் தலைமை பயிற்சியாளர் மைக் ஹெசனுக்கும் மோதல் போக்கு இருந்தது. நியூசிலாந்து அணியின் கப்டனாக டெய்லரை நியமிக்க, புக்கானன் வலியுறுத்தினார். ஆனால், ஹெசன் பிரண்டன், மெக்கலத்தை கப்டனாக நியமித்தார்.

நியூசிலாந்து கிரிக்கெட் சபை சார்பில் வெளியான செய்தியில், இயக்குனர் பதவியில் இருந்து ஜோன் புக்கானன் விலகுவது ஏமாற்றம் அளிக்கிறது. குடும்ப சூழ்நிலை காரணமாக இம்முடிவை எடுத்திருப்பதால், அதற்கு மதிப்பளிக்கிறோம் என தெரிவிக்கப்பட்டது.

# சமநிலையில் 3ஆவது ஒரு நாள் ஆட்டம்



(செயின்ட் லூசியா)

மேற்கிந்தியத்தீவுகள், பாகிஸ்தான் அணிகள் மோதிய மூன்றாவது ஒருநாள் போட்டி சமநிலையில் நிறைவுற்றது.

மேற்கிந்தியத்தீவுகள் சென்றுள்ள பாகிஸ்தான் அணி, ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொ டரில் பங்கேற்கிறது. முதலிரண்டு போட்டியில் இரு அணிகளும் தலா ஒரு வெற்றி பெற, தொடர் 1-1 என சமநிலை வகித்தது. மூன்றாவது போட்டி செயின்ட் லூசியாவில் நேற்று முன்தினம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் ஆடிய பாகிஸ்தான் அணி 50 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 229 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கப்டன் மிஸ்பா உல் ஹக் 75, உமர் அக்மல் 40 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜோசன் ஹோல்டர், டுவைன் பிராவோ தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 230 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மேற்கிந்தியத்தீவு அணி, முதல் நான்கு விக்கெட்டுக்களையும் 91 ஓட்டங்களுக்கள் பறிகொடுத்துத் தடுமாறியது. இருப்பினும் பின்னர் களமிறங்கிய சிமன்ஸ் பொறுப்புடன் ஆடினார். இருப்பினும் அஜ்மல், யுனைட்கான் ஆகியோரின் பந்து வீச்சு மேற்கிந்தியத்தீவுகளின் துடுப்பாட்ட வீரர்களுக்கு நெருக்கடியைக் கொடுத்து. இறுதி ஓவரில் 15 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் மேற்கிந்தியத்தீவும், ஒரு விக்கெட்டை வீழ்த்தினால் வெற்றி என்ற நிலையில் பாகிஸ்தானும் களத்தில் பரபரப்புடன் செயற்பட்டன. வாகாப் ரியாஸ் வீசிய 50ஆவது ஓவரின் முதலிரண்டு பந்தில் தலா ஒரு ஓட்டம் எடுக்கப்பட்டது. மூன்றாவது பந்தை பவுண்டரிக்கு விரட்டிய ஹோல்டர், 4ஆவது பந்தில் ஓட்டம் எடுக்கவில்லை. பின், 5ஆவது பந்தை சிக்சருக்கு பறக்கவிட்டார். கடைசிப் பந்தில் வெற்றிக்கு மூன்று ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில், ஹோல்டர் 2 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தார். இறுதியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 50 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 229 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சிமன்ஸ் 75, சாமுவேல்ஸ் 46, ஹோல்டர் 19 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அஜ்மல், யுனைட்கான் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகர்களாக மிஸ்பா மற்றும் சிமன்ஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இதன் மூலம் இப்போட்டி சமநிலையில் நிறைவுற்றது. அத்துடன் ஒருநாள் வரலாற்றில், சமநிலையில் நிறைவுற்ற 31ஆவது போட்டி என்ற பெருமை பெற்றது. தவிர இது, இந்த ஆண்டு சமநிலையில் முடிந்த நான்காவது போட்டி என்பது குறிப்பிடத்தக்கது.

# காலிறுதியில் ஸ்பெயின்

(நொர்கோபிங்)

பெண்கள் யூரோ கோப்பை கால்பந்துத் தொடரின் காலிறுதிக்கு, ஸ்பெயின் அணி தகுதி பெற்றது.

சுவீடனில் 11ஆவது யூரோ கோப்பை கால்பந்து (பெண்கள்) தொடர் நடைபெற்று வருகின்றது. இதில் ஜேர்மனி, இத்தாலி உள்ளிட்ட 12 அணிகள், மூன்று பிரிவுகளாக லீக் சுற்றில் பங்கேற்கின்றன. நேற்று முன்தினம் நடந்த சி பிரிவு கடைசி லீக் போட்டியில் ரஷ்யா, ஸ்பெயின் அணிகள் மோதின.

முதல் பாதியில் ஸ்பெயின் அணிக்கு, 14ஆவது நிமிடத்தில் வெரோனிகா ஒரு கோல் அடித்தார். ரஷ்ய அணி சார்பில் எலினா (44ஆவ்து நிமிடம்) ஒரு கோல் அடித்தார். முடிவில், போட்டி 1-1 என்ற கோல் கணக்கில் போட்டி "டிரா" ஆனது.

பங்கேற்ற மூன்று லீக் போட்டிகளில், தலா ஒரு வெற்றி, தோல்வி, சமநிலை என, 4 புள்ளிகள் பெற்ற ஸ்பெயின் அணி, காலிறுதிக்கு தகுதி பெற்றது.

ஏற்கனவே, நோர்வே, பிரான்ஸ் அணிகள் காலிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜமேக்காவில் தொடரும் ஊக்கமருந்து சர்ச்சை

லண்டன் ஒலிம்பிக்கில் பங்கேற்றவரான ஜமேக்காவை சேர்ந்த வட்டு எறிதல் வீரர் டிரேவ்ஸ் ஸ்மிக்கிள் ஊக்க மருந்து சர்ச்சையில் சிக்கியுள்ளார். கடந்த மாதம் நடந்த தேசிய தகுதித் தேர்வு போட்டியில் அவரிடம் நடத்தப்பட்ட சிறுநீர் பரிசோதனையில் அவர் தடை செய்யப்பட்ட ஊக்க மருந்தை பயன்படுத்தியது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஊக்க மருந்து எதையும் நான் தெரிந்து பயன்படுத்தவில்லை. ஊக்க மருந்து பரிசோதனை முடிவு எனக்கு ஆச்சரியத்தையும், வருத்தத்தையும் அளிக்கிறது என்று டிரேவ்ஸ் கருத்து தெரிவித்துள்ளார். சமீபத்தில் நடத்தப்பட்ட ஊக்க மருந்து சோதனையில் சிக்கிய 4ஆவது ஜமேக்கா வீரர் டிரேவ்ஸ் ஆவார். ஏற்கனவே அசபா பவல், ஷெரோன் சிம்சன், அலிசன் ரன்டால் ஆகியோர் மாட்டியுள்ளனர்.

# நுழைவுச் சிட்டை விலைகள் அறிவிப்பு

2014

FIFA WORLD CUP

Brasil

அடுத்த ஆண்டு பிரேசிலில் நடைபெறவுள்ள உலகக் கோப்பை கால்பந்துப் போட்டிகளுக்கான நுழைவுச் சிட்டை விலைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதற்கான அதிகாரபூர்வமான அறிவிப்பை சர்வதேச கால்பந்து சம்மேளனமான பிபா நேற்று முன்தினம் அறிவித்தது.

உலகெங்குமுள்ள கால்பந்து இரசிகர்கள் இப்போட்டிகளைக் கண்டுகளிக்க சுமார் முப்பது இலட்சம் நுழைவுச் சீட்டுகள் விற்கப்படவுள்ளன. இந்த நுழைவுச் சிட்டைக்களின் விற்பனை இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தின் பிற்பகுதியிலிருந்து தொடங்கும்.

அதிக ஆர்வம் இருக்காது என்று கருதப்படும் ஆரம்பகட்ட போட்டிகளை காணவரும் வெளிநாட்டு இரசிகர்களுக்கு, நுழைவுச் சிட்டை 90 டொலர்கள் தொடக்கம் கிடைக்கும். ஆனால் இறுதிப் போட்டிகளுக்கோ இந்தக் கட்டணம் ஆயிரம் டொலர்கள் வரை இருக்கும்.

ஆனால் வழக்கம் போல போட்டிகளை நடத்தும் நாடான பிரேசிலில் உள்ளவர்களுக்கு நுழைவுச் சீட்டுக் கட்டணங்களில் சலுகைகள் உண்டு.

அந்நாட்டினருக்கு மட்டும் நான்கு இலட்சம் நுழைவுச் சிட்டைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. உள்நாட்டில் போட்டிகளைக் காண விரும்பும் சில இரசிகர்களுக்கு மிகக் குறைந்த கட்டணமாக 15 டொலர்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மாணவர்கள், முதியவர்கள் அல்லது அரசின் நலத்திட்டங்களை நம்பியுள்ளவர்களுக்கே இந்தக் குறைந்த விலையான 15 டொலர் கட்டண நுழைவுச் சீட்டுக்கள்.

கடந்த முறை தென்னாபிரிக்காவில் போட்டிகள் நடைபெற்ற போது இதே போன்ற மக்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைவிட இது ஐந்து டொலர்கள் குறைவு.

இதன் மூலம் பிபாவும், பிரேசில் உலகக் கோப்பை போட்டிகளின் ஏற்பாட்டுக் குழுவினரும், 2014 ஆம் ஆண்டு போட்டிகளுக்கான நுழைவுச் சிட்டைகள் கட்டணங்கள்தான் இதுவரை இருந்துள்ளதிலேயே மிகக் குறைவானவையாக இருக்கும் என்று அளித்துள்ள வாக்குறுதியை நிறைவேற்றியுள்ளனர் எனத்ட தெரிவிக்கப்பட்டுள்ளது. அனைத்து நுழைவுச் சீட்டுக்களும் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி முதல் பிபா.கொம் எனும் இணையதளத்தின் மூலமே விற்பனை செய்யப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## அரையிறுதியில் செரீனா

சுவீடன் ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், அரையிறுதிக்கு முன்னேறினார்.

உலகின் முதல்நிலை வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் நேற்று முன்தினம் நடைபெற்ற மகளிர் ஒற்றையர் காலிறுதி ஆட்டத்தில், ஸ்பெயின் வீராங்கனை டாமிங்கஸ் லினோவை எதிர்கொண்டார். ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய செரீனா 6-1, 6-1 என்ற செட்கணக்கில் எளிதாக வென்று அரையிறுதியை உறுதி செய்தார். முன்னதாக கடந்த 18ஆம் திகதி நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்றில், ஜார்ஜியாவின் அன்னா டாட்டிஷ விலியை வீழ்த்தியது குறிப்பிடத்தக்கது.

மட்டுவில் வளர்மதி சனசமூக நிலைய ஆண்டு நிறைவு கரப்பந்து

# அச்சுவேலி கலைமகள், ஜொலிபைற்ஸ் இறுதிப் போட்டியில் பலப்பரீட்சை

(மட்டுவில்)

மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையம் நடாத்தும் மாபெரும் கரப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிக்கு அச்சுவேலி கலைமகள் ஜொலிபைற்ஸ் அணிகள் தகுதி பெற்றுள்ளன.

மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் 48ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் இரண்டு பிரிவுகளில் மாபெரும் கரப்பந்தாட்டப் போட்டி நடாத்தப்பட்டு வருகின்றது.

மட்டுவில் வளர்மதி விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் பி பிரிவுக்கான இரண்டு அரையிறுதிப் போட்டிகள் நடைபெற்றன. இதில் முதலாவதாக நடைபெற்ற போட்டியில் மட்டுவில் விநாயகர் அணியும், அச்சுவேலி கலைமகள் அணியும் மோதின. ஐந்து செட்களைக் கொண்டதாக நடாத்தப்பட்ட இப்போட்டியில் அச்சுவேலி கலைமகள் அணி 3-2 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் அணியும், ஜொலி பைற்ஸ் அணியும் மோதின. இதில் ஜொலிபைற்ட் அணி 3-2 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது. பி பிரிவுக்கான இறுதிப் போட்டி நாளை மறுதினம் இரவு 7.00 மணிக்கு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவெளை, ஏ பிரிவுக்கான அரையிறுதிப் போட்டிகளுக்கு அச்சுவேலி ஸ்ரார், அச்சுவேலி விக்னேஸ்வரா, புத்தூர் கலைமதி, ஆவரங்கால் மத்தி ஆகிய அணிகள் தகுதிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## அயர்லாந்து வீரர் ஓய்வு

அயர்லாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ட்ரெண்ட் ஜோன்ஸ்ரன் சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறவுள்ளதாக அறிவித்துள்ளார். இவ்வாண்டு இறுதியிலேயே அவர் ஓய்வுபெறவுள்ளதாக அறிவித்துள்ளார். 2015ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்திற்கு அயர்லாந்து அணி தகுதி பெற்றுள்ள நிலையிலேயே 39 வயதான ட்ரெண்ட் ஜோன்ஸ்ரன் தனது ஓய்வை அறிவித்துள்ளார்.

அவுஸ்ரேலியாவில் பிறந்த ட்ரெண்ட் ஜோன்ஸ்ரன், அயர்லாந்துப் பெண்மணி ஒருவரை மணமுடித்ததைத் தொடர்ந்து அயர்லாந்திற்காக விளையாடுவதற்குத் தகுதிபெற்றார்.

2006ஆம் ஆண்டு தனது 30ஆவது வயதில் இங்கிலாந்திற்கெதிராக தனது சர்வதேசப் போட்டி அறிமுகத்தை மேற்கொண்ட ட்ரெண்ட் ஜோன்ஸ்ரன் அப்போட்டியில் அயர்லாந்து அணியின் தலைவராகவும் செயற்பட்டிருந்தார்.

2007ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தில் சிம்பாப்வே அணிக்கெதிரானபோட்டியில் சமநிலை முடிவைப் பெற்ற அயர்லாந்து அணி பாகிஸ்தானுக்கெதிரான போட்டியில் வெற்றிபெற்று சுப்பர் 8 சுற்றுக்குத் தகுதிபெற்றிருந்தது. பாகிஸ்தானுக் கெதிரான போட்டியில் வெற்றி ஓட்டத்தை ட்ரெண்ட் ஜோன்ஸ் ரனே பெற்றிருந்தார்.

## கால்பந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சை சித்தியெய்தியோர்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கால்பந்தாட்ட சங்கத்தினால் நடாத்தப்பட்ட மத்தியஸ்தர் பரீட்சையில் வடமாகாணத்தைச் சேர்ந்த 14 பேர் சித்தியடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக்கின் ஒழுங்குபடுத்தலினால் இலங்கை கால்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட வடமாகாண கால்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான மத்தியஸ்தர் பரீட்சை கடந்த ஜனவரி மாதம் 26ஆம் திகதி சென். ஜோண்ஸ் கல்லூரியில் இடம்பெற்றது.

இதில் கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த 51 பரீட்சாத்திகள் பங்குகொண்டன. இதில் 35 பேர் தரம் மூன்றிற்கான பரீட்சையும், ஏனையவர்கள் தரம் 2இற்கான பரீட்சையிலும் தோற்றினர்.

உடற்தகுதி மற்றும் எழுத்து மூலப் பரீட்சைகள் நடாத்தபட்டது. இதில் எழுத்து மூலப் பரீட்சையில் பெரும்பாலானோர் சித்தியெய்தியபோதும், உடற்தகுதி தேர்வில் தோல்வி கண்டமை குறிப்பிடத்தக்கது.

இதில் சித்தியடைந்தோர் விபரம் வருமாறு : இராசரத்தினம் பிரணவரூபன் (யாழ்ப்பாணம்), சுந்தரராசா திலீபன் (யாழ்ப்பாணம்), தர்மகுலசிங்கம் சிவாநாதன் (மன்னார்), நடராசா கிருபனாந்தன் (முல்லைத்தீவு), கந்தசாமி ரூபஜெயந்தன் (கிளிநொச்சி), செபமாலை யூடி கென்றி (அல்வாய்), எம். மதுசூதணன் (அல்வாய், யாழ்ப்பாணம்), மகாலிங்கம் சந்திரகுமார் (கரவெட்டி, யாழ்ப்பாணம்), கே. பிரசாந்தா (கரவெட்டி யாழ்ப்பாணம்), செல்வரட்ணம் ஜெயந்தரூபன் (கிளிநொச்சி) ஜெயந்தன் சுதாகர் (புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு), கனகலிங்கம் சுகந்தன் (இணுவில் யாழ்ப்பாணம்), முத்துக்குமார் நகுலேஸ்வரன் (யாழ்ப்பாணம்), மரியநாயகம் ஜெனிஸ்ரன் தயாகுமார் (யாழ்ப்பாணம்). (எஸ்.பி)

## கோப்பாய் வலய மஞ்சி கிண்ண கரப்பந்து

(கோப்பாய்)

மஞ்சி வெற்றிக் கிண்ணத்திற்கான கரப்பந்தாட்டத் தொடரின் கோப்பாய் வலய அணிகளுக்கிடையிலான சுற்றுப் போட்டி இன்றைய தினம் காலை 8.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டு நடாத்தப்படும் இத்தொடரில் ஆண், பெண் என இருபாலாருக்குமிடையில் இடம்பெறவுள்ளது. இதில் பங்குகொள்ளவுள்ள அணிகளை உரிய நேரத்திற்கு வருகை தந்து போட்டி சிறப்புற நடைபெற ஒத்துழைப்புத் தருமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

இதேவேளை, மாவட்ட மட்டப் போட்டிக்ள் விரைவில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (93)

## துரையப்பாவில் இன்று மாவட்ட கால்பந்து

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான மாவட்ட மட்ட கால்பந்தாட்டப் போட்டி இன்றைய தினம் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டித் தொடரில் பிரதேச செயலகங்களில் முதலிரு இடங்கள்ளப் பிடித்துக்கொண்ட அணிகள் மோதவுள்ளன.

இதில் பங்குகொள்ளவுள்ள அணிகள் உரிய நேரத்திற்கு வருகை தந்து போட்டியை சிறப்பான முறையில் நடாத்தி முடிப்பதற்கு ஒத்துழைப்புத் தருமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (93)

## பொற்பதி இந்து, உடுவில் சலஞ்சர்ஸ் இறுதியில் இன்று மோதல்

(மானிப்பாய்)

அமரர் ப. சச்சிதானந்தம் ஞாபகார்த்த மென்பந்து கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி இன்றைய தினம் பிற்பகல் 3.30 மணிக்கு கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

மானிப்பாய் தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் அமரர் ப.சச்சிதானந்தம் நினைவாக கொக்குவில் ஐக்கிய விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் தொட ரின் இறுதிப் போட்டியும், பரிசளிப்பும் இன்றைய தினம் பிற்பகல் கோண்டாவில் இராமகிருஷ்ண மாகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

மென்பந்து கிரிக்கெட் அணிகள் பல பங்குகொண்ட இச்சுற்றுப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டிக்கு உடுவில் சலஞ்சர்ஸ் அணியும், பொற்பதி இந்து அணியும் மோதவுள்ளன.

பா. பாலவரதன் தலைமையில் நடைபெறவுள்ள பரிசளிப்பு நிகழ்வின் பிரதம விருந்தினர்களாக ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான எம். சந்திரகுமார், நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் க. தேவராஜா, யாழ். கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. மாணிக்கராசா, யாழ். கல்வி வலய ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி. மாணிக்கம், கௌரவிருந்தினர்களாக கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலய அதிபர் சண். வாமதேவன், கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அதிபர் செ. இளங்கோ, நவாலி மகா வித்தியாலய பகுதித் தலைவர் கு.நா. விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## வடமாகாண மட்ட கரப்பந்தாட்டம் யாழ். மாவட்டம் சம்பியன்



(மன்னார்)

வடமாகாண விளையாட்டுத்திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட மாகாண மட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் யாழ். மாவட்டம் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

வடமாகாண விளையாட்டுத்திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட மாகாண மட்ட கரப்பந்தாட்டப் போட்டி அண்மையில்மன்னார் நகரசபை மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஆண், பெண் அணிகள் மோதிக்கொண்டன.

ஆண்களுக்கான இறுதிப் போட்டியில் மன்னார் மாவட்ட அணியும், யாழ். மாவட்ட அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய யாழ். மாவட்ட அணி 25-20,25-22,25-23 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற பெண்களுக்கான இறுதிப் போட்டியில் கிளிநொச்சி மாவட்ட அணியும், யாழ். மாவட்ட அணியும் மோதின. இதில் சிறப்பான முறையில் ஆடிய யாழ். மாவட்ட அணி 3-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது. இதன் மூலம் வடமாகாண பெண்கள் கரப்பந்தாட்டப் போட்டியில் யாழ். மாவட்டம் அணி தொடர்ந்தும் ஆறாவது முறையாக சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றி அசத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (93)

# சம்பந்தன் – மாவை மோதலும் விக்னேஸ்வரன் வேட்பாளரானதும்

– டி.பி.எஸ்.ஜெயராஜ் கட்டுரையிலிருந்து

தேர்தல் ஆணையாளர் வட மாகாணசபைக்கு, வரும் ஜூலை 25 முதல் ஆகஸ்ட் 1வரை நியமனப்பத்திரம் தாக்கல் செய்யலாம் என அழைப்பு விடுத்ததுடன் ரி.என்.ஏ யின் ஒருங்கிணைப்புக் குழு கொழும்பில் உள்ள ரி.என்.ஏ அலுவலகத்தில் ஒன்று கூடியது. கூட்டம் பிரதானமாகவும் முதலமைச்சர் வேட்பாளரை தெரிவு செய்வதற்காகவே கூட்டப்பட்டது. சம்பந்தனின் வழிக்கு உடன்பட மாவை சேனாதிராஜா மறுப்பு தெரிவித்ததை தொடர்ந்து கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

மாறாக நடைபெற்ற நிகழ்வுகள் சம்பந்தன் மற்றும் மாவை சேனாதிராஜா இடையேயான மோதல் போக்கை வெளிப்படுத்துவதை நோக்கி முன்னேறியிருந்தன. கூட்டமைப்பு செய்யும் தவறான போக்கை வெளிக்காட்டும் அதேவேளை, அது பதவி மோகம் கொண்ட அரசியல்வாதிகள் தங்கள் சமூகத்துக்காக தங்களையே சுய தியாகம் செய்யும் தலைவர்களாக போலியாக பாசாங்கு பண்ணும் போக்கும் அதில் கலந்திருந்தது. இலங்கை தமிழ் அரசியலில் வெளிச் சக்திகளின் செல்வாக் கிருப்பதையும் அது வெளிச்சத் துக்கு கொண்டுவந்தது.

கிழக்கு மாகாணசபைக்கான தேர்தல் முதல்முறையாக 2008இல் நடந்தபோது தமிழீழ விடுதலைப் புலிகள் வடக்கில் சக்திவாய்ந்த போராட்டப் படையாக இருந்தனர். எனவே அப்போது புலிகளின் ஊதுகுழல்போல செயற்பட்டு வந்த ரி.என்.ஏ யினை போட்டியிட அது அனுமதிக்கவில்லை. தனது நிலைப்பாட்டை நியாயப்படுத்துவதற்காக வடக்கு - கிழக்கு இணைப்பு இல்லாத மாகாணசபை தேர்தல்களில், தாங்கள் போட்டியிடப் போவதில்லை என ரி.என்.ஏ அறிவித்தது. 13ஆவது திருத்தம் போதுமான தல்ல என்கிற தனது வழக்கமான ராகத்தைப் பாடவும் செய்தது.

கடந்த வருடம் கிழக்கு மாகாணசபைக்கு இரண்டாவது முறையாக தேர்தல் நடைபெற்ற போது புலிகள் இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட்டதுடன் ரி.என்.ஏ யினை கட்டுப்படுத்தும் ஒரு சக்தியாகவும் இருக்கவில்லை. தவிரவும் கிழக்கு மாகாணத்தில் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கு ரி.என்.ஏ நன்கு செயற்படக்கூடிய ஒரு வாய்ப்பும் அதற்கு இருந்தது. எனவே ரி.என்.ஏ அதில் போட்டியிட்டு திறமையான வெற்றியினையும் பெற்றது. ரி.என்.ஏ, ஐ.தே.க, மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் என்பன இணைந்திருந்தால் கிழக்கு நிருவாகத்தை கைப்பற்றியிருக்கவும் முடிந்திருக்கும்.

அப்படி நடக்கவில்லை. ஆனால் கிழக்கு மாகாணசபை தேர்தல்களில் ஈட்டிய வெற்றி ரி.என்.ஏ.இற்கு வடமாகாண சபை தேர்தல்களிலும் ஒரு எதிர்பார்ப்பினை தூண்டி விட்டது. தமிழ் தேசியவாத மந்திரம் கிழக்கில் ஆச்சரிய மாக வேலை செய்தது, அதேபோல வடக்கிலும் திறமையாக வேலை செய்யும். தவிரவும் உணர்வுகளைத் தூண்டக்கூடிய விடயங்களான இராணுவப் பிரசன்னம், பாதுகாப்புத் தேவைகளுக்காக காணிகளையும் வீடுகளையும் கையகப்படுத்தும் விடயங்கள் போன்றவை தமிழ் வாக்குகளை கைப்பற்றுவதற்கு சாதகமான ஒரு தளத்தை வழங்கும்.

முதலமைச்சர் வேட்பாளர் தீர்மானத்துல் விக்னேஸ்வரனது தெரிவை சம்பந்தன் விட்டுக் கொடுக்கவில்லை. ரி.என்.ஏ.யின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியு மான எம்.ஏ.சுமந்திரன் இந்த விடயத்தில் சம்பந்தனுக்கு ஆர்வமுடன் துணை நின்றார். ரி.என்.ஏ இரட்டையர்கள் மற்றும் ஏனையவர்களின் விடாப்பிடியான முயற்சியால் இறுதியில் விக்னேஸ்வரன் சம்மதம் தெரிவித்தார்.

விக்னேஸ்வரன் மற்றும் சம்பந்தன் - சுமந்திரன் இரட்டையர்களுக்கு எதிரான கடுந்தாக்குதல்கள் தமிழ் ஊடகங்களின் ஒரு பிரிவின ரால் இப்போது நடத்தப்பட்டு வருகிறது. மேல்தட்டு வர்க்கத் தவர் மற்றும் கொழும்புத் தமிழர், அவர் யாழ்ப்பாணத் துக்கு வெளியே வாழ்ந்த ஒரு மனிதர் அதனால் அவர் மாவையைப் போல ஒரு மண்ணின் மைந்தர் அல்ல என்றும் சித்தரிக்கப்படுகிறது.


இந்தப் பிரசாரத்தின் ஒரு பகுதியாக மட்டக்களப்பு மாவட்ட ரி.என்.ஏ நாடாளுமன்ற அங்கத்தவர் பி.அரியநேந்திரன் அவர்களால் ஒரு கொமய அறிக்கை வெளியிடப் பட்டுள்ளது. விக்னேஸ்வரன் என்கிற மனிதருக்கு நல்லூர் கோவில் மட்டும்தான் தெரியும் அதேநேரம் சேனாதிராஜா வடக்கு மற்றும் கிழக்கு ஆகிய அனைத்து பகுதிகளுக்கும் பரிச்சயமானவர் என்று அவர் ஏளனமாகக் குறிப்பிட்டுள்ளார்.

அரியநேந்திரன் மேலும் குற்றம்சாட்டுவது விக்னேஸ்வரனின் பிள்ளைகள் சிங்களவர் களை திருமணம் செய்துள்ளதால் அவர் சிங்களப் பெரும்பான்மையினரின் வலைக்கண்ணியில் அகப்பட்டுள்ள ஒருவர் என்று. ஆகவே விக்னேஸ்வரனின் தமிழ் தேசியவாத நல்லெண் ணத்தைப் பற்றி சந்தே கிக்க வேண்டியுள்ளது என்று அரியநேந்திரன் சாடுகிறார்.

சேனாதிராஜா சார்பானவர்களின் நோக்கம் ஊடகங்களினூடாக விக்னேஸ்வரனை இலக்கு வைத்து முதலமைச்சர் பங்கி லிருந்து வெளியேற நிர்ப்பந் திப்பதே எனத் தெரிகிறது.




# புற்றுநோயை அறிய உதவும் சீனி!



ஆராய்ச்சியாளர்கள் காந்த ஒத்ததிர்வு படமெடுத்தல் (எம்.ஆர்.ஐ. ஸ்கான்) சோதனையின் போது வெளிச்சத்திற்காக கட்டிகள் மேலே சீனியைப் பயன்படுத்தி புற்றுநோயைக் கண்டறியும் புதிய மற்றும் மலிவான உத்தியை உருவாக்கியுள்ளனர். அதாவது மனிதனின் மற்ற கலங்களை விட புற்றுநோய் கலங்கள் தங்களது வளர்ச்சிக்கு அதிகமான சீனியை ஈர்த்துக் கொள்கின்றன.

இதனால் புற்றுநோயின் கலங்களை எளிதாக காண்பதற்கு இந்த புது நுட்பத்தை "குளுக்கோஸ் இரசாயன பரிமாற்றம் (glucoCEST)" என்று பெயரிட்டுள்ளனர். எம்.ஆர்.ஐ. ஸ்கான் பயன்படுத்துவதற்கு முன்பே மனிதனின் உடலுக்குள் குளுக்கோஸ் செலுத்தப்படும், புற்றுநோய் கலங்கள் அதிகமாக ஈர்த்துக் கொள்ளவதால் எம்.ஆர்.ஐ. ஸ்கான்களில் எளிதாக அடையாளம் காணலாம்.

# முதல் ஊரடங்கு!



இற்றைக்கு 1,000 ஆண்டுகளுக்கு முன்னால் இங்கிலாந்து நாட்டு நகரங்களில் இரவு 8 மணிக்கு ஒரு நீண்ட மணியொலி ஒலிக்கப்பட்டது. எல்லாக் கிராமங்களிலும் நகரங்களிலும் இப்படி மணியொலி எழுப்பப்பட வேண்டும் என்று கட்டளையிட்டவர் வில்லியம் என்ற அரசர்.

இந்த மணியொலி கேட்டவுடன், மக்கள் தத்தம் இல்லங்களில் உள்ள விளக்குகளை அணைத்துவிட்டுப் படுக்கைக்குச் செல்ல வேண்டும் என்பது அரச கட்டளை.

இதற்குக் காரணமும் இருந்தது. அந்தக் காலத்தில் பெரும்பாலான இங்கிலாந்து வீடுகள் மரத்தால் (தேக்கு மரம்) கட்டப்பட்டு இருந்தன. இரவு நெடுநேரம் விளக்கெரிந்தால் வீடுகள் தீப்பிடித்துக் கொள்ளும் அபாயம் என்பதால்தான் இந்த அரச கட்டளை!

இந்த ஊரடங்கு உத்தரவு 100 ஆண்டுகளுக்குப் பிறகு வாபஸ் பெறப்பட்டது. இதுதான் உலகின் முதல் ஊரடங்கு உத்தரவு.

# திசை காட்டும் செடி!

சூரியகாந்திப் பூ சூரியனை நோக்கித் திரும்புவதால் அந்தப் பெயர் வந்தது என்பது உங்களுக்குத் தெரியும். இதற்கு என்ன காரணம்?

இந்தப் பூவில் உள்ள "போட்டோட்ரோபிஸம்" என்ற இயக்கம்தான். இந்த இயக்கத்துக்கு சூரியனின் ஒளிக்கதிர் மிகவும் அவசியம். இதனால் இந்தப் பூ சூரியனைப் பின்பற்றி கிழக்கு, மேற்கு திசை களைக் காட்டக்கூடியதாக உள்ளது.

இதே போல, "சில்பியம் லசினியேற்றம்" என்ற செடியும் திசை காட்டும் வேலையைச் செய்கின்றது. இந்தச் செடி வட ஆபிரிக்காவில் காணப்படுகிறது. 6 அடி உயரம் வரை இந்தச் செடி வளரும். தண்டின் அடிப் பகுதியில் நிறைய இலைகளும் மேலே செல்லச் செல்ல இலைகள் குறைந்து கொண்டும் வரும். இந்த இலைகள் சொரசொரப்பாகவும் எதிர் எதிராகவும் இருக்கும்.

இந்தச் செடியின் ஆச்சரியம் என்னவென்றால் இலைகள் வடக்கும் தெற்குமாகவே எப்போதும் இருக்கும். திசைகாட்டிக் கருவியில் (கொம்பஸ்) உள்ள காந்த முள் வடக்கும் தெற்குமாக நின்று திசை யைக் காட்டுவது போல இந்த இலையும் திசைகாட்டும் வேலையைச் செய்கின்றது. இதனால் இந்தச் செடிக்கு "கொம்பஸ் செடி" என்ற பெயரும் உண்டு.



# காவியக் கவிஞர் (1931-2013)



❀ "எழுதப் படிக்கத் தெரியாத எத்தனையோ பேர்களில் எமனும் ஒருவன். ஒரு அழகிய கவிதைப் புத்தகத்தைக் கிழித்துப் போட்டுவிட்டான்" - கண்ணதாசன் இறந்தபோது வாலி எழுதிய கண்ணீர் வரி இது!

❀ அம்மா, பொய்க்கால் குதிரைகள், நிஜ கோவிந்தம், பாண்டவர் பூமி, கிருஷ்ண விஜயம், அவதார புருஷன் என 15 புத்தகங்கள் எழுதி இருக்கிறார்.

❀ பொய்க்கால் குதிரை, சத்யா, பாத்தாலே பரசவம், ஹேராம் என நான்கு படங்களில் நடித்து இருக்கிறார் வாலி!.

❀ எவ்வளவோ அழைப்புகள் வந்தும் எந்த வெளிநாட்டுக்கும் சென்றதில்லை கவிஞர் வாலி, பாஸ்போர்ட்டே இல்லாத பாட்டுக்காரர்!

❀ வாலியின் காதல் மனைவி ரமணத்திலகம். இந்தக் காதலை ஊக்குவித்துத் திருமணம் செய்யத் தூண்டியவர்கள், நடிகைகள் பத்மினி, ஈ.வி.சரோஜா இருவரும். ரமணத்திலகம், பத்மினி, ஈ.வி.சரோஜா மூன்று பேரும் வழுவூர் ராமையாப்பிள்ளையின் மாணவிகள்.

❀ இதுவரை திரையிசைப் பாடல்களாக 15,000 க்கு மேல் எழுதி இருக்கிறார். தனிப்பாடல்கள் கணக்கில் அடங்காது.

❀ சினிமாவுக்குப் பாட்டெழுத அழைத்து வந்தவர் டி.எம்.சௌந்தர்ராஜன். ஸ்ரீரங்கத்தில் இருக்கும்போதே ஒரு தபாலட்டையில் டி.எம்.எஸ்ஸுக்கு எழுதி அனுப்பியது தான் மிகவும் வெற்றி பெற்ற "கற்பனை என்றாலும் கற்சிலை என்றாலும் கந்தனே உனை மறவேன்" பாடல்.

❀ 17 திரைப்படங்களுக்கு திரைக்கதை வசனம் எழுதியிருக்கிறார் வாலி, அவற்றில் கலியுகக் கண்ணன், காரோட்டிக் கண்ணன், ஒரு செடியின் இரு மலர்கள், சிட்டுக் குருவி, ஒரே ஒரு கிராமத்தில் போன்றன சில. மாருதிராவோடு சேர்ந்து டைரக்ட் செய்த ஒரே படம் வடை மாலை!

❀ எம்.ஜி.ஆர். - சிவாஜி இருவருக்கும் விருப்ப மான கவிஞர். எம்.ஜி.ஆர். எப்பவும் "என்ன ஆண்ட வனே" என்று அழைப்பார். சிவாஜிக்கு வாலி "என்ன வாத்தியாரே"!

❀ வாலி கவிதை அளவுக்கு கிரிக்கெட் பிரியர். ஒவ்வொரு விளையாட்டு வீரரின் வரலாறு, அவர்களின் திறன், ஸ்டைல் எல்லாவற்றைப் பற்றியும் விலாவாரியாகப் பேசுவார்.

❀ எங்கேயிருந்தாலும் ஆங்கிலப் புத்தாண் டன்று வாலியைத் தேடிக் கண்டுபிடித்து, ஆசி பெற்றுவிடுவார் ஏ.ஆர்.ரஹ்மான், இன்னும் பழநிபாரதி, நா.முத்துக்குமார், பா.விஜய், நெல்லை ஜெயந்தா, தாமரை என எல்லாக் கவிஞர்களும் சங்கமமாகும் இடம் வாலியின் இல்லம்!

❀ வாலியின் 50 ஆண்டு கால நண்பர் ஜெயகாந்தன். இருவருக்கும் உள்ள நெருக்கத்தைப் பார்ப்பவர்கள் ஆச்சர்யப்படுவார்கள்!

❀ ஸ்ரீரங்கத்தில் "பேராசை பிடித்த பெரியார்" என்னும் சமூக நாடகத்துக்கு "இவர்தான் பெரியார்! இவரை எவர்தான் அறியார்?" என்ற பாடல் எழுதி பெரியாராலே பாராட்டப்பெற்ற அனுபவம் வாலிக்கு உண்டு!

❀ இயக்குனர் வசந்த பாலன் இயக்கத்தில் தயாராகும் படத்தில், ஏ.ஆர். ரஹ்மான் இசையமைப் பில் அவர் எழுதிய பாடல்தான் கடைசிப் பாடலாகும்.

இந்தியாவில் அதிக எண்ணிக்கையில் பாடல் எழுதிய பாடலாசிரியர் வாலியாகத்தான் இருக்க முடியும். எம்.ஜி.ஆர். - சிவாஜி தொடங்கி நடித்துக் கொண்டிருக்கும் நான்காம் தலைமுறை வரைக்கும் பாட்டெழுதிய பெருமை அவருக்கு உண்டு.

கண்ணதாசன் என்ற கவியரசருக்கு சற்றே இணையாக நெடுந்தூரம் நடந்து வந்த சிறப்பும் வாலிக்கே வாய்த்தது. எஸ்.எம்.சுப்பையா நாயுடு முதல் ஏ.ஆர்.ரகுமான் வரை எத்தனையோ இசையமைப்பாளர்களுக்கு வரிகளால் வலிமை சேர்த்தார்.

எம்.ஜி.ஆரின் பிம்பத்தை உயர்த்திப் பிடித்ததில் வாலியின் வார்த்தைகளுக்கு பெரும்பங்கு உண்டு. திராவிட இயக்க அரசியலை சாகித்தியத்தில் கொண்டு வந்த சாமர்த்தியம் வாலிக்கு வசப்பட்டிருந்தது. "மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும்" என்று எம்.ஜி.ஆருக்கு எழுதியவர், கலைஞரின் மைந்தர் மு.க.முத்துவுக்கு "மூன்று தமிழ் தோன்றியதும் உன்னிடமோ, நீ மூவேந்தர் வழி வந்த மன்னவனோ" என்று எழுதினார். மூன்று



என்ற தொடங்கும் பல்லவியை இரண்டு பேருக்கும் பயன்படுத்தி இரு சாராரின் மனம் கவர்ந்த திறமை வாலிக்கு மட்டுமே வரும்.

வாழ்வின் நிறைவுக்காலத்தில் நோய்களை சந்தித்தாலும் நொந்து கொள்ளாதவர். "தாய்கொண்டு வந்ததை தாலாட்டி வைத்ததை நோய்கொண்டு போகும் காலம் அம்மா" என்று எழுதிய வாலி தன் வரிகளையே தனக்கு இரங்கல் பாடலாக்கி இறந்து விட்டார்.

- வைரமுத்து -

# வழிந்தும் வழியாமலும்

- கலாப்ரியா -



கிட்டுப்பிள்ளை அரிசிக்கடை வைத்திருந்தார். ராத்திரி கடையெல்லாம் அடைத்த பின் சாப்பிட்டு விட்டுத் தெருத் திண்ணையில் உட்கார்ந்து "காத்தாட" பேசிக் கொண்டிருக்க வருவார். பெரும்பாலும் செகண்ட் ஷோ சினி-மாதான் போக முடியும். ஆனால் ஒரு படம் தவற விடமாட்டார். என்னை விட மூத்தவர்.

பின்னணிப் பாடகர் பாடகியர் பற்றி அவருக்கு ஒரு அபார ஞானம் உண்டு. தேவதாஸ் படத்தில் "எனது வாழ்வின் புனித ஜோதி எங்கே சென்றாயோ..." என்று பாடும் "ராணி" யின் குரல் அவரது ஃபே-வரிட். இந்த ராணி பின்னாளில் நாகூர் ஹனீபாவுடன் பாடிக் கொண்டிருந்தார். "அருமறையின் திருமொழியில் மறைந்திருப்பது என்ன...?" என்ற ஹனீஃபாவின் பாட லில் பதில் குரலாக ஒலிப்பது ராணியின் குரல்தான். ஏ.பி. கோமளாவின் "முல்லை மலர்க் காடு... எங்கள் மன்னவர் தன்னாடு..." என்று "ராணி சம்யுக்தா" படத்தில் வரும் பாடல் அவருக்கு ரொம்பப் பிடிக்கும். பாலசரஸ்வதி தேவி பாடிய "நீலவண்ணக் கண்ணா வாடா..."வும் அவருக்குப் பிடித்தமானது. டி.எஸ். பகவதியின் "கனவு கண்டேன் நான் கனவு கண்டேன்..." பாடலும், எஸ். வரலட்சுமியுடன் பாடும் "தென்றல் வந்து வீசாதோ தெம்மாங்கு (சிவகங்கைச் சீமை)பாட்டும் ரொம்பப் பிடிக்கும். சிவகங்கைச் சீமை இசைத்தட்டுகள், (ஒலிச்சித்திரம், பாடல்கள்) வாங்கச் சொல்லி தெருவின் பணக்காரப் பையனிடம் சொல்லிக் கொண்டே இருப்பார். அவன் வீட்டில்தான் ரேடியோகிராம் உண்டு. அவன் "கட்டபொம்மன்" ஒலிச்சித்திரம் வாங்கினானேயொழிய இதை வாங்கவில்லை. "நம்ம கிட்ட வக்கு இல்லாமப் போச்சே" என்று சலித்துக் கொள்ளுவார்.

"சக்கரவர்த்தி திருமகள்" படத்தில் எஸ். வரலட்சுமி பாடும் "ஏமாற்றம் தானா என் வாழ்விலே..." பாட்டுக்கும் உருகுவார். பி.பி.ஸ்ரீனிவாஸ் மீதும் அவருக்கு மோகம் உண்டு. "மணமா-லை" என்ற படத்தில் "நெஞ்சம் அலை மோதவே கண்ணும் குளமாகவே..." என்று ஒரு பாடல். அடிக்கடி சிலோன் ரேடியோவில் போடுவான். அதை என்னிடம் மறக்காமல் எழுதித் தரும்படி கேட்பார். எழுதித் தந்தேன், "தெய்வபலம்" என்றொரு டப்பிங் படம் அதில் வரும் "மலரோடு விளையாடும் தென்றலே வாராய்..." பாட்டில் ஜானகியும் பி.பி.ஸ்ரீனிவாஸும் செய்யும் ஜாலங்களை அப்படிப் பேசுவார்.


அப்போதெல்லாம் ஜானகியின் பாடல்களை அபூர்வமாகவே படங்களில் கேட்க முடியும். ஸ்ரீதருக்கும் பி. சுசிலாவுக்கும் ஏற்பட்ட மனத்தாங்கலில் சுசிலாவை முற்றாகத் தவிர்த்த ஸ்ரீதர், சுமைதாங்கி, போலீஸ்காரன் மகள் படங்களில் பி.பி.எஸ் - எஸ்.ஜானகி ஜோடியைக் கொண்டு வந்தார். பாலும் பழமும், தாய் சொல்லைத் தட்டாதே, தாயைக் காத்த தனயன், என்று அப்போதெல்லாம் டி.எம்.எஸ் - சுசிலா மட்டுமே எல்லாப் பாடல்களையும் ஒரு படத்தில் பாடுகிற காலம் ஒன்று இருந்தது. ஜானகி "ஜல் ஜல் என்னும் சலங்கை ஒலி..." போல ஏதாவது ஒரு பாடலை அபூர்வமாகப் பாடுவார். நிச்சயம் அது சிறந்த பாடலாகவே இருக்கும். மிகப் பெரிய எழுத்தாள நண்பரிடம் அப்போது பேசிக்கொண்டிருந்த போது.... "ஆஷா போன்ஸ்லே மாதிரி செக்ஸி வாய்ஸில் பாட ஜானகிதான் சரி" என்று சொன்னேன். "ஜானகிக்கு செக்ஸி வாய்ஸா" என்று சிரித்தார். அவர், "சிங்கார வேலனே தேவா"வை விட்டு விலகாதவர். பின்னாளில் ஜானகி பாடாத படமே இல்லையென்ற இளையராஜா காலத்தில் "நேத்து ராத்திரி யம்மா..." கேட்டபோது இந்த உரையாடலை அவரே ஞாபகப்படுத்திச் "சரியாதான் சொல்லியிருக்கீங்க" என்று சிரித்தார்.

கிட்டுப்பிள்ளைச் சித்தப்பாவுக்கு "எங்க வீட்டுப் பெண்" படத்தில் பி.பி.எஸ் பாடும், "சிரிப்புப் பாதி அழுகை பாதி..." பாடல் ரொம்பப் பிடிக்கும். "தத்துவப்பாடலை இப்படித்தாண்டா பாடணும்" என்பார். ஆடிப்பெருக்கு படத்தில், சுரதா எழுதி, பி.பி.எஸ் பாடிய "புரியாது புரியாது வாழ்க்கையின் ரகசியம் புரியாது" பாடலை உதாரணமாகச் சொல்லுவார். "அவள் யார்" என்று ஒரு படம், சிவாஜி பண்டரிபாய் என்று நினைவு. எஸ். ராஜேஸ்வரராவ் இசை. இயக்கம் கே.ஜே. மகாதேவன் (ஜெமினி கதை இலாகாவின் கே.ஜே.மகாதேவன், சிறந்த திரைக்கதை ஆசிரியர். "வஞ்சிக்கோட்டை வாலிபன்", "ஆயிரத்தில் ஒருவன்" எல்லாம் "இவர்" திரைக்கதைகள்.) அவள் யார் படத்தில் ஒரு வங்காளப் பாடகர் "ரகுநாத் பாணிக்ரஹி" (பெயர் சரியாய் நினைவில்லை, பட்டப்பெயர் பாணிக்ரஹி) பாடிய "கண் காட்டும்..." என்றொரு பாடல், அதெல்லாம் அவருக்கு ரொம்பப் பிடிக்கும். "நீ யாரோ, நான் யாரோ, நிலையற்ற வாழ்விலே யாருக்கு யார் யாரோ..." என்று ஒரு பாடல் அது பாணிக்ரஹியா, டி.ஏ. மோதியா என்று நினைவில்லை. அதுவும் அவருக்குப் பிடித்த பாடல். "அல்லி பெற்ற பிள்ளை" என்று ஒரு படம், அதில் குதிரை பாடுவதாக ஒரு பாடல் வரும், "எஜமான் பெற்ற செல்வமே...." என்று ஒரு பாடல். அது திருச்சி லோகநாதனென்று நினைத்துக் கொண்டிருந்தேன். இல்லை, அது ஜி.ராமனாதன் பாடியது என்று கிட்டப்பா சொல்லுவார். (இசை: கே.வி. மகாதேவன்). அவருக்கு அபூர்வக் குரல்கள் மீது ஒரு அலாதிப் பிரியம். மாடர்ன் தியேட்டர்ஸ் "கவிதா" என்றொரு படம் எடுத்தார்கள். "குமுதம்" படத்தை அடுத்து வந்தது. அவ்வளவு எதிர்பார்ப்புடன் வந்தது. படம் படு ஃப்ளாப். பி.பி.எஸ். ஜமுனாராணி ஹம்மிங்குடன் "பறக்கும் பறவைகள் நீயே" பாடலும் மற்ற பாடல்களும் நன்றாக இருக்கும்.

கிட்டுச் சித்தப்பாவுக்கு கல்யாணமானது, ஆனால் மனைவிக்கு இவரைப் பிடிக்கவில்லை. ஒரு நாள் இரவு அவர் "ஒண்ணுமே புரியலை உலகத்திலே.." என்று சந்திரபாபு பாடலைப் பாடிக் கொண்டே வந்தார். வழக்கமாக சிரித்தபடிதான் வந்தார். இது "குமாரராஜா" படத்துல, இதுல பாலையா பாடும் "மணமகளாக வரும் மங்கையெவளோ...." பாட்டைக் கேட்டிருக்கீங்களாப்பா... யாரும்..." என்றார். எல்லோரும் என்னை ஒரு கள்ளச் சிரிப்புடன் பார்த்தார்கள். நான் ஆமா வி.என்.சுந்தரம் பாடியது என்றேன். அதுக்குத்தான் சின்னவன் வேணுங்கிறது என்றார். மறுநாள்தான் தெரிந்தது, சித்தப்பா, சந்திரபாபு மாதிரியே மனைவியைக் கும்பிடு போட்டு காதலனிடமே அனுப்பி விட்டார் என்று.

# வேர்டில் இலக்கணப்பிழை சோதனை

வேர்ட் புரோகிராமில், டெக்ஸ்ட்டின் இலக்கணத்தைச் சோதனை செய்திடும் முழுமையான புரோகிராம் ஒன்று உள்ளது. பொதுவான இலக்கணப்பிழையைகளை இது சுட்டிக்காட்டும். ஒவ்வொரு இலக்கணப்பிழையும் சுட்டிக்காட்டி, அதனைத் திருத்தி அமைப்பதற்கான சந்தர்ப்பத்தினையும் தரும். வேர்ட் புரோகிராமில், பல வகையான டெக்ஸ்ட் மாதிரிகள் வடிவமைத்துத் தரப் பட்டுள்ளன. நீங்கள் இலக்கணப்பிழை சுட்டியை இயக்குகையில், இவற்றில் ஏதேனும் ஒன்றைத்தேர்ந்தெடுக்கலாம். ஒவ்வொரு மாதிரியும், அதற்கென பல இலக்கண விதிகளைக் கொண்டிருக்கும். சில வகை மாதிரி, கட்டாயம் பின்பற்ற வேண்டிய சில விதிமுறைகளைக் கொண்டு, அவை பின்பற்றப்படுகின்றனவா எனக் கண்காணிக்கும். வேறு சில, வளைந்து கொடுக்கும் தன்மை கொண்ட இலக்கண விதிகளைப் பின்பற்றும். உங்கள் டொகுமெண்ட்டிற்கு ஏற்ற விதி முறைகளைக் கொண்டுள்ள மாதிரியை நீங்கள் தேர்ந்தெடுத்து, இலக்கணப் பிழை சோதனையை மேற்கொள்ளலாம். இதனைத் தேர்ந்தெடுக்கும் வழி கீழே தரப்பட்டுள்ளது.




1. முதலில் Word Options lanyhf பொக்ஸைத் திறக்க வேண்டும். வேர்ட் 2007 தொகுப்பில், Office பட்டனை அழுத்திக் கிடைக்கும் விண்டோவில், Word Options என்பதில் கிளிக் செய்திடவும். வேர்ட் 2010இல், ரிப்பனில் உள்ள File டேப்பினைத் திறந்து, பின்னர் Options என்பதில் கிளிக் செய்திடவும்.

2. அடுத்து டயலொக் பொக்ஸின் இடது பக்கத்தில் உள்ள Proofing என்ற ஒப்ஷனைத் தேர்ந்தெடுக்கவும்.

3. அடுத்து Settings என்னும் பட்டனில் கிளிக் செய்திடவும். வேர்ட் Grammar Settings டயலொக் பொக்ஸினைக் காட்டும்.

4. இங்கு உள்ள Writing Style கீழ்விரி மெனுவில், இலக்கணம் மட்டும் சோதனையிட வேண்டுமா? அல்லது, ஸ்டைல் சேர்த்து பிழைகள் உள்ளனவா என்று பார்க்க வேண்டுமா? என்பதனை நீங்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்.

5. நீங்கள் இந்தச் சோதனையில், எந்த வகை ஸ்டைல மற்றும் இலக்கணப் பிழை சோதனை தேவை என்பதனைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பின்னர், அடுத்தடுத்து இரண்டு முறை ஓகே கிளிக் செய்து வெளியேறவும்.

# பாட்டுக் கேட்டால் பற்றரி சார்ஜ் ஆகிவிடும்!



பிரிட்டனில் ஒரு பொறியியலாளர் பற்றரி தீர்ந்து போகும் போது இயர். ஃபோன் ஒன்றை மாட்டி பாட்டுக் கேட்டுக்கொண்டே 50 நிமிடம் உட்கார்ந்தால் அந்த ஹெட்ஃபோன்ல இருக்கிற சோலர் சார்ஜர் அப்படியே பாட்டையும் கேட்க வைக்கும் அதேசமயம் மொபைலையும் சார்ஜ் பண்ணும் டெக்னோலஜியைக் கண்டு பிடித்துள்ளார்...

# ஹெட்போனில் பாட்டுக் கேட்பவர்களை எச்சரிக்கும் புதிய ஆய்வு!

ஹெட்ஃபோன்களை அதிக ஒலியுடன் உபயோகிப்பதால் 4 பேரில் ஒருவருக்கு, காது செவிடாகும் ஆபத்து உள்ளது என நியூயோர்க் நகர சுகாதார துறை தெரிவித்துள்ளது. இன்றைய இளைஞர்களை அதிகம் பாதிப்பது காது வலி பிரச்சினைதான். காது மூக்கு, தொண்டை நிபுணர்களை சந்திக்கப் போனால் 10இல் 8 பேர் இளைஞர்களாகவும், சிறுவர்களாகவும் இருக்கின்றனர். காரணம் மணிக்கணக்கில் ஹெட்ஃபோன் மாட்டிக்கொண்டு பாட்டுக்கேட்பதுதான். யாருக்கும் தொந்தரவு கொடுக்காமல் தனக்கு மட்டுமே கேட்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஹெட்போன்களில் சத்தமாக பாடல்களைக் கேட்பதால் காது தொடர்பான பிரச்சினைகள் அதிகம் ஏற்படுவதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே ஹெட்ஃபோனில் அதிக நேரம் பாட்டுக் கேட்பவர்களுக்கு மூளை பாதிப்பு வரும் என்று கூறப்பட்ட நிலையில் காது செவிடு பிரச்சினையும் எச்சரிக்கை மணி அடித்துள்ளது.

நியூயோர்க் நகர சுகாதாரத்துறை 18 வயது முதல் 44 வயதுக்குட்பட்டவர்களிடையே கருத்துக் கணிப்பு நடத்தியது. இதில் எம்.பி 3 கேட்பதற்கு ஹெட்ஃ.



போன்களை (MP3 listeners) உபயோகிப்பவர்களுக்கு காது பிரச்சினை வரும் ஆபத்து இரு மடங்காக உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


காது கேளாமையை கண்டிப்பாக தவிர்க்கலாம். தினசரி குறைந்த அளவு சத்தத்தில் பாடல் கேட்பதோடு, அடிக்கடி காதுக்கு ஓய்வு கொடுக்கவேண்டும் என்கின்றனர் நிபுணர்கள்.

# விண்டோஸ் எக்ஸ்பி பாவனையாளர்களுக்கு ஓர் எச்சரிக்கை!




விண்டோஸ் எக்ஸ்பி இயங்குதளத்தை தங்களது கணினிகளில் நிறுவியிருப்பவர்களை உடனடியாக மேம்படுத்தப்பட்ட பதிப்பொன்றுக்கு மாறி விடுமாறு இந்திய அரசின் சைபர் பாதுகாப்புப் பிரிவு அறிவுறுத்தியுள்ளதாக NDTV செய்தி வெளியிட்டுள்ளது. விண்டோஸ் எக்ஸ்பியை ஹேக்கர்கள் இலகுவாக ஊடுருவி மிகப்பெரிய கணினி (சைபர்) தாக்குதல்களை மேற்கொள்ளத் திட்டமிட்டிருப்பதே இந்த அறிவுறுத்தலுக்கான காரணமென தெரிய வருகின்றது. மேலும் மைக்ரோசொப்ட் நிறுவனமும் விண்டோஸ் எக்ஸ்பிக்கான உதவிகளை அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்துடன் நிறுத்திவிடுவதாக தெரிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. இதனால் விண்டோஸ் எக்ஸ்பிக்கான பாதுகாப்பு மேம்படுத்தல்கள் எவையும் மைக்ரோசொப்டிடம் இருந்து கிடைக்காமல் போகும் நிலை உருவாகிவிடும். இந்நிலையில் மைக்ரோசொப்ட் நிறுவனத்திடமிருந்து இறுதியாக வெளிவந்த பாதுகாப்பான இயங்குதளமாக விண்டோஸ் 8 கருதப்படுகின்றது.

# ஜிமெயில் செய்தியில் படங்கள் ஒட்டி அனுப்ப




மின்னஞ்சல் பயன்படுத்துவோர் அனைவரும் ஜிமெயில் அக்கவுண்ட் உள்ளவர்களாக இருப்பது இன்றைய நடைமுறை ஆகிவிட்டது. இதனைப் பயன்படுத்தாதவர் கூட, எதற்கும் இருக்கட்டும் என மெயில் அக்கவுண்ட் ஒன்றை உருவாக்கி வைத்துக் கொள்கின்றனர்.

ஜிமெயில் பயன்படுத்துவோர் பலரும் சந்திக்கும் ஒரு சின்ன பிரச்சினையை இங்கு பார்ப்போமா! போட்டோக்கள் மற்றும் படங்களை, தங்கள் மெயில்களுடன் அனுப்ப விரும்புபவர்கள், அவற்றை இணைத்துத்தான் அனுப்புகின்றனர். அஞ்சலின் ஒரு பகுதியாக ஒட்டி அனுப்ப இயலவில்லை. ஜிமெயில் அஞ்சலில் படம் ஒன்றை ஒட்டி அனுப்பும் வழி முறைகளை இங்கு காணலாம்.

ஜிமெயில் தளத்தைத் திறந்து, Gmail Labs செல்லவும். (இதற்குச் சென்று அதிகப் பழக்கம் இல்லை என்றால், ஜிமெயில் அக்கவுண்ட் செட்டிங்ஸ் சென்று, அங்கு டுயடிள என்னும் டேப்பில் கிளிக் செய்திடவும்.) இங்கு வரிசையாக நமக்கான வசதிகளை செட் செய்திட டூல்ஸ்கள் நீளக் கட்டங்களில் தரப்பட்டிருக்கும். இதில் "Inserting Images" என்ற டூல் கட்டத்திற்குச்செல்லவும். அருகில் உள்ள இரண்டு ஒப்ஷன்களில் "Enable" என்ற ஒப்ஷனைத் தேர்ந்தெடுக்கவும். பின்னர், அப்படியே கீழாகச் சென்று, "Save Settings" என்பதில் கிளிக் செய்திடவும்.

இனி உங்கள் ஜிமெயில் அக்கவுண்ட்டைத் திறந்தால், அதில் போட்டோ மற்றும் படங்களை இணைக்க ஒரு பட்டன் கிடைக்கும். இதனைக் கிளிக் செய்து, அவற்றை மெயிலின் டெக்ஸ்ட்டுடன் இணைக்கலாம்.

போட்டோ குறித்த குறிப்புகளைக் கீழாக எழுதலாம். இவ்வாறு போட்டோவினை இணைக்கையில் கூகுள் Remember: Using others' images on the web without their permission may be bad manners, or worse, copyright infringement" என ஓர் எச்சரிக்கை தரும். ஏனென்றால், போட்டோ மற்றும் படங்களின் உரிமையாளரின் அனுமதி இன்றி, அவற்றை உங்கள் மெயிலில் பயன்படுத்துவது தவறாகும்.

நீங்கள் படம் ஒன்றைத்தேர்ந்தெடுத்தவுடன், ஜிமெயில் அதனை நீங்கள் Insert Image என்பதில் கிளிக் செய்தவுடன், உங்கள் ஜிமெயில் செய்தியில், கேர்சரை எங்கு வைத்திருக்கிறீர்களோ, அங்கு ஒட்டிவிடும். இந்தப் படத்தின் அளவை நீங்கள் விரும்பும் வகையில் சுருக்கலாம். அல்லது அந்த படம் எப்படி இருக்கலாம் என்பதற்கு ஜிமெயில் தளத்திலேயே Small, Medium, Large, and Original Size என நான்கு ஒப்ஷன் கிடைக்கும். அதில் ஒன்றை நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்.

ஸ்மார்ட் போன்கள் எனும் போது சம்சுங், அப்பிள், எச்.டி.சி தொடர்பான பெயர்களே அதிகமாக பேசப்படுபவையாக உள்ளன. ஆனாலும் நொக்கியா போன்ற சில நிறுவனங்கள் ஸ்மார்ட் போன் சந்தையில் தம்மை நிலைநாட்டிக் கொள்ளும் பொருட்டு பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. அந்த வகையில் தற்போது நொக்கியா 41 மெகாபிக்ஸலுடன் கூடிய ஸ்மார்ட் போன் ஒன்றினை அறிமுகம் செய்துள்ளது. இப் புதிய ஸ்மார்ட் போன் கமராவின் மூலம் இதுவரை சாத்தியப்படாத அளவு துல்லியமான படங்களை எடுக்க முடியுமென நொக்கியா தெரிவிக்கின்றது.

# நொக்கியா அறிமுகப்படுத்தும் Lumia 1020!






விண்டோஸ் மூலம் இயங்கும் குறித்த ஸ்மார்ட் போனானது லுமியா வரிசையைச்சேர்ந்தது. Lumia 1020 எனப் பெயரிடப்பட்டுள்ளது. நொக்கியாவும், மைக்ரோசொப்டின் விண்டோஸுடன் இணைந்து தன்னால் முடியுமான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு ஸ்மார்ட் போன் போரில் வெற்றிகொள்ளவே முயற்சிக்கின்றது.

ஆனால் ஸ்மார்ட் போன்களை பொறுத்தவரையில் அதிகமான பாவனையாளர்கள் அதில் கமராவிற்கு கொடுக்கும் முக்கியத்துவம் மிகக்குறைவு என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

# அனர்த்தங்களை எதிர்கொள்வது எப்படி?

## யாழ்.செயலகத்தில் மாநாடு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவ திட்டத்தை தயாரித்து நடைமுறைப்படுத்துவது சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் யாழ்.செயலகத்தில் யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத் துவக்குழுவின் தலைவரும், யாழ். அரச அதிபருமாகிய சுந்தரம் அருமை நாயகம் தலைமையில் நடைபெற்றது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்.அரச அதிபரின் மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகிய இந்தக் கலந்துரையாடலில் மூன்று முக்கிய விடயம் குறித்து தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அவசரபதிலிறுத்தலின் போது நடைமுறைப்படுத்த வேண்டிய விடயம் சம்பந்தமாகவும், அதற்கான பொறிமுறை பற்றியும் ஆராயப்பட்டது.

இரண்டாவதாக அனர்த்த முகாமைத்துவ உப குழுக்களின் பொறுப்பும், கடமையும் பற்றி ஆராயப்பட்டதுடன், அதனை மேம்படுத்தும் நோக்கில் ஆலோசனைகளுக்கு அமைவாக சகல பிரதேச செயலகங்களுக்கும் திட்ட வரைபுகள் வழங்கப்படும். எதிர்வரும் 31 ஆம் திகதிக்குப் முன்னர் இதனைப் பூரணப் படுத்தி செயலகத்தில் சமர்ப்பிக்கவேண்டும். மூன்றாவதாக 2013 ஆம் ஆண்டு எதிர்வரும் மழைக்காலத்திற்கு முன்னர் 50 மில்லியன் நிதி ஒதுக்கீட்டைக் கொண்டு 13 செயற்திட்டங்கள் யாழ்.மாவட்டத்தில் மேற் கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் 2014 ஆம் ஆண்டு அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயற்திட்ட முன்மொழிவுகள் முன்னிலைப்படுத்தப்பட்டு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்திற்கு அனுப்பிவைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக்கலந்துரையாடலில் யாழ்.மேலதிக அரசஅதிபர் ரூபினி வரதலிங்கம், அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் எஸ்.ரவி, பிரதேச செயலரகள், பொலிஸ் மற்றும் முப்படை அதிகாரிகள் கலந்து கொண்டு தமது ஆலோசனைகளை முன் வைத்தனர். (பா)

## மத்திய வங்கியின் தொடர்பூட்டல் திணைக்களத்தால் பொருளியல் கற்கும் மாணவர்களுக்கு போட்டி

(யாழ்ப்பாணம்)

இலங்கை மத்திய வங்கியின் தொடர்பூட்டல் திணைக்களம் நாடளாவிய ரீதியில் பாடசாலையில் உயர்தரத்தில் பொருளியலை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களிடையே Econ Icon என்ற அறிவுத்திறன் போட்டியை 2014 ஆம் ஆண்டு நடாத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

அகில இலங்கை ரீதியில் தமிழ் மொழியில் நடாத்தப்படும் இப் போட்டிப் பரீட்சைக்கு பாடசாலை ஒன்றிலிருந்து க.பொ.த. உயர் தரத்தில் பொருளியலை ஒரு பாடமாகக் கற்கும் 3 மாணவர்கள் மட்டும் பங்கு பற்றமுடியும். இப்போட்டிப் பரீட்சையிலிருந்து 8 தமிழ்மொழி மூலம் பாடசாலைகள் தெரிவு செய்யப்படும். இவ் 8 பாடசாலைகளும் தொலைக்காட்சியினூடான போட்டியில் பங்கு கொள்ளும்.

எனவே 3 தமிழ்மொழி மூல மாணவர்கள் கொண்ட குழுவை உங்கள் பாடசாலையிலிருந்து தெரிந்தெடுத்து அதிபரின் உறுதிப்படுத்திய ஒப்பத்துடன் இலச்சினையிட்டு பணிப்பாளர், தொடர்வூட்டல் திணைக்களம், இலங்கை மத்தியவங்கி, இல 30 சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01 என்ற முகவரிக்கு எதிர்வரும் 31இற்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். மேலதிக விபரங்களுக்கு 0112477384, 0112477257, 0112477378, 0112398745 எனும் தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொள்ளவும். அத்துடன் மேற்படி போட்டிப் பரீட்சையில் தங்களது பாடசாலை மாணவர்கள் கலந்து கொள்ளுதல் தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளர் நாயகத்தின் அனுமதிக்காக சமர்ப்பித்துள்ள நிலையில் அனுமதி கிடைத்தவுடன் ஒவ்வொரு மாகாணப்பணிப்பாளருக்கும் பிரதிகள் அனுப்பிவைக்கப்படும்.

இதேவேளை, 2010 ஆம் ஆண்டு இலங்கை மத்திய வங்கியின்தொடர்பூட்டல் திணைக்களம் நாடளாவிய ரீதியில் பாடசாலையில்உயர்தரத்தில் பொருளியலை ஒரு பாடமாகக் கற்கும் மாணவர்களிடையே Econ Lcon என்ற அறிவுத்திறன் போட்டியை வெற்றிகரமாக நடத்தியிருந்தது. சிங்களம் மற்றும் தமிழ்மொழிகளில் நடத்தப்பட்ட இப் போட்டியில், சிங்கள மொழி மூலத்தில் கொழும்பு பாலிகா மகாவித்தியாலயம் தமிழ்மொழி மூலத்தில் மாகனல்ல பதுறியா மத்திய மகா வித்தியாலயமும் வெற்றி பெற்றிருந்தன என திணைக்களப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (66)

## நலனோம்பு அட்டை வழங்கல்

(அச்சுவேலி)

கோப்பாய்பிரதேச செயலக சமூகசேவைத் திணைக்களத்தால் நலனோம்பு அடையாள அட்டைகள் அச்சுவேலிப் பிரதேசத்தில் உள்ள ஊனமுற்ற மற்றும் மனநிலை பாதிக்கப்பட்ட நிரந்தரமாகவே தொழில செய்யமுடியாதவர்களுக்கும் அத்துடன் வறுமைக்கோட்டிற் குட்பட்டவர்களுக்கும் வழங்கப் பட்டுள்ளன.

இந்த அடையாளஅட்டை மூலம் பாதிப்படைந்தவர்களுக்கு அவர்களின் பாதிப்புக்கேற்ற வகையில் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான உதவிக்கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

அதாவது ஆடு, மாடு கோழி வளர்ப்பு மற்றும் கைவினை முயற்சிகளுக்கும் சுயதொழில் கொடுப்பனவுகளும் வழங்கப் பட்டு வருகின்றன.

இப்பகுதியில் வாழும் வலுவிழந்தோர் மற்றும்ஊனமுற்றோர் பெரும் நன்மையடைவதுடன் இதனால் தமது பொழுதை பயனுள்ளதாக கழித்து வருவதனையும் காணமுடிகின்றது. (85)

## "குடி" மகனால் விபத்து




யாழ்ப்பாணம் பிரதான வீதியின் மடம்வீதிச்சந்தியில் நேற்று முன்தினம் இரவு 9.00 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் முச்சக்கரவண்டி ஒன்று சேதமடைந்துள்ளது.

குடிபோதையில் வந்த ஒருவர் திடீரென வீதியை குறுக்கறுத்த போது அவரை காப்பாற்றுவதற்காக திரும்பியவேளை ஆட்டோ விபத்துக்குள்ளாகியுள்ளது. இதில் ஆட்டோவில் பயணம் செய்த பெண்ணொருவர் காயமடைந்துள்ளார். (21)

## பதிவிறக்கப் பெட்டகம்

இலக்கியத்தில் புரியாமை என்பது குற்றச்சாட்டாகவும், சிலரிடத்தில் அதுவே உயர்ந்த தரம் என்பதான சிலாகிப்பாகவும் இருந்து வருவதைப் பார்க்கிறோம். நவீன தமிழ் இலக்கியத்தின் ஆரம்ப காலங்களில் மௌனி போன்றோரும் பின்னர் நகுலன், தருமு சிவராம் போன்றோரும், இன்று கோணங்கி போன்றோரும் எழுதுவது பலருக்குப் புரிவதில்லை என்றும், இருண்மை நிறைந்திருப்பதாயும் குற்றச்சாட்டு பரவலாக உண்டு. மறுபுறத்தில் இவர்கள் மிக உயர்ந்த தரத்தில் எழுதுவதாகவும் 'எழுத்தாளர்களின் எழுத்தாளர்கள் இவர்கள்' என்பதும் உண்டு.

எமது பண்டைத் தமிழ்ப் பாடல்களும், உரைநடையும்கூடப் புரிந்து கொள்ளச் சிரமமானவைதாம். ஆனாலும் அவைகள் புரியாததுக்கும் நவீன எழுத்துப் புரியாமற் போவதுக்கும் இடையே வேறுபாடு உண்டு. அக்காலத் தமிழ் மொழிநடையில் பெரும்பகுதிச் சொற்கள் இன்று நம் புழக்கத்தில் இல்லை. அவை வழக்கொழிந்து போயிருப்பதால் அந்த கவிதைகளை உரைநடையைப் புரிந்து கொள்வதில் இன்றைய வாசகனுக்குச் சிரமமிருக்கிறது. ஆனால், இன்றைய எழுத்து ஒருவனுக்குப் புரியாமல் போவது வார்த்தைகளின் அர்த்தம் தெரியாததால் அல்ல. நமக்கு தெரிந்த வார்த்தைகளைக்கொண்டு நவீன எழுத்தாளன் ஒருவன் சிருஷ்டிக்கும் உலகை நம்மால் எட்டித் தொட முடியாமல் போவதுதான்.

"செந்தேன் மொழியாள் செறிஅளக பந்தியின்கீழ்
இந்து முறியென் றியம்புவார் – வந்ததென்றும்
பூவாளி வேந்தன் பொருவெஞ்சிலை சார்த்தி
ஏவாளி தீட்டும் இடம்"

என்ற நளவெண்பாவிலிருக்கும் சொற்களின் பொருளைத் தெரிந்துகொண்டு விட்டால், தமயந்தியின் நெற்றியை – மன்மதன் வந்து அம்புகள் தீட்டும் இடமாகப் புகழேந்தி வருணித்திருப்பதைப் புரிந்துகொள்வதில் சிரமமிருக்காது. ஆனால் நகுலனின் இந்தக் கவிதையைப் பாருங்கள்:

"ராமச்சந்திரனா என்று கேட்டேன்
ராமச்சந்திரன் என்றார் / எந்த ராமச்சந்திரன்
என்று நான் கேட்கவில்லை / அவர் சொல்லவுமில்லை"

இந்தக் கவிதையிலுள்ள சொற்கள் எல்லாமே நமக்கு அர்த்தம் தெரிந்தவைதான். ஆனால், யார் இந்த ராமச்சந்திரன்கள்? கவிஞர் என்ன சொல்ல வருகிறார்? என்பதில்தான் குழப்பம். இதைக்கூட, Identity பற்றிய குழப்பத்தைத்தான் கவிதை சொல்கிறது போலும் என்று ஒருவாறு ஊகித்துக் கொண்டு கடந்துவிடலாம். ஆனால், கவிஞர் பிரம்மராஜனின் 'முதலைகளுக்குப் பல் தேய்க்கும் பறவைகளைப் பற்றி' என்ற கவிதையின் முதல் பகுதியை பாருங்கள்:

"பித்தப் பூ பிதற்றும் / பெண் தம்பூரா
தளர்ந்த பிறை இரண்டு / கலைந்த சிலை மூன்று
முலை நிழலை உறிஞ்சும் / குழந்தைக் கனவு
மண்டையின் கூரையில் / உத்துகள்
மனம் தளராத சிலந்தியின் / எச்சில் வீடு
குயில் புரியாத கூடு..." என்று தொடர்கிறது பிரம்மராஜனின் கவிதை.

பழமங்கள் மேல் பழமங்களாக அடுக்கப்பட்டு வரும் அந்தக் கவிதையைப் புரிந்துகொள்வது அவ்வளவு எளிதானதல்ல. 'புதுக்கவிதைப் பொருள் சிக்கலானதுக்குக் காரணம், இன்றைய வாழ்வின் சிக்கல் தன்மைதான் – வாழ்க்கை ஒன்றும் அத்தனை எளிமையானதாய் இல்லை' என்று சொல்லப்படுவதையும் ஒப்புக்கொள்ள வேண்டியதுதான்.

நாஞ்சில் நாடன் சொல்கிறார்:

"இந்தப் 'புரிதல்' என்ற அச்சம் அவரவர் தளத்தைச் சார்ந்தது. ஒரு விஷயம் புரியவில்லை என்பதை அறிவுப் பரப்பிற்கு விடப்பட்ட சவால் என்று எடுத்துக் கொள்வது நியாயமானது. ஆனால், நான் ஒரு மாபெரும் ரசிகன். எனக்கு ஒரு படைப்பு புரியாமல் இருக்க முடியாது. புரியவில்லை, எனவே அந்தப் படைப்பு ஊனமுடையது அல்லது படைப்பே அல்ல என்று சாதிப்பது திறனாய்வோ ஆரோக்கியமான அணுகுமுறையோ அல்ல. எல்லாமும் எல்லோருக்கும் புரிந்துவிட வேண்டும் என்று எந்த நிர்ப்பந்தமும் இல்லை. திருவனந்தபுரத்துக் கலைக்கூடத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் பணிக்கரின் ஓவியங்கள் எதுவும் புரியவில்லை; நவநீத கைவல்யம் புரியவில்லை; சுபென் மேத்தா இசை புரியவில்லை; சிற்பங்கள் சில புரியவில்லை; ஞானக்கூத்தனின், தருமு சிவராமின், சுந்தர ராமசாமியின் சில கவிதைகள் புரியவில்லை; ஈழுஷ் மொழி புரியவில்லை... எத்தனை எத்தனையோ விஷயங்கள் என்னவென்றே புரியவில்லை.

புரியாதவை–மேன்மையானவை என்பதோ, எளிமையானவை–தாழ்வானவை என்பதோ அல்ல நான் சொல்வது. தரத்தை நிர்ணயிக்க புரிதல் அல்லது புரியாமை ஒரு அளவு கோல் அல்ல என்பதை வலியுறுத்துவதே என் வாதம்" என்கிறார் நாஞ்சில் நாடன்.

# மன்னார் அபிவிருத்தியில் அமைச்சர் டக்ளஸ்

## மாதர்சங்க, விளையாட்டுக்கழக பிரதிநிதிகள் சந்திப்பு



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களை மன்னார் மாவட்ட மாதர் சங்கங்களின் பிரதிநிதிகள், விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகள் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

மேற்படி சந்திப்பு கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது. இதில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் அவர்கள், மாதர் சங்கங்களினதும், விளையாட்டுக் கழகங்களினதும் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள தொடர்பில் தாம் ஆராய்ந்து துறைசார்ந்தோருடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படுமெனத் தெரிவித்தார். இதன்போது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளர் லிங்கேஸ், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் மன்னார் மாவட்ட உதவி அமைப்பாளர் சந்துரு ஆகியோர் உடனிருந்தனர்.

## வங்காலை மக்களுடன் கலந்துரையாடல்



மன்னார் வங்காலை பகுதி மக்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சந்தித்து அவர்களது தேவைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

மேற்படி சந்திப்பு வங்காலை பொதுநோக்கு மண்டபத்தில் கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்றது. இதன்போது தமது பிரச்சினைகள் மற்றும் தேவைகள் தொடர்பில் அமைச்சர் அவர்களுக்கு மக்கள் எடுத்து விளக்கினர்.

குறிப்பாக தமது வாழ்வாதார தொழில் நடவடிக்கைகளின் பாதிபபு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் எடுத்துரைத்தனர். கோரிக்கைகள் மற்றும் தேவைகள் தொடர்பில் கவனம் செலுத்திய அமைச்சர் தேவைகளை இனம்காணும் அதே வேளை, அவற்றை முன்னுரிமையடிப்படையில் நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

இதன்போது பனை அபிவிருத்திசபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளர் லிங்கேஸ், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் மன்னார் மாவட்ட உதவி அமைப்பாளர் சந்துரு ஆகியோர் உடனிருந்தனர்.

## பெரிய கடை ஞானவைரவர் கோவில் கட்டுமானப் பணிகள் பார்வை



மன்னார் பெரிய கடை ஞானவைரவர் கோவில் சிறப்புப் பூசை வழிபாடுகளில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டார்.

மன்னார் பெரிய கடைப் பகுதியிலமைந்துள்ள மேற்படி ஆலயப் பகுதிக்கு அமைச்சர் அவர்கள் கடந்த 18 ஆம் திகதி விஜயம் மேற்கொண்டார்.

அங்கு இடம்பெற்ற பூசை வழிபாடுகளில் கலந்து கொண்ட அமைச்சர் கோவிலின் புனரமைப்புப் பணிகளையும் பார்வையிட்டார்.

இதனிடையே நிர்மாணிக்கப்பட்டு இடைநிறுத்தப்பட்டுள்ள கலாசார மண்டபத்தின் க[illegible]மானப் பணிகளையும் இதன்போது பார்வையிட்டார்.

இதன்போது மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் தலைவர் டாக்டர் கதிர்காமநாதன் உடனிருந்தார்.

## சந்தேகநபர்களின் கூற்றால் நீதிமன்றில் குழப்பம்

பம்பலப்பிட்டி வர்த்தகர் மொஹமட் சியாம் படுகொலை தொடர்பில் முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்தனவிற்கு எதிரான வழக்கில் சந்தேகநபர்கள் தெரிவித்த கூற்றினால் நீதிமன்றத்தில் குழப்பம் ஏற்பட்டது.

வாஸ் குணவர்தனவிற்கு எதிரான வழக்கு கொழும்பு மேலதிக நீதவான் ஏ.எம்.சஹாப்தீன் முன்னிலையில் நேற்று முந்தினம் வெள்ளிககிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த குழம்பம் நிலவியது.

அத்துடன், வழக்கின் பிரதான சந்தேகநபரான முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்தனவின் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ஹேமந்த வர்ணகுலசூரிய பிரதான சந்தேகநபர் சார்பில் எழுத்துமூலமான சமர்ப்பணத்திற்கு திகதி ஒதுக்கித் தருமாறு கேட்டுக்கொண்டார்.

அதற்கு அனுமதியளித்த மேலதிக நீதவான் ஓகஸ்ட் முதலாம் திகதியை ஒதுக்கித் தருவதாக தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது சந்தேகநபரான முன்னாள் உப பொலிஸ் பரிசோதகர் லக்மின இந்திக பபுனுசிங்ஹ, முன்னாள் பொலிஸ் கான்ஸ்டபிள்களான காமினி சரத்சந்திர, பியந்த சஞ்ஜீவ மற்றும் கெலும் ரங்க திஸாநாயக்க ஆகியோர் சார்பில் சட்டத்தரணி அனுர ரணசிங்க ஆஜராகி தனது வாதத்ததை முன்வைத்தார்.

இதன்போது குறுக்கிட்ட சந்தேகநபர்கள் இவர் தங்களுடைய சட்டத்தரணி இல்லையென பதில் நீதவானின் கவனத்திற்கு கொணடு வந்தனர் இதனையடுத்தே மன்றில் குழப்பம் ஏற்பட்டது.

இது தொடர்பில் நீதவான் சந்தேகநபர்களிடம் வினவியபோது, தங்கள் சார்பில் ஆஜராகவேண்டிய சட்டத்தரணி நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்றனர்.

சந்தேகநபர்களின் உறவினர்கள் விடுத்த வேண்டுகோளின் பிரகாரமே தான் சந்தேகநபர்களுக்காக நீதிமன்றில் ஆஜராகியிருப்பதாக சட்டத்தரணி அனுர ரணசிங்க பதில் நீதவானின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

தற்போது சந்தேகநபர்கள் வேறு கதைகளை கூறுகின்றனர். குற்றப்புல்னாய்வுப் பிரவினர் அவர்களை அரச சாட்சியாக மாற்றுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளமையினால் சந்தேகநபர்கள் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கலாம் என்றும் பதில் நீதவானின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

இதனையடுத்து இந்தவழக்கு ஓகஸ்ட் முதலாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பம்பலப்பிட்டி வர்த்தகர் கொலையுடன் தொடர்புடையதாக கூறப்படும் முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்தன ஜூன் மாதம் 10 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

## இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 21 இந்திய மீனவர்கள் கடந்த மாதம் 6 ஆம் திகதி கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டனர்.

பொலிஸாரின் விசாரணைகளை தொடர்ந்து மன்னார் நீதிமன்றில் இவர்கள் ஆஜர்படுத்தப் பட்ட போது, இவர்களுக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

பின்னர், இவர்கள் மீண்டும் நேற்றுமுன்தினம் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பட்டனர்.

இதன்போது விசார[illegible]களை மேற்கொண்ட மன்னார் நீதவான் ஆனந்தி கணகரட்ணம், குறித்த மீனவர்களை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## எரிபொருள் மானியத்தில் இருபது வீதம் வெட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கு இம்முறை விநியோகிக்கப்படும் எரிபொருள் மானிய முத்திரையில் இருபது வீதம் வெட்டப்பட்ட நிலையிலேயே யாழ். கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்திற்கு வந்து சேர்ந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்சமயம் இந்த எரிபொருள் மானிய முத்திரைகள் கடற்றொழிலாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இதற்கு முன்னர் விநியோகிக்கப்பட்ட எரிபொருள் மாணிய முத்திரையின் அளவிலும் இத்தகைய குறைப்பு கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது தெரிந்ததே.

(பா)







தாதிய மாணவ சேவை அர்ப்பணிப்பு விழா நேற்றுமுன்தினம் யாழ். போதனா வைத்தியசாலை தாதியர் பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தாதியர் கல்விப் பணிப்பாளர் திருமதி சிறிவர்த்தன முதலாம் வருடத்தை நிறைவு செய்த தாதிய மாணவி ஒருவருக்கு தலைப்பட்டி அணிவிப்பதையும், இந்நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்களையும், தாதிய மாணவர்களையும் காணலாம். (படங்கள்: பார்த்தீபன்)

# க.பொ.த. (உயர்தர) மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்

P.இராஜேஸ்வரன்
(ஆசிரிய வள ஆளணி,
தொடர்பாடல் ஊடகக்கற்கை நெறி)

தொடர்பாடல் ஊடகக்கல்வி

01) பின்வரும் கூற்றுக்களில் வெகுசன தொடர்பாடல் இயல்பை பிரதிபலிக்காதது.
1) வெகுசன ஊடகத்திற்கு உயர்தொழில்நுட்பம் தேவை.
2) வெகுசன ஊடகம் முழு உலகையும் உள்ளடக்குகின்ற போது பூலோக வெகுசன ஊடகமாக மாற்றம் பெறுகின்றது.
3) பொதுவாக ஊடக பாவனைக்கு ஊடக அறிவு அவசியம்.
4) நேருக்கு நேர் இடம்பெறுகின்ற தொடர்பாடல் செயன்முறைக்குட்பட்டது.

2) செவிப்புலத் தொடர்பாடல் வகையை சேர்ந்தவை.
1) ஒலிப்பேழைக் கருவி, ஒலிநாடா இயந்திரம், ஒலி பெருக்கி
2) ஒலிபெருக்கி, கணனி, ஒலிநாடா
3) ஒலிநாடா, தொலைக்காட்சி, கணனி
4) மல்ரிமீடியா, ஒலிப்பேழைக்கருவி, ஒலிபெருக்கி

03) பின்வரும் கூற்றுக்களில் முறைசாரா தொடர்பின் இயல்பினை பிரதிபலிக்காத கூற்று
1) முறைசாரா தொடர்பாடல் முறைசாரா வழிகளில் ஒழுங் கின்றி செல் லும்
2) முறைசார் தொடர்பாடலினால் கிடைக்காத தகவல்கள் முறைசாரா தொடர்பாடல் மூலம் கிடைக்கும்.
3) முறைசார் தொடர்பாடலை விட முறைசாரா தொடர்பாடல் வேகம் குறைந்தது.
4) முறைசார் தொடர்பாடல் பலவீனம் அடையும் போது முறைசாராத் தொடர்பாடல் பரவுகின்றது.

04) தொடர்பாடலில் செய்தியை கொண்டு செல்வது (கடத்துவது)
1) ஊடகம் (அலைவரிசை) 2) தொடர்பாடுபவர்
3) தனிநபர் 4) தனிநபர் அல்லது குழு

05) குமாருக்கு ஊடகத்தை விமர்சனம் செய்யும் ஆற்றல் உண்டு.ஆனால் அவற்றை பயன்படுத்துவதில்லை. அதேவேளை சிறு சிறு குழுக்களில் அவ்ஆற்றலை வெளிப்படுத்தும் தன்மை உடையவன் ஆகவே அவர்
1) மந்த பெறுநர் 2) செயற்படாதபெறுநர்
3) விழிப்புணர்வுமிக்க பெறுநர் 4) செயற்படுபெறுநர்

06) சிறுவர்களும் வானொலி ஊடக பயன்பாடு தொடர்பான கூற்றுக்கள் பின்வருமாறு
A. வானொலியை விட தொலைக்காட்சி ஊடகத்தை சிறுவர் அதிகம் பயன்படுத்துகிறார்கள்.
B. வானொலி ஊடகத்தினால் சிறுவர்களிடம் பேச்சுத் திறன் அதிகரிக்கும்.
C. செவிமடுத்தல் திறன் சிறுவரிடையே அதிகரிக்கும்.
D. காட்சி ரீதியான அனுபவத்தை பெற முடியும். மேற்குறிப்பிட்ட கூற்றுக்களில்
1) A,B,C ஆகியன மாத்திரம் சரியானவை.
2) A,C,D ஆகியன மாத்திரம் சரியானவை.
3) B,C, D ஆகியன மாத்திரம் சரியானவை
4) A,B,C,D எல்லாம் சரியானவை.

07) விழிப்புணர்வு மிக்க பெறுநர் என்பவர்
A. பெறுநரை தூண்டும் நுட்பமுறைகளை விளங்கும் ஆற்றல்.
B. ஊடகக் கொள்கையை உய்த்தறியும் ஆற்றல்.
C. ஊடக நிகழச்சிகள் அனைத்தையும் இரசித்தல்.
D. ஊடக முன்வைப்புக்களை முழுமையாக நம்புதல்.
E. ஊடக ஆய்வு,விமர்சன ஆற்றல் மிக்கவர்.

08) ரவி பாட்சாலைக்கு செல்லும் போது வீதியில் பல்வேறு வீதிச்சமிக்ஞைகளை அவதானித்து கொள்வான். இச்செயன்முறையுடன் தொடர்புபட்ட மொழி.
1) கட்புலமொழி 2) கட்புல செவிப்புல மொழி
3) எழுத்துமொழி 4) பேச்சுமொழி

09) "யதார்த்த நிலைகளை அக்கபூர்வமான கலையம்சங்களடன் வெளிப்படுத்தும் கலை" என்பது விபரண திரைப்பட தன்மையாக அமைகின்றது. பின்வரும் கூற்றுக்களில் விபரண பட இயல்பை பிரதிபலிக்காத கூற்றுக்கள்.
A. இயக்குநரினால் உருவாக்கப்படுகின்ற கதாநாயகன், நாயகி இல்லாதிருத்தல்.
B. முழுநீள திரைப்படங்களை விட விபரண திரைப்படங்களின் காலம் குறுகியது.
C. குறித்த விடயம் தொடர்பிலான முழுமையான தகவல்கள் உள்ளடக்கப்படுவதில்லை.
1) A மட்டும் 2) C மட்டும்
3) Aயும் B யும் 4) A, B, C ஆகியன

10) தொலைக்காட்சி வைக்கப்பட்டுள்ள இடம் இல்லத்தின் பொது இடமாக விளங்குகின்றது. அன்றாட வேலை நேர அட்டவணையை தொலைக்காட்சி ஒலிபரப்பு நேரங்கள் தீர்மானிப்பவையாக உள்ளன. இவை வெளிப்படுத்தும் எண்ணக்கரு
1) உலக கிராம எண்ணக்கரு 2) அபிவிருத்தி எண்ணக்கரு
3) தொலைக்காட்சி கலாசார எண்ணக்கரு
4) பொழுதுபோக்கு எண்ணக்கரு

11) வானொலி ஊடகத்திற்கு பிரதி ஆக்கம் செய்கின்றபோது கவனிக்க வேண்டிய கூற்றுக்களில் தவறானது?
1) வானொலியின் ஆன்மா குரல் என்பதனால் பிரதி ஆக்கம் முழுவதும் ஒளிப்படங்களால் அமைதல்.
2) நேயர்களின் செவிப்புலன், மனங்களுக்கு பொருந்தும் வகையில் எழுதுதல்.
3) கண்களுக்கு அல்ல காதுகளுக்கு எழுதுதல்
4) சொற்கள், இசை, ஒலி வழியாக செய்தி முன்வைக்கப்படுவதை விளங்கி எழுதுதல்.

12) தாள்கள் தொடர்பான கூற்றுக்களில்
A. GSM 70 என்பது 1 சதுரமீற்றரின் நிறை 70 கிராம் என்பதாகும்.
B. செய்தித்தாள் அச்சிடுவதற்கு GSM 70 தாள் பயன்படுத்தப்படுகின்றது.
C. புத்தகங்கள் அச்சிடுவதற்கு GSM 35 பயன்படுகின்றது.
D. ஜி.எஸ்.எம் (GSM) என்பது ஒரு சதுரமீற்றர்தாளின் நிறையை குறிக்கும்.
E. வெள்ளை தாள் எல்லாம் சமநிலையுடையவை. மிகப் பொருத்தமானது
1) A, D யும் 2) A, C யும்
3) A, C, E யும் 4) A, B, C, D ஆகியவை

13) A4 அளவில் 4 முதல் 2 பக்கங்கள் வரை, மாதம் ஒரு முறை அல்லது இருமுறை நிறுவனம் ஒன்றின் தற்கால நடப்புத் தகவல்களை மக்களுக்கு அல்லது இலக்கு குழுவினருக்கு பதிப்பாக்க குழு ஒன்றினால் பிரசுரிக்கப்படுவது
1) செய்திப் பத்திரிகை 2) சுவர்ப்பத்திரிகை
3) சஞ்சிகை 4) செய்திக் கடிதம்

14) ஊடகத்தினால் தமக்கு என ஒதுக்கப்பட்ட துறைகளுக்கான செய்திகளை சேகரிக்கும் பணி, ஊடக நிறுவனங்களுக்கு செய்தியை வழங்குவது, அதிகாரம் பெற்ற நபர்களினால் வெளியிடப்படுவது, தினசரி சம்பவங்களை குறித்தல் ஆகிய செயன்முறையுடன் தொடர்புபட்ட தகவல் மூலகங்களை முறையே காட்டுவது.
1) செய்தி குறிப்பு, செய்தி முகவர், செய்தி நாட்குறிப்பேடு, பீட் அறிக்கை
2) பீட் அறிக்கை, செய்தி முகவர், செய்திக் குறிப்பு, செய்தி நாட்குறிப்பேடு
3) செய்திநாட்குறிப்பேடு, செய்தி முகவர், செய்திக் குறிப்பு, பீட் அறிக்கை
4) பீட் அறிக்கை, செய்தி முகவர், நேர்முகம், செய்தி நாட்குறிப்பேடு

15) வெளியீட்டு உரிமை என்பது
A . ஒருவரின் உள்ளத்தில் உள்ள கருத்துக்களுக்கு வெளியீட்டு உரிமை இல்லை.
B - படைப்பாளியின் முதல் படைப்புக்கு மட்டுமே வெளியீட்டு உரிமை கிடைக்கும். இரண்டு ஆக்கம் எனின் அப்படைப்புக்களுக்கு வெவ்வேறான உரிமை கிடைக்கும்.
C - அறிவுசார் சொத்து வகையைச் சேர்ந்தது.
D - எழுத்தாளர் ஒருவரின் நாவலில் இருந்து அவருக்கு அறிவிக்காமல் சில பகுதிகள் எடுக்கப்பட்டு கட்டணம் செலுத்தப்பட்ட கல்விசார் செயலமர்வுக்கு பயன்படுத்தப்பட்டமை அறிவுசார் சொத்துடமைச் சட்டத்தின் பிரகாரம் நியாயமான பயன்பாடாகும். மேற்கூறப்பட்டுள்ள கூற்றுக்களில் வெளியீட்டு உரிமை சார்ந்த அம்சங்களாகக் கொள்ளக்கூடியவை.
1) A யும் B யும் 2) A யும், B யும், C யும்
3) B யும், C யும், D யும் 4) மேற்கூறிய யாவும்

16)
- மூடநம்பிக்கைகள், சடங்குகள், கிராமியக் கலைகள் மரபுரீதியான தொடர்பாடல் வடிவமாகக் காணப்படுகின்றது.
- உருக்கள், சுவரொட்டிகள், குறியீடுகள், வரைபுகளும் இத்தொடர்பாடல் வடிவச் செயன்முறைக்கு பயன்படுகின்றது.

மேற்கூறப்பட்டுள்ள கூற்றுக்களுடன் தொடர்புபட்ட தொடர்பாடல் வடிவம்
1) கட்புல தொடர்பாடல் வடிவம் 2) கட்புலசெவிப்புல தொடர்பாடல்
3) வாய்மொழியற்ற தொடர்பாடல் 4) எழுத்து மூல தொடர்பாடல்

17) சமீப காலத்தில் அகிலமயமாதல், பூகோளமயமாக்கல், சர்வதேச மயமாக்கல் போன்ற சொற்கள் முதன்மை பெற்றுள்ளன. இச்செயன்முறையுடன் தொடர்புபட்ட கூற்றுக்களாக அமையக் கூடியவை.
A - பல்வேறு ஊடகங்கள் ஒன்றிணைந்து ஒரு தொகுதியாக உருவாதல்.
B - பூகோள கலாசார தொடர்பாடல் சூழல் அறிமுகமாதல்
C - குடிமக்கள் செய்தி அறிவிப்பிலும் தொடர்பாடலிலும் ஈடுபடல்.
D - தகவல் முதலீட்டு (informational Capital) பண்டமாக மாற்றமுறுதல்.
1) A யும், B யும் 2) A யும், D யும்
3) A யும், C யும் 4) A யும், B யும், D யும்

18) அச்சு ஊடக நிறுவனம் ஒன்றில் பணியாளர் ஒருவர் மூலப்பிரதியுடன், அச்சுப் பிரதியை ஒப்பிட்டுப் பார்த்து தவறவிடப்பட்ட வாக்கியங்கள், தரவுகளை, சொற்கள் போன்றனவற்றை சீர்திருத்தம் செய்வதில் ஈடுபட்டுக்கொண்டு இருந்தார்.
1) செய்தி ஆசிரியர் 2) ஒப்புநோக்குநர்
3) செம்மைப்படுத்துநர் 4) மொழிபெயர்ப்பாளர்

19) திரைப்பட கருப்பொருளுக்கு ஏற்ற வகையில் பின்னணி காட்சிகளை (செட்) ஒழுங்கமைப்பதிலும், நடிகர், நடிகைகளின் ஆடை, அணிகலன், தோற்றப்பாடுகள் தொடர்பான ஒழுங்குபடுத்தல்களிலும் ஈடுபடுவர்.
1) கலைநெறியாளர் 2) ஒப்பனையாளர்
3) தயாரிப்பாளர் 4) இயக்குநர்

20) வெகுசன ஊடகத்தில் விளம்பரங்கள் முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளன. அச்சு ஊடகம் ஒன்றில் விளம்பரம் ஒன்றிற்காகக் கட்டணத்தைத் தீர்மானிக்கும் காரணிகளுடன் தொட்புபடாத அம்சம்
1) விளம்பரத்தின் உள்ளடக்க நிறம் 2) விளம்பரத்தின் அளவு
3) விளம்பரம் இடம்பெறும் பக்கம் 4) விளம்பரத்தின் உள்ளடக்கத் தன்மை

21) ஊடக ஆய்வு அறிக்கை தயாரிப்பில் மூன்றாவதுபடி நிலையாக அமைவது
1) தரவு சேரித்தல்
2) ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்ற சனத்தொகையை தீர்மானித்தல்
3) ஆய்வு பகுப்பாய்வு
4) விதந்துரைகளும் முன்மொழிவுகளும்

22) புகைப்படக் கருவியில் ஒளியின் தீவிரத்தைக் குறைப்பதற்கு நேரத்தையும், ஒளி உட்புகும் அளவையும் தீர்மானிப்பது
1) ஷட்டர், அபெர்ச்சர் 2) வில்லை, ஷட்டர்
3) அபெர்சர், பிளாஷ் 4) ஷட்டர் மென்படலம்

23) முறைசாரா தொடர்பாடல் செயன்முறையை மிக ஆழமாக ஆராய்கின்ற போது பின்வரும் தகவல்கள் அறியப்பட்டிருந்தன.
A - முறைசார் தொடர்பாடலை விட முறைசாரா தொடர்பாடல் வேகமானது
B - சட்ட ரீதியாக, திட்டமிட்ட செயல் ஒழுங்கை கொண்டமைந்தது.
C - பொதுவாக முறைசார் தொடர்பாடல் பலவீனம் அடைகின்றபோது முறைசாரா தொடர்பாடல் பரவுகிறது
D - குறித்த ஒரு நோக்குடன் கூடிய செயல் ஒழுங்கு
E - முறைசாரா வழிகளில் ஒழுங்கின்றி செல்லும்
மேற்குறித்த தகவல்களிடையே
1) A,B,C ஆகியன மாத்திரம் உண்மையானவை. அதேவேளை C,E ஆகியன பொருத்தமற்றவை
2) A,C,E ஆகியன மாத்திரம் உண்மையானவை. அதேவேளை B,D ஆகியன பொருத்தமற்றவை
3) B,C,D ஆகியன மாத்திரம் உண்மையானவை. அதேவேளை A,E ஆகியன பொருத்தமற்றவை.
4) D,C,E ஆகியன மாத்திரம் உண்மையானவை. அதேவேளை A,B ஆகியன பொருத்தமற்றவை.

24) கூட்டத் தொடர்பாடலின்போது முன்னாயத்தம் இன்றி பயன்படுத்தக்கூடிய ஊடகக் கருவிகள் கொண்ட தொகுதி
1) கரும்பலகை, பல்லூடகம், மேந்தலை எறிவை.
2) மேந்தலை எறிவை, பக்கபிரட்டி, துரிதஎறிவை
3) வெண்பலகை, மேந்தலை, வழுக்கி
4) துரித எறிவை, காந்தப்பலகை, கரும்பலகை

25) தொடர்பாடல் பற்றிய சில கூற்றுக்கள் பின்வருமாறு
A - தொடர்பாடல் இயங்குதன்மையானது
B - தொடர்பாடல் செயன்முறை ஒரு வழிப்பாதையுடன் (ீ) மட்டும் தொடர்புடையது
DC - தொடர்பு செயன்முறை ஒரு வழியாகவும், இருவழியாகவும் இடம்பெறலாம்.
D - தொடர்பாடுபவர், பெறுநர் வகிபங்கு நிலைகள் தொடர்பு நிலைமைகளுக்கு ஏற்ப மாற்றமடையும்
E - பெறுநரை குறித்த செய்தி சென்றடைகின்றபோதே தொடர்பாடல் செயன்முறை நிறைவடைகின்றது.
மேற்குறித்த கூற்றுக்களில்
1) A,C மாத்திரம் சரியானவை
2) B,D மாத்திரம் சரியானவை
3) A,C,D மாத்திரம் சரியானவை
4) A, C, D,E மாத்திரம் சரியானவை

26) சினிமா ஊடகத்தில் புகைப்படப் பயன்பாடாக அமைவன
A - சினிமா படம் தொடர்பான பதிவுகளை இரசிகரிடம் உருவாக்குவதற்கு
B - சினிமா தொடர்பிலான விளம்பர பயன்பாட்டுக்கு
C - சினிமா தொடர்பிலான விமர்சன, இரசனை தேவைகட்டு
D - சினிமா புத்தகம், சஞ்சிகை மற்றும் சினிமா இலக்கிய வெளியீட்டுக்கு
மேற்குறித்த கூற்றுக்களுள் உண்மையானவை
1) A, C உண்மையானவை B, D பொய்யானவை
2) A, D உண்மையானவை B,C பொய்யானவை
3) A,C,D உண்மையானவை B பொய்யானவை
4) A,B, C,D ஆகியன எல்லாம் உண்மையானவை

27) எண்மான புகைப்படப்பிடிப்பு (Digital Photography) ஒரு இலகுவான வழிமுறையாகும். இதற்கான காரணிகளாக அமையக்கூடியவை.
A - கணனி மென்பொருளை கொண்டு செம்மையாக்கலை மேற்கொள்ள முடிதல்.
B - மின்நினைவக அட்டையை பயன்படுத்தி ஒளிப்படங்களைச் சேர்த்து வைக்கலாம்.
C - தேவையான தேவையற்ற ஒளிப்படங்களை அழிக்க முடியாது.
D - அச்சு ஊடக, மின்னஞ்சல் வழியாக தொடர்பாடலுக்கு இலகுவாகப் பயன்படுத்த முடியாதிருத்தல்
1) A யும் B யும் 2) A யும் D யும்
3) B யும் C யும் 4) B யும் D யும்

28) புகைப்படங்களின் பிறிதொரு விதமான தயாரிப்பே வழுக்கி ஆகும். வழுக்கியில் பயன்படுத்தப்படும் புகைப்படவகை.
1) எண்ம புகைப்படப்படலம்
2) நேர்புகைப்படப்படலம் (positive)
3) மறை புகைப்படப்படலம் (negative)
4) வரண எதிர்புகைப்படப்படலம்

29) ஊடக நிறுவன உள்ளக கட்டமைப்பு செயல் ஒழுங்குக்கு ஏற்ப தொழில்சார் கருமங்களுடன் தொடர்புபட்டவை.
A. நிதி,பாதுகாப்பு
B. பராமரிப்பு,நிர்வாக சேவை
C. புகைப்படப்பிடிப்பாளர்,நெறியாள்கை
கூற்றுக்களில் பொருத்தமானவை
1) A மாத்திரம் 2) B மாத்திரம்
3) C மாத்திரம் 4) D யும் C யும் மாத்திரம்

30) வகுப்பறையில் பயன்படுத்தப்படுகின்ற எறிவை ஊடகமான மேந்தலை எறிவையின் (overhead projector) முக்கியத்துவம் பற்றி மாணவர் சிலரின் கருத்துக்கள் வருமாறு. இவற்றில் உடன்பட முடியாத கருத்து
1) மேந்தலை எறிவை முன்னாயத்தம் இன்றி பயன்படுத்தக்கூடிய ஊடகம்
2) எறிவை சார் உபகரணம்
3) ஊடுகாட்டி தாள் மூலம் குறிப்புக்கள்,உருக்கள் தயார் செய்யப்படும்.
4) A4 அளவில் தயார் செய்யப்படும் ஓர் ஆவணம் இருமடங்காக பெரிதாக்க எறிவைக்குட்படுத்தப்படுகின்றது.

31) A - பத்திரிகை வெளியீட்டின் இறுதிப் பொறுப்புக் கூறுதல்
B - உதவி ஆசிரியர்களுக்கு பணிகளை பங்கிடுதல்
C - ஆசிரிய தலையங்கம் எழுதுதல்.
D - மொழிப்பிழைகள்,இலக்கணப் பிழைகளை செம்மைப்படுத்தல்.
மேற்படி கூற்றுக்களில் பிரதம ஆசிரியர் பணியுடன் தொடர்புபட்டவை
1) A யும் C யும் 2) B யும் C யும்
3) A யும் B யும் C யும் 4) B யும் C யும் D யும்

32) A பகுதியில் உள்ள பணியாளர்களினால் ஆற்றப்படும் பணிகளை காட்டும் B பகுதியின் சரியான ஒழுங்கு முறையே

| A பகுதி | B பகுதி |
|---|---|
| 1) செய்தியாசிரியர் | A. தயாரிக்கப்படும் பிரதியை முன்வைப்பவர் |
| 2) முன்வைப்பாளர் | B. மொழி, இலக்கண திருத்தம் மேற்கொள்பவர் |
| 3) செம்மைப்படுத்துநர் | C. செய்தியை சேகரித்து வழங்குபவர் |
| 4) அறிவிப்பாளர் | D. அச்சு ஊடக முதன்மை அதிகாரி |
| 5) ஊடகவியலாளர் | E. அச்சு ஊடக முதன்மை அதிகாரி |
| 6) தயாரிப்பாளர் | F. சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு ஆக்கத்திறனுடன் செயற்படுபவர் |

1) DEBACF 2) BCDEAF 3) ACDEFB 4) DEABFC

33) பின்வருவனவற்றில் வானொலி ஊடகத்தில் ஒலிபரப்பப்படுகின்ற இரு நபர், பங்குபற்றுகின்ற நிகழ்ச்சிகளை குறிப்பன.
1) பேச்சு, கலந்துரையாடல்
2) வினாவிடை நிகழ்ச்சி, ஜோடிப்பாடல்
3) சங்கீத நிகழ்ச்சி, வினாவிடை நிகழ்ச்சி
4) சம்பாஷணை, நாடகம்

34) பல உருக்களை தனித்தனியாக பதிவு செய்யக்கூடிய படலத்தையும், கொடாக் என்ற பெட்டிக் கமராவையும் அறிமுகம் செய்தவர்
1) லுஜயஸ் மாண்டே டிகியுரே
2) ஹென்றி பொக்ஸ் டெல்போட்
3) ஜோர்ஜ் ஈஸ்ட்மன்
4) நிசபோர் நீம்ஸ்

35) பின்வரும் கூற்றுக்களில் ஒப்செட் லித்தோகிரபி முறையின் பண்புகளை பிரதிபலிப்பன.
a. பூச்சுடனான அச்சுத்தகடு கடதாசி மீது ஒற்றி எடுக்கப்படுகின்றது.
c. பூச்சுடனான ஈயஎழுத்துக்கள் கடதாசி மீது அழுத்தப்படுகின்றது.
c. வர்ணக் கோட்பாடு பயன்படுத்தக்கூடியது.
d. முச்சிலிண்டர் தட்டச்சு முறை எனவும் அழைக்கப்படுகின்றது.
1) A மட்டும் 2) A யும் B யும்
3) B யும் C யும் D யும் 4) A யும் C யும் D யும்

36) பின்வருவனவற்றில் இயக்குநரின் வகிபங்காக கொள்ளக்கூடியன.
1) கமராக்காட்சிக்கான சட்டகம், நடிகர், நடிகைகளை தெரிதல், காட்சிகளை கலையகத்துடன் ஒன்றிணைத்தல், செம்மைப்படுத்தல் பணிகள்.
2) பிண்ணணி காட்சி அமைப்பு, ஆடை அலங்காரம், அணிகலன், தோற்றப்பாடுகளை தீர்மானித்தல்
3) ஒலிகளை பதிவுசெய்தல்,படம் பிடித்தல்,நிகழ்ச்சித்தயாரிப்பு,காட்சி ஒன்றிணைப்பு
4) காட்சி அமைப்பு, காட்சிகளை கலையகத்துடன் ஒன்றிணைத்தல், பின்னணி காட்சி அமைப்பு, ஒலிகளை பதிவு செய்தல்


37) வாய்மொழி அற்ற தொடர்பாடலில் தனியாள் இடைவெளி அதிக செல்வாக்கை பெறுகின்றது. நெருங்கிய நண்பர்கள் தொடர்பாடல் உள்ளடங்குகின்ற இடைவெளியை குறிப்பது.
1) நேச இடைவெளி 2) சமூக இடைவெளி
3) தனியாள் இடைவெளி 4) மக்கள் இடைவெளி

38) வேலை வாய்ப்பு ஒன்றிற்கான சுயவிபரக்கோவை ஒன்றை தயாரிக்கின்ற போது கவனிக்க வேண்டிய அம்சமாக கொள்ளக் கூடியது.
1) தாளின் இருபக்கங்களும் தரவுகளை தயாரித்தல்.
2) தாளின் ஒரு பக்கம் மட்டும் தரவுகளை தயாரித்தல்
3) அலங்கார எழுத்துக்கள்,வர்ணத்தாள்கள் பயன்படத்தப்படுதல்
4) கல்வித் தகமையை குறிப்பிடுகின்ற பொழுது மிகக் குறைந்த தகைமையில் இருந்து ஆரம்பிக்க வேண்டும்.

39) தலைகீழ் பிரமிட் (inverted pyramid) செய்தி தயாரிப்பில் பயன்படுத்தப்படுகின்ற முறையாகும்.
இதன்படி செய்தி ஒன்றின் முக்கிய விடயங்கள்
1) முதல் பந்தியில் இடம்பெறும்
2) இறுதிப் பகுதியில் அமையும்
3) செய்தி ஆசிரியர் விருப்பத்திற்கு ஏற்ப அமைதல்
4) உடல்ப்பகுதியில் அமையும்.

40) பின்வரும் கூற்றுக்களின் ஆளிடைத் தொடர்பாடல் இயல்பை மிகப்பொருத்தமாக பிரதிபலிப்பது
1) பின்னூட்டல் பலவீனமானது
2) ஊடக கருவிகள் மிக அடிப்படையானது
3) நிறுவனமயமாக்கப்பட்ட ரீதியில் முன்னெடுக்கப்படுவது
4) உயர்மட்ட பின்னூட்டல் கிடைக்கும்.

# தேசிய மட்டத்தில் முதலிடம் கிளி. மாணவிகளுக்குப் பாராட்டு





(கிளிநொச்சி)

அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டியில் பங்குபற்றி தேசிய மட்டத்தில் முதல் இடத்தைப் பெற்ற கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவிகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக்குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் அவர்கள் நேரில் சென்று வாழ்த்துக்களை தெரிவித்ததோடு அவர்களுக்கு பரிசில்களையும் வழங்கி வைத்தார்.

முற்றுமுழுதாக யுத்தத்தின் பாதிப்புக்களை சுமந்து அழிந்து போன ஒரு மாவட்டத்தின் பாடசாலையானது மீள்குடியேறி நான்கு வருடத்திற்குள் தேசிய மட்டத்தில் சாதனை படைத்தமை பாராட்டப்படுகின்ற விடயமாகும் என மாவட்ட கல்வி அபிவிருத்திக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

சாதனைக்குரிய வெற்றிபெற்ற மாணவிகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பரிசுகளை வழங்கி வைத்தார். வலயக்கல்விப்பணிப்பாளர் முருகவேல் கிளிநொச்சி

இந்நிகழ்வில், மாவட்டச்செயலக திட்டப்பணிப்பாளர் மோகனபவன் உதவிக்கல்விப்பணிப்பாளர் இதயராஜா பாடசாலை அதிபர் இரவீந்திரன் நெறிப்படுத்திய ஆசிரியர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## தேறாங்கண்டல் வீடுகளுக்கு மின்சார இணைப்பு எப்போது?

(மல்லாவி)

மல்லாவி தேறாங்கண்டல் பகுதியில் மீள்குடியேறிய மக்களின் வீடுகளுக்கு மின் இணைப்பு பொருத்தப்படாமையால் அவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மல்லாவி தேறாங்கண்டல் பகுதியில் 2009 ஆண்டு இறுதிப்பகுதியில் மீள் குடியேற்றம் இடம்பெற்றது. தற்காலிக வீடுகள் அமைத்து வாழ்ந்த மக்கள் நிரந்தர வீட்டுத திட்ட உதவியினையும் பெற்று வீடுகளை அமைத்திருந்தனர்.

சுமார் 240 இற்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 1500 வரையானோர் இப்பகுதியில் வசித்து வருகின்றனர். இதில் 20 வரையான குடும்பங்களின் வீடுகளுக்கே மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

ஏனையவர்கள் மின்சார இணைப்பைப் பெறுவதறகான விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து நீண்ட நாட்களாகியும் மின் இணைப்பு வழங்கப்படவில்லை.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் பலமுறை சென்று கோரிக்கை விடுத்தும் பயன் எதுவும். கிடைக்கவில்லை என அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதனால் கல்வி கற்கும் மாணவர்கள் உட்பட சிறு குழந்தைகளையுடையோர் வரை இரவு வெளிச்சம் பெறுவதற்கு மண்ணெண்ணை விளக்குகளைப் பயன்படுத்தி வருவதாக தெரிவித்துள்ளனர்.

சம்பந்தப்பட்டோர் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (நு)

## யாழ்ப்பாணத்தில் புனித ரம்ழான் நோன்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் புனிதமிகு ரம்ழான் மாத நோன்பு அனுஷ்டிக்கப்படுகின்றன. இங்குள்ள சகல பள்ளிவாசல்களிலும் பர்ளுதொழுகைகளும், சுன்னத்தான தராஹ்ஹில் விதர் தொழுகையுடன் உலமாக்களின் பயன்களும் தினமும் இடம் பெற்று வருகின்றன.

ஸஹர் நேரத்தை அறிவிக்கும் பொருட்டு விசேட அதானும் ஒளிபரப்பப்படுகின்றன.

நோன்கு திறக்கும் (இப்தார்) நிகழ்வும் சகல பள்ளியிலும் மாலை நேரத்தில் நோன்பு கஞ்சியுடன் சிற்றுண்டிகளும் வழங்கப்படுகின்றன.

மூன்று பகுதிகளைக் கொண்ட ரம்ழான் மாத நோன்பின் முதல் பத்தான ரஹ்மத் கழிந்து தற்போது "மஹ்பிரத்" பாவ மன்னிப்பு தேடும் பகுதி நிகழ்கின்றன.

இறுதி மூன்றாவது பகுதி "இத்துக்குன் மினன்னார்" நரக விடுதலை வேண்டி பிரார்த்திற்கும் நாட்களாகும் இறுதி பத்தில் "ஆயிரம் மாதங்களைவிட சிறந்த மாதமான ஓர் இரவு புனித 'லைலதுல்கத்ர் இரவாகும்.

இவ்விரவில் செய்யும் நல் அமல்களுக்கு இறைவன் அள்வற்ற நன்மைகள் தருவதாக அல்குர்ஆன் கூறுகின்றன.

இவ்விரவில் விடியம் வரை விழித்திருந்து நல் அமல்கள் செய்து, தான தர்மங்கள் வழங்கி இன பந்துக்களுடன் மகிழ்வுடன் வாழ்வதற்கு யாழ். முஸ்லிம்களும் தயாராகவுள்ளனர். (105)

## பொதுநலவாய நாடுகள் மாநாட்டை புறக்கணிக்குமாறு மலேசியாவுக்கு அழுத்தம்

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை மலேசிய பிரதமர் பகிஷ்கரிக்க வேண்டும் என அந்நாட்டு நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மலேசிய நாடாளுமன்ற உறுபபினர் எம்.குலசேகரன் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

ஏற்கனவே மலேசியாவில் இடம்பெற்ற இஸ்லாமிய மாநாட்டுக்கு இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அழைபபு விடுக்கப்பட்டிருந்தது. எனினும் அது பலத்த எதிர்ப்புக்களால் விலக்கிக்கொள்ளப்பட்டது.

இந்தநிலையில் இலங்கையில் சிறுபான்மை தமிழர்களின் முஸ்லிம்களின் வணக்கஸ்தலங்கள் மீது தாக்குதல்கள் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. இதனைத் தடுக்க இலங்கை அரசாங்கம் உரிய நடவடிக்கையை எடுக்கவில்லை.

எனவே இதனைக் கருத்திற்கொண்டு மலேசிய பிரதமர் பொதுநலவாய நாடுகளின் கொழும்பு மாநாட்டில் பங்கேற்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று குலசேகரன் மலேசிய நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதம் ஒன்றின் போது கோரிக்கை விடுத்துளளார்.

## நீதவான் வழங்கிய 1000 ரூபா கள்ளநோட்டு

அதிவேக வீதியின் கொட்டாவ நுழைவாயிலில் சென்ற அங்குனுகொலபெலஸ்ஸ நீதவான் வழங்கிய 1000 ரூபா நோட்டு போலியானதென கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

காலியில் இருந்து வந்த நீதவான் கொட்டாவ நுழைவாயிலில் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் வெளிச் செல்லும்போது வழங்கிய 1000 ரூபா நோட்டு கள்ளநோட்டு என இயந்திரத்தின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதன்படி குறித்த நீதவான் ஹோமாகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். அங்குனுகொலபெலஸ்ஸ மக்கள் வங்கியில் காசோலை மாற்றி பெற்ற பணத்திற்குள் அந்த 1000 ரூபா இருந்ததாக நீதவான் முறையிட்டுள்ளார். வாக்குமூலம் பெற்றதன் பின் நீதவான் விடுவிக்கப்பட்டுள்ளார்.

## சுதந்திரக்கட்சி பிரதானிகளுக்கு அழைப்பு

இலங்கை சுதந்திரக் கட்சியின் கீழ் உள்ள உள்ளூராட்சிமன்ற பிரதானிகள் 275 பேரும், எதிர்வரும் 31 ஆம் திகதி கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை சுதந்திரக் கட்சியின் ஊடக அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவின் தலைமையில் நடைபெறவுள்ள, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்துக்காக அவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

இதன் போது சுதந்திரகட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் சிலர் மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஆராய்ந்து, அதற்கு எதிராக எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பிலும் தீர்மானிக்கப்படவுள்ளது.

அத்துடன் இவ்வாறான குற்றச் செயல்கள் இனி நடைபெறாது தடுப்பது தொடர்பிலும் இதன்போது ஆராயப்படவுள்ளது.

## காட்டுயானை தாக்கி வனவள அதிகாரி மரணம்

(கொழும்பு)

காட்டு யானை தாக்கி இளம் வனவள அதிகாரி உள்ளிட்ட இருவர் பலியாகியுள்ளனர். தனமல்வில வனஜீவராசிகள் அலுவலகத்தில் கடமை புரியும் வனவள அதிகாரி ஒருவர் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார். மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தவேளை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.


யானை தாக்கி பலத்த காயங்களுக்கு உள்ளான அதிகாரி ஹம்பாந்தோட்டை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபின் உயிரிழந்துள்ளார்.

காலி - கின்கொட பகுதியைச் சேர்ந்த 24 வயது இளம் அதிகாரியே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.


இதேவேளை, சிகிரிய - நாயன்வல பகுதியில் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலககாகி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு துவிச்சக்கர வண்டியில் சென்றுகொண்டிருந்த போது இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.









அம்பாந்தோட்டை மாவட்டத்திற்கு உத்தியோகபூர்வ சுற்றுலாவை மேற்கொண்ட கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் சென்ற உத்தியோகத்தர் குழுவினர் உப்பளத்தைப் பார்வையிடுவதையும் மத்தல மஹிந்த ராஜபக்ஸ சர்வதேச விமான நிலையத்தில் அலுவலர் குழாமுடன் நிற்பதையும் கிரிக்கெட் அரங்கைப் பார்வையிடுவதையும் அருகில் மாவட்டச் செயலக கணக்காளர் கில்பேட் குணம அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் சுகுணதாசன் ஆகியோர் இருப்பதையும் காணலாம். (90)

# இந்தியாவின் பிரதமராக மோடி வரவேண்டும்



இந்தியாவின் பிரதமர் பதவிக்கு நரேந்திர மோடி போன்ற தலைவர்கள் தான் வர வேண்டும் என பாலிவுட் நடிகை ஜெயப்பிரதா கூறியுள்ளார். நாடாளுமன்றத் தேர்தலை எதிர் கொள்ள காங்கிரஸ் மற்றும் பாரதீய ஜனதா ஆகிய இரு கட்சிகளும் தீவிரமாக தயாராகி வருகின்றன.பா.ஜ.க.வினர் பிரச்சார பொறுப்பை குஜராத் முதல்வர் நரேந்திர மோடியிடம் ஒப்படைத்துள்ளனர். அவர் பிரச்சாரத்தை புதுமையான முறையில் செயல்படுத்த 12குழுக்களை அமைக்க திட்டமிட்டுள்ளார். தேர்தலில் பிரதமர் வேட்பாளராக நரேந்திர மோடியை முன்னிறுத்த பா.ஜ.க. மூத்த தலைவர்கள் திட்டமிட்டுள்ளனர். ஆனால் இது குறித்து அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படவில்லை என்றாலும் மோடிக்கு ஆதரவு பெருகி வருகின்றது.

இந்நிலையில் பா.ஜ.க. ராஜ்யசபா முன்னாள் எம்.பி.யும், நடிகையுமான ஹேமமாலினி மோடிக்கு தனது ஆதரவினை தெரிவித்துள்ளார்.வாரணாசியில் நடைபெற்ற தனியார் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய ஹேமமாலினி, அமைதியாக இருக்கும் தலைவர்கள் நமக்கு தேவை இல்லை. நரேந்திரமோடி போன்ற தலைவர் தான் இந்தியாவுக்கு தேவை. மேலும் நாட்டின் மேம்பாடு குறித்து மோடி தெளிவான பார்வையுடன் உள்ளார். அவர் சொன்னதை செய்கின்றார். எனவே பிரதமர் பதவிக்கு அவர் தான் மிகவும் பொருத்தமானவர் என கூறியுள்ளார்.

இந்நிலையில் மோடிக்கு வரும் ஆதரவைப் பார்த்து பா.ஜ.க. கூட்டணிக்கட்சியினரும் மோடியை பிரதமர் வேட்பாளராக ஏற்க தயாராகி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

உலகச் செய்திகள்

# வாலியின் உடல் தீயுடன் சங்கமம்



தமிழ் சினிமாவின் பிரபல பாடலாசிரியர் கவிஞர் வாலி காலமானார். அவருக்கு வயது 82 உடல்நலக் குறைவால் சென்னையில் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு கடந்த 18ஆம் திகதி மாலை காலமானார். நேற்று முன்தினம் அவரது இறுதிக் கிரியைகள் இடம்பெற்றது


# வியர்வையிலிருந்து குடிநீர்



கடல்நீரில் இருந்து குடிநீர் தயாரிக்கப்படுவது போன்று வியர்வையில் இருந்து குடிநீர் தயாரிக்கும் வழிவகையும் கண்டறியப்பட்டுள்ளது.அதற்கான எந்திரத்தை சுவீடனின் ஸ்டாக் ஹோமை சேர்ந்த பொறியியலாளர் ஆன்ட்ரஸ் ஹேம்மர் கண்டுபிடித்துள்ளார்.

இந்த எந்திரம் பில்டர் மற்றும் டிரையருடன் கூடிய அதி நவீன தொழில் நுட்பத்துடன் தயாரிக்கப்பட்டுள்ளது.வியர்வையுடன் கூடிய துணிகளை டிரையரில் போட வேண்டும். பின்னர் எந்திரத்தை இயங்க செய்ய வேண்டும்.அவை வாஷிங்மெஷின் போன்று வியர்வை துணியை முறுக்கி பிழியும். அதில் இருந்து வெளியாகும் வியர்வையில் அல்ட்ரா வயலட் கதிர்கள் பாய்ச்சப்பட்டு அதி நவீன பில்டர் மூலம் வடிகட்டப்படுகிறது.இதனால் பாக்டீரியாக்கள் மற்றும் உப்புசத்துகள் அகற்றப்பட்டு குடிநீராக மாறுகிறது.

# மதுரை மீனாட்சிக்கு தீவிரவாதிகளால் ஆபத்து



மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்கு தீவிரவாதிகளால் ஆபத்து ஏற்படும் என்று மத்திய உளவுப்பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்கு வந்த மிரட்டலை தொடர்ந்து கோயிலில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

கோயிலின் நான்கு கோபுர வாசல்களிலும் ஒரு எஸ்ஐ தலைமையில் துப்பாக்கி ஏந்திய பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து கோயிலின் பாதுகாப்பு கருதி பக்தர்கள் கோயிலுக்குள் பைகள் கொண்டு வர அனுமதி இல்லை. அங்குள்ள கடைகளில் பேட்டரிகள், எமர்ஜென்சி விளக்குகள் போன்ற பொருட்கள் விற்கத் தடை செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் தேசிய பாதுகாப்பு படை கமாண்டர் சாஜித்குமார் தலைமையில் 5 பேரும், அதிவிரைவு படை கமாண்டர் ஸ்ரீகுமார் தலைமையில் ஒரு பிரிவினரும் நேற்றுமுன்தினம் கோயிலின் கருவறை, வரைபடம் மற்றும் கடைகள் ஆகியவற்றை சோதனை செய்துள்ளனர்.

பின்பு பாதுகாப்பை அதிகரிப்பது குறித்து கோயில் அதிகாரிகள் மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை செய்ய முடிவு செய்துள்ளனர். இதனைத் தொடர்ந்து திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலின் பாதுகாப்பு குறித்து ஆய்வு செய்ய தேசிய பாதுகாப்பு படையினர் திட்டமிட்டுள்ளனர்.



தமிழ் நாடு சிவகங்கை மாவட்டம், , மடப்புரம் காளி கோயிலில், நேற்று முன்தினம் ஆடி வெள்ளியில் வேண்டுதல் செய்ய வந்த பக்தர்கள் கூட்டத்தில் ஒரு பகுதி

# பிரித்தானியாவில் வெயில் அகோரம் 35 பாகை வரை அதிகரிக்கலாம்



கடந்த சில வாரங்களாக பிரித்தானியாவில் நிலவிவரும் வெயில் 30பாகையை கடந்துள்ளதனால் பெருமளவிலான மக்கள் தமது கோடை காலத்தினை கடற்கரையோரங்களில் கழித்து வருகின்றது.

இந்நிலையில், பிரித்தானியாவில் சில பகுதி வீதிகளில் போடப்பட்டிருந்த தார்கள் உருகியுள்ளதுடன், புற்கள் நிறைந்த சில பகுதிகள் தீப்பற்றி எரிந்துள்ளன.

இரண்டு ஏக்கர் அளவில் படர்ந்திருந்த புற்கள் எரிந்ததனால் 8 தீயணைப்பு வாகனங்களில் வந்த 60 தீயணைப்பு வீரர்களின் உதவியுடன் அத்தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததாகவும் உயிராபத்துக்கள் எதுவும் நிகழவில்லை என பிரித்தானிய வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

2006ம் ஆண்டுக்கு பின்னர் இவ்வாறான அதீத வெப்பம் நிறைந்த காலப்பகுதியாக இவ்வருடத்தை குறிப்பிடக்கூடியதாக இருக்கின்றதாகவும் மேலும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை, புதன்கிழமைகளில் இன்னும் சற்றுக் கூடுதலான வெப்பத்தை (35பகை) உணரக்கூடியதாக இருககும் என பிரித்தானிய வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

# இயக்குநர் சீமானுக்கு பிடியாணை


இந்திய இறையாண்மைக்கு எதிராக பேசிய வழக்கில் நடிகர் சீமானுக்கு' பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது கடந்த 2008ம் ஆண்டு இராமேஸ்வரத்தில நடந்த



இலங்கை தமிழர்களுக்கு ஆதரவான பொதுக் கூட்டத்தில் இயக்குனர் சீமான் கலந்து கொண்டு பங்கேற்றுள்ளார்.

அந்த கூட்டத்தில் இந்திய இறையாண்மைக்கு எதிராக சீமான் உரையாற்றியதாக கூறி க்யூ பிரிவு பொலிசார் வழக்கு பதிவு செய்தனர்.இது தொடர்பான வழக்கு இராமநாதபுரம் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இதனைத் தொடர்ந்து இந்த வழக்கில் சீமான் ஆஜராகி விளககம் அளிக்க நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.ஆனால் சீமான் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. இதனால் சீமானுக்கு பிடி ஆணை பிறப்பித்து நீதிபதி சதாசிவம் உத்தரவிட்டுள்ளார்.

# தள்ளாடும் மதுபான விற்பனை



ஜேர்மனியில் ஏற்பட்ட நிலச்சரிவு காரணமாக மது விற்பனையானது மோசமான விற்பனையை சந்தித்துள்ளது.மதுவின் விலை அதிகரிப்பால் மது ஜாடிகள் அனைத்தும் கலையிழந்து காணப்படுகின்றன. கடந்த ஆண்டை காட்டிலும் இந்த ஆண்டு 5 சதவீதம் மது விற்பனையானது வீழ்ச்சியடைந்துள்ளது.

20 ஆண்டுகளை ஒப்பிட்டு பார்க்கையில் இந்த ஆண்டு மிகவும் மோசமான மது விற்பனை சரிவை சந்தித்துள்ளது என்று டை வெல்ட (Die Welt) பத்திரிக்கையானது தெரிவித்துள்ளது.இந்த ஆண்டு மிகவும் மோசமான நிலச்சரிவு காரணமாக இந்தப் பிரச்சனையை சந்தித்திருக்கிறோம் என்று மைக்கேல் ஹபர் (Michael Huber) கூறியுள்ளார்.

இது குறித்து மதுபான சங்கத்தின் தலைவர் ஹான்ஸ் ஜார்ஜ் எலிஸ் (Hans-Georg Eils) கூறுகையில், கடந்த சில மாதங்களாக ஜேர்மனியில் 1,330 மது வடிப்பகமானது ஈரமான வானிலையால் பாதிககபட்டுள்ளன என்றும் வானிலை என்பது மது விற்பனையாளர்களுக்கு ஒரு சிறந்த விற்பனைப்பிரதிநிதி (Salesman) எனவும்கூறியுள்ளார்.

# பாடசாலைகளில் கட்டாயக் கல்விக்குழு; பூநகரிக் கோட்டத்தில் உதயம்

(முழங்காவில்)

பூநகரி கோட்டத்தின் தென் பகுதியாகிய முழங்காவில் பகுதி பாடசாலைகளில் பாடசாலை மாணவர்கள் நலன்கருதி அப்பகுதி பாடசாலை அதிபர்கள் மற்றும் கிராம அலுவலர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாகிகளை உள்ளடக்கியதாக கட்டாயக் கல்விக்குழு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இக்கல்விக் குழுவினரின் நடவடிக்கையைத் தொடர்ந்து முழங்காவில் பகுதி பாடசாலைகளில் மாணவர் வரவு அதிகரித்துள்ளதோடு பெற்றோரும் பிள்ளைகளின் கல்வியில் நாட்டம்கொண்டு செயற்படுவதை அவதானிக்க முடிகிறது.

பாடசாலை செல்லாத மாணவர்கள் மீதும் மூன்று நாட்களுக்கு மேல் பாடசாலை செல்லாத மாணவர்கள் மீதும் பாடசாலை சமூகத்தின் ஒத்துழைப்போடு இவர்கள் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

பாட்சாலையில் தொடர்ச்சியாக 3 நாட்களுக்கு மேல் வராத மாணவர்களின் பட்டியலை வகுப்பு ரீதியாகப் பெற்று பாடசாலை நிர்வாகத்தினர் கட்டாயக் கல்விக்குழுவுக்கு சமர்ப்பிக்கின்ற நிலையில் அப்பகுதி கிராம அலுவலருடன் கட்டாயக் கல்விக் குழு பிரதிநிதிகள் சம்பந்தப்பட்ட மாணவர்களது இல்லத்துக்கு நேரடியாகச் சென்று மாணவன் பாடசாலைக்கு அனுப்பப்படாததன் காரணம், பிள்ளையின் படிப்பில் பெற்றோரின் கவனமின்மை ஆகியன பற்றி விசாரித்து வருவதால் பாடசாலை வரவில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், பெற்றோர்கள் மாணவர்களின் கல்வி அபிவிருத்தியில் நாட்டம் கொள்வதாகவும் இப்பகுதி கிராம அலுவலர்களில் ஒருவர் தெரிவித்தார். (112)

# பூநகரி பிரதேசத்திற்கு முழுமையான மின்சாரம்

## எப்போது கிடைக்கும்?

(முழங்காவில்)

பூநகரி, நல்லூர், ஆலங்கேணி தெளிவரை ஆகிய கிராமங்களில் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னர் மீளவும் குடியேறிய மக்கள் 'வடக்கின் வசந்தம்' திட்டத்தின் கீழ் தமக்கு மின்சாரம் விரைவாகக் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு தமது வீடுகளுக்கு மின் இணைப்புக்களை பொருத்திய பெரும்பாலான மக்கள் கடந்த 6 மாதங்களாக தமக்கு மின்சாரம் வழங்கப்படாததையிட்டு கேள்வி எழுப்பியுள்ளனர்.

மின்சார சபையில் உரிய படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி மீள ஒப்படைத்தும் தமது வீடுகளுக்கு மின்சாரம் வழங்கப்படாததால் தமது பிள்ளைகள் கல்வியில் பின்தங்கிய நிலையில் இருக்கவேண்டிய அவலம் ஏற்பட்டுள்ளதாக, பெரும்பாலான வீடுகளிலுள்ள பிள்ளைகளில் பலர் கணனிக் கற்கைநெறியை மேற்கொள்கின்ற சந்தர்ப்பத்தில் மின்சாரம் இன்மையால் தமது வீட்டிலிருந்து கணணியை இயக்க முடியாத நிலையில் மின்சாரம் இருக்கின்ற வீடுகளுக்குச் செல்லவேண்டிய அவலநிலை இருப்பதாகத் தெரிவிக்கின்றனர்.

தெளிவரை கிராமத்தில் வாழும் மக்கள் அனைவரும் இந்திய வீட்டுத்திட்டத்தில் வசித்து வருகின்ற நிலையில் அவ்வீட்டுத்திட்டத்திற்கு மின்சாரம் வழங்க முடியாதென தெரிவிப்பதாக குடியிருப்பு வாசிகள் தெரிவிக்கின்றனர்.

இக்கிராமங்களில் மின்வசதி கிடைக்காதவர்களுக்கு மின்சாரத்தைப் பெறுவதற்கு மின்சாரசபை உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (112)

# கிராமிய அபிவிருத்திக்கு புதிய செயற்றிட்டம்

## மாத இறுதியில் கொழும்பில் மாநாடு

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னதாக உள்ளூராட்சி சபைகளின் கிராமிய அபிவிருத்தி நடவடிக்கைகளை முடுக்கிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இதன் முதற்கட்டமாக அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் அனைத்து உள்ளூராட்சித் தலைவர்களுக்குமான விசேட மாநாடு ஒன்று இந்த மாத இறுதியில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

மேற்படி உள்ளூராட்சி சபைத் தலைவர்களை கொழும்புக்கு அழைத்து பேச சிறிலங்கா சுதந்திரக் கட்சி முடிவுசெய்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நிர்வாகத்தின் கீழுள்ள அனைத்து உள்ளூராட்சி சபை தலைவர்களினதும் பங்கேற்பில் இந்த விசேட மாநாடு நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இச்சந்திப்பு இடம்பெறும் என சிறிலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது. நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, எதிர்வரும் 31 ஆம் திகதி அனைத்து உள்ளூராட்சி சபைகளிலும் உள்ள 275 தலைவர்களை கொழும்பிற்கு அழைத்து பேச்சுவார்த்தை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியுள்ள உள்ளூராட்சி சபைத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் தொடர்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கை மற்றும் இவ்வாறான சம்பவங்களை தடுப்பது குறித்து இதன்போது கலந்துரையாடப்படவுள்ளது.

# கள்ள நோட்டுக்களுடன் புதுக்குடியிருப்பில் மூவர் கைது

புதுக்குடியிருப்பு பகுதியில் கள்ள நோட்டுக்கள் வைத்திருந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இவர்களிடமிருந்து இரண்டு போலி 1000 ரூபா நாணயத்தாள்கள் மீட்கப்பட்டுள்ளன. அத்துடன் இவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி என்பனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் இளவாலை மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## திருச்சபையின்...

தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

மேற்படி மனு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நீதியரசர் ஸ்ரீகந்தராஜா முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே பிரதி வாதிகளாக குறிப்பிடப்பட்ட வர்களுக்கு மேற்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. குறித்த மனுவில் காணி அமைச்சர், நில அளவையாளர் மற்றும் வலி வடக்கு, கிழக்கு பகுதிகளில் காணி கையேற்பு சந்தர்ப்பத்தில் கையப்பமிட்ட அதிகாரி உள்ளிட்டோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர். மனுதாரரின் சார்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆஜராகியிருந்தார்.

இதேவேளை, மனுவை பரிசீலித்த நீதியரசர் மேற்படி பிரதேசங்களிலிருந்து மனுவில் குறிப்பிடப்பட்டவாறான காணித் துண்டுகளை கையகப்படுத் தியமை தொடர்பிலும் அவற்றை மீளக் கையளிக்க முடியாமை தொடர்பிலும் அதற்கு ஏதுவாக இருக்கின்ற காரணங்களையும் நீதிமன்றத் திற்கு விளக்க வேண்டுமென பிரதிவாதிகளுக்கு உத்தரவு பிறப்பித்தார்.

அத்துடன், குறித்த மனு மீதான அடுத்தகட்ட விசாரணைகளை ஆகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி வரை ஒத்திவைப்பதாகவும் நீதியரசர் அறிவித்தார்.

## வட்க்கு...

தேர்தல் செயன்முறையில் பங்குபற்றுவதற்கு பிரஜைகளை இணைத்துக் கொள்ளல் எனும் திட்டத்திற்கு ஜப்பானிய அரசாங்கம் 88,677 அமெரிக்க டொலர்களை வழங்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## வடக்கின்...

செய்திகள் தெரிவிக்கின்றன. கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் விவகாரங்களுக்கான அதிகாரி மைக்கேல் இர்வின் அண்மையில் வவுனியா, முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய பகுதிகளுக்கு 3 நாள் பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளை அக்கட்சியின் கிளிநொச்சி செயலகத்தில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

இச்சந்திப்பின் போது வடமாகாணசபைத் தேர்தல், படைத் தரப்பினரால் சுவீகரிக்கப்பட்டுள்ள பொதுக் கட்டடங்கள், தேர்தல் கண்காணிப்பு நட வடிக்கைகள், குடியியல் நிர் வாகத்தில் படைத்தரப்பின் தலையீடு மற்றும் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்களின் பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்கள் குறித்து அவர் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளதாக அரசாங்கத்தின் உயரதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

மாகாணசபைத் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில், இத்தேர்தல் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுடன் அமெரிக்க அதிகாரி கலந்துரையாடல்களை நடத்தி இருப்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் வவுனியாவில் அமைந்துள்ள இறம்பைக்குளம் மகா வித்தியாலயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுடன் இணைந்து பொது அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் ஒன்றிலும் இவர் கலந்து கொண்டுள்ளார்.

## யாழ்ப்பாணத்தில்...

இதன்போது தொழில் வங்கியை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய சிகரம் பணிப்பாளர் கோ.றுஷாங்கன், தனியார் துறையில் காணப்படும் வேலைவாய்ப்புகள் குறித்து தெரிவித்ததுடன், அவற்றைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமைகள் குறித்தும் விளக்கினார்.

அத்துடன், சிகரம் தொழில் வங்கியில் தம்மைப் பதிவு செய்து கொள்பவர்களுக்கு பொருத்தமான தொழில் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கு வழிகாட்டுவதுடன் மட்டுமன்றி அவர்களுக்கான தொழிற் திறன்விருத்திப் பயிற்சிகளும் வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். மேற்படி சிகரம் தொழில் வங்கியில் நேற்று இளைஞர், யுவதிகள் பலர் தம்மைப் பதிவுசெய்துகொண்டனர்.

## யாழில் உட்கடடுமான...

கட்டுமான அபிவிருத்திக்காக 4 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாவும், வேலணை பிரதேசத்திற்கு 3 இலட்சத்து 95 ஆயிரமும், ஊர்காவற்றுறை பிரதேசத்திற்கு 4 இலட்சத்து 50 ஆயிரமும், காரைநகர் பிரதேசத்திற்கு 3 இலட்சமும் சண்டிலிப்பாய், உடுவில் பிரதேசத்திற்கு தலா 1 இலட்சமும், யாழ்ப்பாணம், தெல்லிப்பழை, மருதங்கேணி ஆகிய பிரதேசங்களிற்கு தலா 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், நல்லூர் பிரதேசத்திற்கு 3 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாவும், சங்கானை பிரதேசத்திற்கு 1 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவும், கோப்பாய் பிரதேசத்திற்கு 5 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாவும், சாவகச்சேரி பிரதேசத்திற்கு 4 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாவும், கரவெட்டி பிரதேசத்திற்கு 3 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவும், பருத்தித்துறை பிரதேசத்திற்கு 3 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாவும் என யாழ். மாவட்டத்திற்கு 50 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனுடன், ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின்(உதயன்)னால் நெடுந்தீவுப் பிரதேசத்திற்கு 4 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாவும், வேலணை பிரதேசத்திற்கு 3 இலட்சத்து 95 ஆயிரமும், ஊர்காவற்றுறை பிரதேசத்திற்கு 4 இலட்சத்து 40 ஆயிரமும், காரைநகர் பிரதேசத்திற்கு 3 இலட்சமும் சண்டிலிப்பாய் பிரதேசத்திற்கு 1 இலட்சமும், நல்லூர் பிரதேசத்திற்கு 2 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாவும், சங்கானை பிரதேசத்திற்கு 1 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவும், கோப்பாய் பிரதேசத்திற்கு 5 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாவும், சாவகச்சேரி பிரதேசத்திற்கு 4 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாவும், கரவெட்டி பிரதேசத்திற்கு 3 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாவும், பருத்தித்துறை பிரதேசத்திற்கு 4 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாவும், உடுவில் பிரதேசத்திற்கு 75 ஆயிரமும், தெல்லிப்பழை பிரதேசத்திற்கு 3 இலட்சத்து 25 ஆயிரமும், யாழ்ப்பாணத்திற்கு 3 இலட்சத்து 75 ஆயிரமும், மருதங்கேணிக்கு 3 இலட்சத்து 50 ஆயிரமும் என யாழ் மாவட்டத்திற்கு 50 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரால் சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில் ஆகிய பிரதேசங்களிற்கு தலா 5 இலட்சம் ரூபா வீதம் 15 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள், சமய வழிபாட்டுத் தலங்கள் மற்றும் பல்வேறுபட்ட பொது அமைப்புக்களால் ஈ.பி.டி.பியின் பிரதேச இணைப்பாளர்கள் ஊடாகவும், நேரடியாகவும் தமக்கும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் விடுத்த கோரிக்கைக்கு அமையவே இந்நிதி உட்கட்டுமான புனரமைப்புப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அமைப்பாளர் கமல் மேலும் தெரிவித்துள்ளார்.

## இளைஞர் யுவதிகளுக்கு...

அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் நிதியுதவியுடன் மேற்படி நிலையம் இயங்கி வருகின்றது.

ஏற்கனவே குறித்த இருதுறைகளிலும் பயிற்சிகளை நிறைவு செய்தவர்களுக்கு அமைச்சர் சான்றிதழ்களை வழங்கிவைத்தார்.

நேற்று இடம்பெற்ற இந்த நிகழ்வில் அமைச்சர் உரையாற்றும் போது இந்நிலையத்தை இயங்கும் வகையில் நிதியுதவியை வழங்கி வருகின்ற வவுனியா மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்திற்கும் சிறப்பான கல்விச் சேவையை வழங்கி வரும் நிலையத்திற்கும் அதன் அதிபருக்கும் அமைச்சர் தமது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

இதன்போது வவுனியா மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ரவீந்திரன், மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத் தலைவர் அந்தோனிதாஸ், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் ரகு ஆகியோர் உடனிருந்தனர்.


## ஆலயத்தை...

கனரக வாகனம் பயணித்த வேளையில் பழைய முறிகண்டிப் பகுதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி பிள்ளையார் ஆலயத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஆலயம் முற்றாகச் சேதமடைந்துள்ளது. நேற்று அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் பயணித்த வாகன உதவியாளர் காயமடைந்து கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் குறித்து மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# யதார்த்த அரசியல் முறைமைக்கு பலம் சேர்க்க அணி திரளுங்கள்

## பொதுமக்கள் சந்திப்பில் சந்திரகுமார் எம்.பி. கோரிக்கை



நிகழ்காலத்திற்கு பொருத்தமான அரசியல் நுட்பங்களால் இலக்கை எட்டுகின்ற சக்திமிக்க அரசியல் வழிமுறையை மக்கள் பலப்படுத்தவேண்டும் அதன் பலம் உறுதிப்படுத்தப்படத் தவறுகின்ற சந்தர்ப்பத்தில் அபிவிருத்தியிலும் மக்களின் வாழ்நிலை மேம்பாட்டு செயற்பாட்டிலும் நடைமுறைக்கு மாறான வெறுமை நிலைமை உருவாகுமென என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இத்தாவில் மக்களுடனான கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில், எதிர்கால சந்ததியின் நன்மைகருதி. ஒவ்வொருவரும் நடை முறைக்கு ஒவ்வாத அரசியல் தீர்மானங்களிலிருந்து விலகிநின்றதில்லை நிகழ்காலத்திற்கு பொருததமானதும் தீர்க்க தரிசனமானதுமான அரசியல் முறைமையையும் பலப்படுத்த வேண்டும்

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளிலிருந்து நாம் எப்போதும் விலகிநன்ற தில்லை அபிவிருத்தி செயற்பாடுகள் ஒவ்வொன்றும் ஆரம்பக்கட்டத்திலிருந்தே மேற்கொள்ளப்பட்டு வருவதனால் திட்டங்களை நடைமுறைப்படுத் துவதில் சில காலதாமதங்கள் ஏற்படுவது தவிர்க்கமுடியாதவை.

இத்தாவில் பிரதேசமக்கள் யுத்தத்தின் முழுப்பாதிப்பையும் எதிர் கொண்டவர்கள் என்பதை நாம் அறிவோம் ஆகவே இப்பகுதியின மேம்பாட்டில் நாம் அதிக அக்கறை காட்டிவருகின்றோம் . அதற்கமைவாக தற்போது நிரந்தர வீட்டுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதுடன் இப்பகுதி பாடசாலையினை இருமாடிக்கட்டடத்துடன் சகல வசதிகளையும் உள்ளடக்கியதாக அமைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்தோடு மக்களால கோரப்பட்ட மின்சாரம் உட்பட்ட அனைத்து தேவைகளையும் காலக் கிரமத்தில் நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை நாம்தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றோம் என்றும் தெரிவித்தார்.

# சங்ககார அதிரடி துடுப்பாட்டம் 180 ஓட்டங்களால் இலங்கை வெற்றி




சுற்றுலா தென்னாபிரிக்க அணியுடனான 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரை இலங்கை அணி அமோக வெற்றியுடன் ஆரம்பித்துள்ளது.

கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நேற்று பகலிரவு போட்டியாக இடம்பெற்ற முதல் ஆட்டத்தில் இலங்கை அணி 180 ஓட்டங்களால் அபார வெற்றியீட்டியுள்ளது. நாணய சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்கா இலங்கை அணியை முதலில துடுப்பெடுத்தாட பணித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, குமார் சங்ககாரவின் அதிரடி துடுப்பாட்டத்தின் உதவியுடன் 50 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்களை மாத்திரம் இழந்து 320 ஓட்டங்களைப் பெற்றது.

இலங்கை அணி சார்பில் குமார் சங்கக்கார 169 ஓட்டங்களைப் பெற்றார். மேலும் தரங்க 43, ஜயவர்த்தன 42 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 31.5 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 140 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 180 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது. தென்னாபிரிக்கா சார்பில் துடுப்பாட்டத்தில் எவரும் பெரிதாக பிரகாசிக்கவில்லை.

பந்துவீச்சில் இலங்கை அணியின் பெரேரா, ஹேரத் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், தில்ஷான் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக சங்ககார தெரிவு செய்யப்பட்டார்.

இதன்படி 5 போட்டிகள் கொண்ட தொடரில் 1:0 என்ற கணக்கில் இலங்கை முன்னிலை வகிக்கிறது.

# கோத்தாபய ராஜபக்ஷ உகண்டாவில்

இலங்கை மற்றும் உகண்டா நாடுகளுக்கு இடையிலான பாதுகாப்பு தொடர்புகளை விரிவுப்படுத்தும் நோக்கில், பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ உகண்டாவிற்கு பயணம் மேற்கொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் உகண்டா சென்றடைந்த கோத்தாபயவை, அந்த நாட்டு பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ஜேஜே ஒடோங், எண்டபே விமான நிலையத்தில் வைத்து வரவேற்றார். பாதுகாப்புச் செயலாளர் 5 நாள் அதிகார பூர்வ பயணத்தை மேற்கொண்டு உகண்டா வந்துள்ளதாக அந்த நாட்டுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் வேலுப்பிள்ளை கனநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பாதுகாப்புச் செயலாளர், உகண்டா ஜனாதிபதி முஸேவேனி, படைகளில் தளபதி ஆகியோரை சந்தித்து இரண்டு நாடுகளுக்கு இடையிலான பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பில் பேச்சு நடத்த உள்ளார்.

அத்துடன் முர்ச்சீசன் நீர் வீழ்ச்சி, தேசிய பூங்கா, லுகாஸி சீன கூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்கும் விஜயம் செய்யவுள்ளார். மேலும், உகண்டாவில் முதலீடு செய்வது தொடர்பில் இலங்கையை சேர்ந்த முதலீட்டாளர்கள் பலர் ஆர்வம் கொண்டுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

# அமெரிக்காவின் தெற்காசிய விவகார இராஜாங்க செயலாளராக நிஷாதேசாய்



தெற்கு, மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான அமெரிக்காவின் புதிய உதவி இராஜாங்கச் செயலராக இந்திய வம்சா வழியை சேர்ந்த நிஷா தேசாய் பிஸ்வால் என்ற பெண் நியமிககப்பட்டுள்ளார்.

றொபேட் ஓ பிளேக் வகித்து வந்த இந்தப் பதவிக்கு, நஷா தேசாய் பிஸ்வாலை முன்னிறுத்தும் அறிவிப்பை அதிபர் ஒபாமா வெளியிட்டுள்ளார்.

இந்த நியமனத்துக்கு அமெரிக்க செனெட் ஒப்புதல் அளித்த பின்னர், அவர் முறைப்படி பதவியேற்கவுள்ளார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் வரலாற்றில் தெற்கு மத்திய ஆசிய விவகாரப் பிரிவுக்குப் பொறுப்பான உதவி இராஜாங்க செயலர் பதவியை இதுவரை அமெரிக்காவைப் பூர்வீகமாகக் கொண்டவர்களே வகித்து வந்துள்ளனர்.

நிஷா தேசாய் பிஸ்வால், இந்தியா, பாகிஸ்தான், சிறிலங்கா, பங்களாதேஸ், நேபாளம், மாலைதீவு. பூட்டான், ஆப்கானிஸ்தான், உஸ்பெகிஸ்தான், கசாக்ஸ்தான், கிர்கிஸ்தான், துர்க்மெனிஸ்தான், தஜிகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கான அமெரிக்க கொள்கை மற்றும் உறவுகளுக்குப் பொறுப்பாக இருப்பார்.

தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச்செயலராக உள்ள றொபேட் ஓ பிளேக் இந்தோனேசியாவுக்கான தூதுவராக விரைவில் நியமிக்கப்படவுள்ளார்.



களுவாஞ்சிக்குடி களுதாவளை கடற்பகுதியில் கரைவலை மீன்பிடி ஊடாக பல இலட்சம் பெறுமதியான சூரை மீன்கள் பிடிக்கப்பட்டன. பிடிக்கப்பட்ட மீன்களுடன் மீனவர்கள்

CRICKET AUSTRALIA ECB

# ஆஸஸ் கிண்ணம்

## இரண்டாவது போட்டி மூன்றாம் நாள் ஆட்டம்

முதல் இனிங்ஸ் இங்கிலாந்து 361
அவுஸ்ரேலியா 128
இரண்டாவது இனிங்ஸ்
இங்கிலாந்து 333/5

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 யூலை 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.